Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் – 28 | விலை – 30 ரூபா  செய்தி : 021 493 0000  விளம்பரம் : 021 493 1111

சுடர் :35  கதிர் :35  மார்கழி 15 ஆம் நாள்  செவ்வாய்க்கிழமை  31 டிசெம்பர் 2019  வள்ளுவர் ஆண்டு 2050

கலை வர்த்தகம்
NEC
A/L 2022
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி  மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
ஆரம்பம்:05.01.2020 ஞாயிறு காலை 8.00 மணி
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன
A/L 2019 உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றில் யாழ் மாவட்டத்தில் முன்னணி பெறுபேறுகளுடன்...
A/L DAY CLASS NEC
ஆரம்பம்: 02.01.2020 வியாழன் காலை 9.00 மணி

# சிங்களத் தேசிய கீதம்: இன்னும் முடிவில்லை!





## ஜனாதிபதியும், பிரதமரும் "கோரஸ்"

கொழும்பு, டிசெ.31

இலங்கையின் 72ஆவது சுதந்திர தின நிகழ்வில் தேசிய கீதத்தைத் தமிழ் மொழியில் பாடுவதற்குத் தடை விதிப்பது தொடர்பாக அரசு இன்னமும் தீர்மானம் எடுக்கவில்லை என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் மகிந்த ராஜபக்ச ஆகியோர் தெரிவித்துள்ளனர். 23



## ராஜித வெளியே!

கொழும்பு, டிசெ.31

ஊடக சந்திப்பு ஒன்றை நடத்தியமை தொடர்பான வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டி 05

## தூதரகப் பெண்ணுக்கும் பிணை!

கொழும்பு, டிசெ.31

கொழும்பில் பட்டப்பகலில் வெள்ளைக் காரில் கடத்தப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு அச்சுறுத்தப்பட்டார் எனக் கூறப்படும் சுவிஸ் தூதரகத்தின் பெண் அதிகாரி 03

## உறக்கத்தில் உயிரை விட்ட இளம் மீனவர்

யாழ்ப்பாணம், டிசெ.31

பருத்தித்துறை, இன்பர்சிட்டியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தை ஒருவர் உறக்கத்தில் உயிரிழந்துள்ளார். அதே இடத்தைச் சேர்ந்த த.தர்சன் (வயது-24) என்பவரே 03

## உறவுகளைத் தேடி தொடர்கிறது தவம்

கொழும்பு, டிசெ.31

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் நேற்றுக் கிளிநொச்சி யில் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப் பட்டது. இரு ஆண்டுக ளுக்கு மேலாகப் போராட்டம் மேற்கொண்டுவரும் காணாமல் ஆக்கப் பட்ட வர்க 23



# டக்ளஸுக்கு செருப்படி!




வவுனியா, டிசெ.31

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் நேற்று வவுனியாவில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் ஈ.பி.டி.பி கட்சியின் செயலாளர் நாயகமும், மீன்பிடித்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் உருவப்படத்துக்கு சாணி தெளித்து, செருப் 03

## 31 லட்சத்தை விழுங்கிய 2 1/2 கோடி பேராசை!

### பருத்தித்துறைக் குடும்பம் பறிகொடுத்த பின் முறைப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ.31

தொலைபேசிக்கு வந்த குறுந்தகவலை நம்பி 31 லட்சம் ரூபாவை இழந்துள்ளது பருத்தித்துறையைச் சேர்ந்த குடும்பம் ஒன்று. பணத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் ஏமாற்றிச் சென்ற பின்னரே, பணத்தை இழந்தவர் 23



## ஆர்ப்பாட்டம் முடிய ஏற்பாட்டாளருக்கு அடி

வவுனியா, டிசெ.31

வவுனியா காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சங்கத்தின் இணைப்பாளர் கோ. ராஜ்குமார் மீது நேற்றுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஈ.பி.டி.பியைச் சேர்ந்தவர்களே தன் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று அவர் குற் 03

### முச்சந்தி முரளி



வச்ர குறி தப்பாதடி மச்சான் மனம் மாறாதடி....!

## கிணற்றுக்குள் குழந்தை உடல்

வவுனியா, டிசெ.31

வவுனியா, ஈச்சங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்மிவைத்தான் கிராமத்தில் ஒரு வயதுப் பெண் குழந்தையின் சடலம் ஒன்று கிணற்றுக்குள் இருந்து மீட்கப்பட்டுள்ளது. நாகேந்திரராஜா சிமியா என்ற குழந்தையே 23



## அடுத்த குறி ரிசாத்?

கொழும்பு, டிசெ.31

அகில இலங்கை மக்கள் காங்கிர 05

## வடக்கின் புதிய ஆளுநர் நேற்றுப் பதவியேற்பு



யாழ்ப்பாணம், டிசெ.31

வடக்கு மாகாண ஆளுநராக, இலங்கை நிர்வாக சேவை மூத்த அதிகாரி பி.எஸ்.எம். சாள்ஸ் நேற்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முன்னிலை 23

## தொடர் கொள்ளைகள் குடாநாடு கலக்கத்தில்!

### அச்சுவேலியில் நேற்று 45 பவுண் "அபேஸ்"

யாழ்ப்பாணம், டிசெ.31

கடந்த சில தினங்களாக குடாநாட்டில் கொள்ளையர்களின் அட்டகாசம் தொடர்கதையாகி உள்ள 23



# வவுனியாவில் பேருந்து விபத்து 10 பேர் காயம்

வவுனியா.டிச.31
வவுனியாவில் தனியார் பேருந்து கட்டுப்பாட்டையிழந்து விபத்துக்குள்ளானதில், அதில் பயணித்த 10 பேர் காயமடைந்து வவுனியா பொதுமருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
வவுனியா ஈரப்பெரியகுளத்தில் நேற்று முன்தினம் அதிகாலை 4 மணியளவில் விபத்து இடம்பெற்றது.
தங்காலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது விபத்து இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.
4 இராணுவத்தினர் உட்பட 10பேர் காயமடைந்துள்ளனர். ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.
ஈரப்பெரியகுளம் பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர். (த-110)

# இல்லத்தை இழக்கிறாரா சம்பந்தன்?



கொழும்பு, டிசெ. 31
**முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தங்கியிருக்கும் தனது உத்தியோகபூர்வ இல்லத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இருக்கும்வரை பயன்படுத்த கடந்த அரசு அனுமதி வழங்கியிருந்த நிலையில் அவரிடம் இருந்து குறித்த இல்லத்தைத் திரும்பப் பெறுவதற்கு தற்போதைய அரசு முனைப்புக் காட்டுகின்றதா என்று கேள்வி எழுந்துள்ளது.**

அந்தவகையில் கொழும்பு 7, மகாகமசேகர மாவத்தையில் உள்ள பி12 இல் இருக்கும் உத்தியோகபூர்வ குடியிருப்பை அவருக்கு வழங்க கடந்த அரசின் அமைச்சரவை முடிவு செய்தது. அதன்படி பின்னர், நாடாளுமன்ற விவகார அமைச்சர் கயந்த கருணாதிலக, இந்த ஆண்டு பெப்ரவரி 26ஆம் திகதியன்று அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பித்திருந்தார், அதில் இரா.சம்பந்தன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இருக்கும் வரை இந்த வீட்டைப் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.
ஒன்றரை ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள குறித்த குடியிருப்பின் பராமரிப்பிற்காக ஐந்து தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு நாடாளுமன்ற விவகார அமைச்சின் மூலம் பணம் செலுத்தப்படுகின்றது.
அதுமட்டுமன்றி கடந்த 2017ஆம் ஆண்டு குறித்த கட்டடத்தை புதுப்பிப்பதற்கு சுமார் மூன்றரைக் கோடி ரூபா செலவிப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.
மேலும் சபாநாயகர் கரு ஜயசூரியவின் வேண்டுகோளின் பேரில் அமைச்சரவை பத்திரம் முன்வைக்கப்பட்டதுடன் இரண்டு வாகனங்கள் மற்றும் 600 லீட்டர் எரிபொருள் ஒதுக்கீட்டை ஒதுக்கவும் அதே அமைச்சரவை பத்திரத்தின் ஊடாக அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட்டது.
இந்த நிலையில் தற்போதைய அரசின் அமைச்சர்கள் ஓய்வுபெற்ற ஜனாதிபதிகள் மற்றும் அவர்களது மனைவிகளுக்கு வீடுகளை வழங்க முடிவு செய்துள்ளனர். ஆனால் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு வழங்குவது குறித்து எந்த அறிவிப்பும் வெளியாகவில்லை.
எனவே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வசித்துவரும் இல்லம் குறித்து தற்போது கேள்வியெழுந்துள்ளது. (ம)

## விருது வழங்கல்

கிளிநொச்சி.டிசெ.31
தொழில் பயிற்சி அதிகார சபையின் கிளிநொச்சி தொழில் பயிற்சி நிறுவனத்தின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப மாணவர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.
கிளிநொச்சி கூட்டுறவு சபை கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டார்.
மேலும் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலர், தொழில் பயிற்சி அதிகார சபை அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஜ-6)

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

அளவெட்டி.டிச.31.
அளவெட்டி தெற்கு ஜே/219 கிராமசேவையாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்றுமுன்தினம் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
கிராம சேவையாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர், கலைவாணி சனசமூக நிலைய நிர்வாகிகள் ஊர்மக்கள் அனைவரும் சேர்ந்து டெங்கு ஒழிப்புநடவடிக்கையில் ஈடுபட்டனர். (ஜ-36)

# சட்டவிரோத மீன்பிடி; 7 பேர் கைதாகினர்!

கொழும்பு. டிசெ. 31
அம்பலாங்கொடை பிரதேச கடற்பரப்பில் சட்டவிரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபட்ட 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கடற்படை மற்றும் கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம் இணைந்து நடத்திய சுற்றிவளைப்பின் போதே இந்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது சட்டவிரோதமான முறையில் மின்குமிழ் வெளிச்சத்தை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட பயன்படுத்திய நான்கு படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.
கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் அம்பலாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது. (ம)





அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியாவில் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். டக்ளஸ் தேவானந்தாவின் படத்துக்கு சாணி வீசியதுடன் விளக்குமாறு, தும்புத்தடியால் அடித்து எச்சில் துப்பி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். (க-ரி4,110)






# சி.வை.தாவின் நினைவாலய திறப்பும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், டிசெ. 31
சி.வை.தாமோதரம்பிள்ளையின் 120ஆவது ஆண்டில் நினைவாலயத் திறப்பும் பரிசளிப்பும் நாளை புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஏழாலை மகா வித்தியாலயத்தில், வித்தியாலய அதிபர் வே.உதயமோகன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வலி. தெற்குப் பிரதேச செயலர் சி. ஜெயகாந் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக மக்கள் வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் சி.மோகனச்செல்வன், யாழ்.பல்கலைக்கழக இந்து கற்கைக் பீட சைவ சித்தாந்த்துறை விரிவுரையாளர்தி.செல்வமனோகரன், மருத்துவர் த.திலீபன், கோப்பாய் கல்வியியற் கல்லூரியின் முன்னாள் விரிவுரையாளர் மு.கௌரிகாந்தன் நாடாளுமன்ற முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரின் செயலர் இ.பேரின்பநாயகம் ஆகியோர் கலந்து கொள்வர்.

மாலை நிகழ்வுகள் அங்குள்ள கண்ணகை அம்பாள் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக வலி.தெற்குப் பிரதேச சபைத் தவிசாளர் க.தர்சன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். சைவ மகாஜன வித்தியாலய அதிபர் திருமதி தேவகி புவனேஸ்வரன், பிரதேச செயலக கலாசார அலுவலர் பொன்.சந்திரவேல் ஆகியோர் கலந்து கொள்வர். (த)

# வேண்டாம் கறுப்பு ஜூலை

கொழும்பு, டிசெ.31
தமிழில் தேசிய கீதம் பாடுவது தொடர்பாக அரசு அனைத்துத் தரப்பினருடன் கலந்துரையாடி பொதுவான இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். அதைவிடுத்து விட்டு அமைச்சர்களோ, அரசியல்வாதிகளோ இது தொடர்பாக தேவையற்ற கருத்துக்களை ஊடகங்களுக்குத் தெரிவிப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டும். இந்தப் பிரச்சினையைப் பெரிதாக்கி மீண்டுமொரு கறுப்பு ஜூலையை ஏற்படுத்த வேண்டாம்.

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ் கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான டியூ குணசேகர தெரிவித்தார்.

சோசலிச மக்கள் முன்னணி கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது நாட்டில் இடம்பெறும் சாதாரண பிரச்சினைகளும் அரசியலாகும் நிலையே தற்போது இடம் பெறுகின்றது. ராஜித சேனாரத்ன மற்றும் சம்பிக்க ரணவக்க ஆகியோரின் நடவடிக்கைகள் தொடர்பாக பொலிஸார், சட்டமா அதிபர் மற்றும் நீதிமன்றம் தங்களது கடமையைச் செய்வதற்கு விட்டுவிட்டு அரசியல்வாதிகள் அது தொடர்பில் மௌனமாக இருக்கவேண்டும். ஆனால், இன்று அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் ஊடகக் களியாட்டமே இடம்பெறுகின்றது. அதனால்தான் சாதாரண விடயங்களும் அரசியலாக மாறுகின்றன. நாட்டில் இடம்பெறும் இவ்வாறான சம்பவங்களை அரசியலாக்கி நாட்டின் ஏனைய பிரச்சினைகளை மூடிமறைக்கும் நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன. அதற்குப் பின்னர் உள்நாட்டு, வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் இருக்கின்றனர். இவர்கள் புதிய பிரச்சினைகளை உருவாக்குவார்கள். அந்தவகையில் தற்போது நாட்டில் எழுந்திருக்கும் பிரச்சினைதான் தமிழில் தேசிய கீதம் பாடுவது தொடர்பான சர்ச்சையாகும்

இந்த விடயத்தை சாதாரண விடயமாக யாரும் கருதிவிடக்கூடாது. மிகவும் அமைதியான முறையில் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டிய விடயமாகும். அமைச்சர்களோ, அரசியல்வாதிகளோ இது தொடர்பாக தேவையற்ற கருத்துக்களை ஊடகங்களுக்குத் தெரிவிப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டும். இந்தப் பிரச்சினையைப் பெரிதாக்கி மீண்டுமொரு கறுப்பு ஜூலையை ஏற்படுத்த வேண்டாம் என்றார். (எ22)

## தூதரகப்...

கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தால் நேற்றுக் கடும் நிபந்தனைகளுடன் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

பொய்யான சாட்சியம் அளித்து அரசுக்கு அவப்பெயரை ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய கடந்த 16 ஆம் திகதி குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். அவர் கைதுசெய்யப்படுவதற்கு முன்னர், கடத்தப்பட்டமை தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் அவரிடம் நீண்ட வாக்குமூலத்தைப் பெற்றிருந்தனர்.

அந்த சுவிஸ் தூதரகப் பெண் அதிகாரியின் மன நலம் தொடர்பில் பரிசோதித்து அறிக்கை ஒன்றைப் பெற்றுக் கொள்ளுமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. அவர் அங்கொடையில் உள்ள மனநல வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

அதன்பின்னர் அவரைச் சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு சட்டமா அதிபர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகளுகளுக்கு ஆலோசனை வழங்கியிருந்தார்.

அதற்கமைய சுவிஸ் தூதரகத்தின் பெண் அதிகாரி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் வாக்குமூலம் வழங்கியபோது கடந்த 16ஆம் திகதி கைதுசெய்யப்பட்டார்.

அன்று அவர் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது 30ஆம் திகதி (நேற்று) வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. அதையடுத்து அவர் வெலிக்கடைச் சிறைச்சாலையின் பெண்கள் பிரிவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

அவரது விளக்கமறியல் காலம் முடிவடைந்த நிலையில், நேற்று அவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணைகளில் செல்ல நீதிவான் அனுமதி வழங்கினார்.

அவரின் நிரந்தர இருப்பிடத்தை உறுதி செய்யும் கிராம அதிகாரியின் சான்றிதழையும், பிணையாளர்கள் இருவரினதும் வசிப்பிடத்தை உறுதி செய்யும் கிராம அதிகாரியின் சான்றிதழையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

அவர் தான் வசிக்கும் நிரந்தர முகவரியை நீதிமன்றத்துக்கு அறிவிக்காது மாற்றத்தை ஏற்படுத்த முடியாது எனவும் நீதிவான் தெரிவித்தார். அவருக்கு வெளிநாடு செல்லவும் தடை விதித்த நீதிவான், அவருடைய கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார்.

இவரது கைது நடவடிக்கையால் இலங்கை - சுவிஸ் அரசுகளுக்கிடையில் முறுகல் நிலை ஏற்பட்டிருந்தது. (எ-22)

## டக்ளஸூக்கு...

பால் அடித்து தமது கோபத்தை ஆர்ப்பாட்டக்காரர்கள் வெளிப்படுத்தினர் .

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுடன் இன்று வவுனியாவில் சந்திப்புக்கள் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவித்திருந்திருந்த நிலையில் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே வவுனியா வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்று எவரும் இல்லை என்று கருத்துத் தெரிவித்திருந்தார். அவரது அமைச்சில் அங்கம் வகிக்கும் வாசுதேவ நாணயக்காரவும் இவ்வாறான கருத்தை வெளிப்படுத்தியிருக்கின்றார். அந்த அரசில் அங்கம் வகித்துக் கொண்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எம்மைச் சந்திக்கும் அவசியம் இல்லை என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், "தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்த போர்க் குற்றவாளி தன்னெழுச்சி மக்கள் போராட்டங்களைக் காட்டிக் கொடுக்க வந்துவிட்டான். ஐ.நாவே ஓநாயை உடனடியாகக் கைது செய் உண்மைகள் வெளிவரும்" என்ற வாசகங்கள் அடங்கிய பதாகையை ஏந்தியிருந்தனர். அதன் பின்னர் அந்தப் பதாகையில் இருந்த டக்ளஸ் தேவானந்தாவின் உருவப்படத்துக்கு சாணித் தண்ணீரால் ஊற்றி, செருப்பு, விளக்குமாறு என்பவற்றால் அடித்தும் தம் ஆத்திரத்தை வெளிப்படுத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-110)

## ஆர்ப்பாட்டம்...

றஞ் சுமத்தியுள்ளார். இது தொடர்பாக அவர் வவுனியா பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடுமையாக விமர்சிக்கப்பட்டிருந்ததுடன், அவரது படத்துக்கு செருப்படியும் நடத்தப்பட்டிருந்தது.

ஆர்ப்பாட்டம் முடிந்த பின்னர் சங்கத்தின் இணைப்பாளர் அங்கிருந்து புறப்பட்டு சூசைப்பிள்ளையார் குளம் பகுதியில் உள்ள கடை ஒன்றுக்குச் சென்றுள்ளார். அப்போதே அவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள அவர், வவுனியா பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இது தொடர்பாக ஈ.பி.டி.பி யின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் கு.திலீபனிடம் கேட்டபோது, இந்தத் தாக்குதல் சம்பவத்தில் தமது கட்சியை சார்ந்த உறுப்பினர்கள் தொடர்பு படவில்லை என தெரிவித்தார்.

எனினும், முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் நேற்று மாலை ஈ.பி.டி.பி யின் வவுனியா மாவட்ட அமைப்பாளரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டனர். (எ-110)

## உறக்கத்தில்...

உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஆழ்கடலுக்குத் தொழிலுக்குச் சென்ற இவர், வீடு திரும்பி இரவு உறக்கத்துக்குச் சென்றுள்ளார். நேற்றுக் காலை அவர் அசைவற்றிருந்த நிலையில், குடும்பத்தினர் அவரைப் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றுள்ளனர். மருத்துவர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று தெரிவித்துள்ளனர்.

உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (எ-26,173)


மரண அறிவித்தல்

செல்வி அப்புக்குட்டி பாக்கியம்



சாந்தா வீதி, தையிட்டி, காங்கேசன் துறையை பிறப்பிடமாகவும் 4ஆம் மைல் K.K.S, வீதி, கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி அப்புக்குட்டி பாக்கியம் நேற்று (30.12.2019) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி செல்லம் தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்பு சகோதரியும் காலஞ்சென்ற சின்னத்துரையின் மைத்துனியும் தர்மலிங்கம், சியாமளா தேவி, தேவதாஸன், நிர்மலாதேவி, தெய்வேந்திரம், தயாபரி ஆகியோரின் அன்பு சிறியதாயும் அனுயா, சுனித்தா, காயத்திரி, கோபிநாத், கேஜிகா, நிமல்ராஜ், கீர்த்திராஜ், நிகாயினி, தசாத்மன் ஆகியோரின் பேர்த்தியும் அயீஸ், அனீஸ், லிபீஸன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2019) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 1.00 மணிக்கு தகனக் கிரியைக்காக பூதவுடல் தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

4ம் மைல், K.K.S. வீதி
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்

தகவல்: குடும்பத்தினர்
077 358 9950





மரண அறிவித்தல்

நாமகள் சண்முகநாதன்

யாழ். வேலணையைப் பிறப்பிடமாகவும், நோர்வேயை வதிவிடமாகவும் கொண்ட நாமகள் சண்முகநாதன் 24-12-2019 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (30-12-2019) திங்கட்கிழமை நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

அருள்நிதி இராதாகிருஷ்ணன் - மகள் Mobile +4799208133
விமலன் சண்முகநாதன் - மகன் Mobile +4799564057
திருமகள் கேதாரநாதன் - தங்கை Phone +61296594631

# 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி
# 05 ஆம் ஆண்டு நினைவஞ்சலி





**சேனாதிராசா தயாளன்**

பிறப்பு 10.05.1960 இறப்பு 28.12.2008

**சின்னையா சேனாதிராசா**

பிறப்பு 14.08.1926 இறப்பு 26.12.2014

எங்கள் இனிய தெய்வங்களே
இப்பாரினில் இருந்து
நீங்கள் பிரிந்து பல வருடங்கள் ஆகிறது
எங்கள் உயிர் இருக்கும் வரை

எங்களுடன் நீங்கள் என்றும்
இருக்கின்றீர்கள்- எங்கள் வாழ்வில்
நீங்கள் ஏற்றிவைத்த தீபம்
என்றும் பிரகாசமாக
ஒளி வீசிக் கொண்டே இருக்கும்.

**நீர்வேலி வடக்கு,**
**நீர்வேலி**

**குடும்பத்தினர்**

## கேள்வி அறிவித்தல்
## வலி கிழக்கு பிரதேச சபை புத்தூர்
## சபை நிதி - 2019

01. வலிகாமம் கிழக்கு பிரதேச சபை. சபை நிதியினைக் கொண்டு கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத் திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
02. தலைவர், பெறுகைக்குழு. வலிகாமம் கிழக்கு பிரதேச சபை. புத்தூர். வடமாகாணம் அவர்கள் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரசுக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு கட்டிடப்புனரமைப்பு வேலைகளுக்கு கோருகின்றார்.
03. தேசியபோட்டி விலைக்கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
04. விலைமனு கேள்வியாளர்கள் நிர்மாணதொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA)பதிவு மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன். வீதிபுனரமைப்புக்கு பொருத்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை அல்லது அதற்குமேல் ஒரு தரத்தினை கொண்டிருக்க வேண்டும்.
05. பொதுநிதிச் சுற்றறிக்கை 04/2016(I) இற்கமைவாக வடமாகாணத்தில் தகுதியுடைய வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளைக் கொண்டுள்ளதும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டிட அமைப்புக்கான இக்ராட் (ICTAD) பதிவுள்ளவராகவும் கறுப்புப் பட்டியலில் (Black List) பெயரிடப்படாததுமான கேள்வியாளர்களுக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதுமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
06. தேவையான தகைமைகள். கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தவிசாளர். வலிகாமம் கிழக்கு பிரதேச சபை. புத்தூர் (தொலைபேசி இல.0212058987 பக்ஸ் இல 0212058866 e.mail – secveps@yahoo.com)இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 2020.01.20 ஆம் திகதி வரை மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 12.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
08. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணத்தை தவிசாளர் /செயலாளர். வலிகாமம் கிழக்கு பிரதேச சபை. பருத்தித்துறை வீதி. புத்தூர் எனும் இடத்திலிருந்து 2019.12.31 ஆம் திகதியிலிருந்து 2020.01.20 ஆம் திகதிவரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/-(வரி நீங்கலாக)செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
09. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர் / செயலாளர். வலிகாமம் கிழக்கு பிரதேச சபை. பருத்தித்துறை வீதி. புத்தூர் எனும் முகவரிக்கு 2020.01.21 ஆம் திகதி மாலை 14.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது. கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர். அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
10. கேள்வி செல்லுபடியாகும் காலம். கேள்விப் பிணை வைப்புத் தொகை தொடர்பாக கீழே அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளது.
11. கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் எமது அலுவலக மாநாட்டு மண்டபத்தில் 2020.01.07 ஆம் திகதி பி.ப 14.30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தங்களது சொந்த செலவில் கலந்துகொள்ள முடியும்.
12. மேற்படி கேள்வி கோரல் தொடர்பில் வலி கிழக்கு பிரதேச சபையின் பெறுகை குழுவின் முடிவே இறுதியானது- பெறுகை குழுவின் முடிவு தொடர்பில் முறைப்பாடுகள் ஏதும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (Rs.)Min | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு(Rs) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(13)/2/Council/PII/01/2019 | ஞானவைரவர் கோவில் வீதி திருத்தம், சிறுப்பிட்டி | 2.63 | 03 மாதம் | C8 & C7 | 26,300.00 | 63 நாட்கள் (2020.03.23) |
| NP/14/41(13)/2/Council/PII/02/2019 | கொங்கீறிற்றினாலான பெயர்க்கற்றூண் அமைத்தல் **(வலிகாமம் கிழக்கு வரவேற்கின்றது)** | 1.42 | 02 மாதம் | C9 & C8 | 14,270.00 | 63 நாட்கள் (2020.03.23) |
| NP/14/41(13)/2/Council/PII/03/2019 | வாய்க்கால் அமைத்தல், பைத்தோலை, அச்சுவேலி | 1.26 | 02 மாதம் | C9 & C8 | 12,650.00 | 63 நாட்கள் (2020.03.23) |
| NP/14/41(13)/2/Council/PII/04/2019 | முன்பள்ளி அமைத்தல், இருபாலை கிழக்கு | 4.15 | 03 மாதம் | C8 & C7 | 41,500.00 | 63 நாட்கள் (2020.03.23) |
| NP/14/41(13)/2/Council/PII/05/2019 | கிந்துசிட்டி மாதிரி கிராம வீதி திருத்தம், புத்தூர் | 0.93 | 01 மாதம் | C10 & C9 | 9,500.00 | 63 நாட்கள் (2020.03.23) |
| NP/14/41(13)/2/Council/PII/06/2019 | கபடி ஒழுங்கை திருத்தம், ஊரெழு | 0.36 | 01 மாதம் | C10 & C9 | 9,500.00 | 63 நாட்கள் (2020.03.23) |
| NP/14/41(13)/2/Council/PII/07/2019 | கஜமுகன் முன்பள்ளி திருத்தம், அச்சுவேலி | 0.92 | 01 மாதம் | C10 & C9 | 3,750.00 | 63 நாட்கள் (2020.03.23) |

**தலைவர்,**
**பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்**

## சைக்கிள் கையளிப்பு



அளவெட்டி.டிசெ.31
மட்டுவில் கிழக்கு சனசமூக நிலையத்தால் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவி ஒருவருக்கு துவிச்சக்கரவண்டி அண்மையில் வழங்கப்பட்டது.
இதற்கான நிதியுதவியைபுலம்பெயர்ந்துசுவிசில் வசிக்கும் மேற்படிசனசமுக நிலைய உறுப்பினர்ஒருவர்வழங்கியிருந்தார்.(ஐ36)

## 31 ஆம் நாள் இதய அஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### பெருமாள் இராசமணி

**தோற்றம்** 05.12.1941 **மறைவு** 01.12.2019

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (31.12.2019) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

நீர்வேலி மேற்கு, நீர்வேலி — குடும்பத்தினர்

## ஆறாத்துயரில் ஆண்டு ஒன்று

**ஆண்டாண்டு தோறும் எத்தனை யுகம் போனாலும் அம்மாவின் உறவும் அன்பும் இனிக் கிடையாது**

### திருமதி சிவலோகநாயகி சதாசிவம்



**அன்னையின் மடியில் 02.10.1931**
**ஆண்டவன் அடியில் 11.01.2019**

உங்களைக் காண தவம் கிடக்கின்ற
என் கண்களுக்கும்
உங்களுடன் பேசுவதற்கு தவிக்கின்ற
என் நாவிற்கும்
உங்கள் குரல் கேட்கத் துடிக்கின்ற
என் காதுகளுக்கும்
உங்களை நினைத்து உங்களுக்காக ஏங்குகின்ற
என் இதயத்திற்கும்
எப்போது மீண்டும் மண்ணில் பிறந்து என் பேர்த்தியாக வந்து தவழ்ந்து ஆறுதல் தருவீர்கள் என்று ஆண்டவனை வேண்டி ஏங்கி நிற்கின்றேன்.

"சிவபதி" , மூத்ததம்பியார் வளவு,
நெல்லியடி, கரவெட்டி

மகள் சி.சிவரஞ்சனி,
(ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர்,
ஆரம்ப பிரிவு, வடமராட்சி)

## மரண அறிவித்தல்

### திருமதி லோகநாதன் புவனேஸ்வரி



பருத்தித்துறையை பிறப்பிடமாகவும், அரியாலையை வசிப்பிடமாவும் கொண்ட திருமதி லோகநாதன் புவனேஸ்வரி நேற்று **(30.12.2019)** திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கதிராமு- கதிராசி தம்பதியின் அன்பு மகளும் இராமு - பாக்கியம் தம்பதியின் பாசமிகு மருமகளும் லோகநாதனின் பாசமிகு மனைவியும் யாழினி. விஜிதன் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர். மாகாண விவசாயத் திணைக்களம்). உலோஜினி (தாதிய உதவியாளர்- STS வைத்திய சாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ரவீந்திரனின் பாசமிகு மாமியாரும் பிரியதர்சன், டிதர்சன், லிபுஷன், இலக்சுமன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம், பாலசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் நாகம்மா, மரகதம், காலஞ்சென்ற மார்க்கண்டு மற்றும் சுப்பையா, துரைராஜா, சோதிநாதன், வசந்தராணி, காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(31.12.2019)** செவ்வாய்க்கிழமை பகல் **1.00** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சித்துப்பாத்தி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.261/1, கண்டி வீதி,**
**அரியாலை, யாழ்ப்பாணம்.**

**தகவல்:-**
**குடும்பத்தினர்.**

**தொடர்பு:- 075 074 0025, 077 718 1976**

வடக்கில் முன்னணியில் திகழும் கிறீன்கிறாஸ் ஹோட்டலில் உடனடி

## வேலைவாய்ப்பு

காசாளர் - Cashier
சுத்திகரிப்பாளர் - Cleaner
பாத்திரம் சுத்தப்படுத்துபவர் - Dish Washer

கவர்ச்சிகரமான சம்பளத்துடன் தங்குமிடம் மற்றும் உணவு இலவசமாக வழங்கப்படும்

இல 33,ஆசீர்வாதம் லேன்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
greengrassjaffna@gmail.com

தகுதியுடையவர்கள் எதிர்வரும் 10.01.2020 செவ்வாய்க்கிழமைக்குள் நேர்முகத் தேர்வுக்கு சமுகம் தரவும்

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**FACULTY OF ALLIED HEALTH SCIENCES**
**WALK-IN INTERVIEW**

Walk –in Interview for the post of Temporary Demonstrator will be held on 13.01.2020 at 10.00 a.m at the Board room of the Faculty of Medicine, University of Jaffna.

**Temporary Demonstrator**
**in**
**Medical Laboratory Sciences, Nursing and Pharmacy**

**Qualifications:-**

A Degree in the relevant subject.

**SALARY SCALE** – Rs.40,920/= p.m (fixed)

In addition to the above salary, the allowances approved by University Grants Commission will also be paid.

Candidates are requested to appear with relevant certificates, National Identity Card and self-prepared applications.

**Registrar,**
**University of Jaffna.**

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபர் **சு.விவேகானந்தன்**
அவர்களின் பாசமிகு மாமியார்

**திருமதி செல்லம்மா பரராஜசிங்கம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

CS30281/15/17

**ஆசிரியர்கள், மாணவர்கள்**
**யா/கோப்பாய் தெற்கு கந்தவேள் த.க.பாடசாலை**

## மரண அறிவித்தல்

**சிவஸ்ரீ பரமசாமி ஐயர்**
**சண்முகசுந்தரக்குருக்கள்**
**(அச்சரம் ஐயா)**

அளவெட்டி பெருமாக்கடவையை பிறப்பிடமாகவும் தம்மளையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ பரமசாமி ஐயர் சண்முகசுந்தரக்குருக்கள் (அச்சரம் ஐயா) நேற்று (30.12.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2019) செவ்வாய்க்கிழமை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் தம்மளை இந்துமயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 986 3272
தகவல்:
ச.கண்ணன் குருக்கள் (மகன்)

### ராஜித...

ருந்த முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்னவுக்கு நேற்றுப் பிணை வழங்கப்பட்டது.

கடந்த நவம்பர் மாதம் 10ஆம் திகதி ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி வெள்ளை வான் கடத்தல் தொடர்பில் போலியான தகவல்களை முன்வைத்தார் எனக் குற்றம்சாட்டி ராஜித சேனாரத்னவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

ராஜித சேனாரத்ன திடீர் சுகவீனம் காரணமாக கொழும்பு, நாரஹேன்பிட்டியிலுள்ள தனியார் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

முன்னாள் அமைச்சரின் உடல் நிலை குறித்து அறிவதற்காக, கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தின் மேலதிக நீதிவான் அன்று மாலை, நாரஹேன்பிட்டியிலுள்ள தனியார் வைத்தியசாலைக்குச் சென்றிருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினரை நேற்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு கட்டளை பிறப்பித்திருந்த மேலதிக நீதிவான், சிறைச்சாலை அதிகாரிகளின் பொறுப்பின் கீழ் அவருக்கு சிகிச்சையளிக்குமாறும் உத்தரவிட்டிருந்தார்.

சிறைச்சாலை வைத்தியசாலையின் பிரதான வைத்திய அதிகாரி வழங்கிய பரிந்துரை மற்றும் ஏனைய விடயங்களின் அடிப்படையில், ராஜித சேனாரத்னவை சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அவர் சிகிச்சை பெற்று வரும் வைத்தியசாலைக்கு சிறைச்சாலைகள் திணைக்களம் நேற்றுமுன்தினம் அறிவித்திருந்தது. ஆனால் அவரின் உடல் நிலை தேறாமையால், அவரை சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றும் நடவடிக்கை நேற்றுமுன்தினம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டிருந்தது.

தற்போது அவருக்குப் பிணை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதையடுத்து ரணில் அணியினர் மகிழ்ச்சி ஆரவாரத்தில் ஈடுபட்டுள்ளனர். (எ-22)

## வேலைவாய்ப்பு விண்ணப்பப்படிவம் வழங்கப்படுவதாக பரப்பப்படும் செய்தி தொடர்பானது

மாவட்ட செயலகத்தால் வருடாந்தம் மாவட்ட ரீதியாக பிரதேச செயலகங்கள் ஊடாக திரட்டப்படும் வேலையற்றோர் தொடர்பான தரவுகள் சேகரித்தல் ஒரு வழமையான செயற்பாடாகும்.

இதனை சமூக வலைத்தளங்களில் தவறாக வேலைவாய்ப்பு வழங்கப்படுவதற்கான தகவல் சேகரிப்பு எனவும் வேலைவாய்ப்பு பெறுவதற்காக மாவட்ட செயலகத்திற்கு தேசிய அடையாள அட்டையுடன் செல்லுமாறும் தகவல் பரப்பப்படுகின்றது.

எம்மால் மேற்கொள்ளப்படும் தகவல் சேகரிப்பிற்கும் வேலைவாய்ப்பு வழங்குவதற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. இது ஒரு தவறான செய்தி எனவும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நா.வேதநாயகன்**
**அரசாங்கஅதிபர்**
**மாவட்டச் செயலாளர்,**
**யாழ்ப்பாண மாவட்டம்.**

(N 12092)
(14,17)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 16.12.1942
மறைவு 30.12.2019

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்
கல்லூரி விரிவுரையாளர்
**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்**
அவர்களின் அன்புத்தாயார்
**திருமதி பரராஜசிங்கம்**
**செல்லம்மா**
அவர்கள் 30.12.2019 ஆம் திகதி
திங்கட்கிழமை சிவபதமடைந்த
செய்தி அறிந்து ஆற்றொணா துயர் அடைவதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

CS30278/15/17

**யாழ்ப்பாணம்**
**தேசிய கல்வியற்கல்லூரி சமூகம்**

## கண்ணீர்அஞ்சலி




தோற்றம் 27.04.1943
மறைவு 29.12.2019

சாவகச்சேரி பிரதேச சபையில்
கடமையாற்றும் **ஆ.வசீகரன்**
அவர்களின் அன்புத்தாயார்
திருமதி **அன்னம்மா ஆறுமுகம்**
அவர்களின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

**ஊழியர் நலன்புரிச்சங்கம்,**
**சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்**

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் பணியாளராக
கடமையாற்றும் **அ.கிருபானந்தன்**
அவர்களின் பாசமிகு தந்தையார்
**செ.அமிர்தானந்தன்**
அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தி
அறிந்து ஆற்றொணா துயர் அடைவதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

CS30284/15/17

**ஆசிரியர் நலன்புரிகழகம்**
**யா/ அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்**
**அல்லைப்பிட்டி**

## கண்ணீர் அஞ்சலி



யா/ யாழ் இந்துஆரம்ப பாடசாலை
ஆசிரியர் திருமதி **தீபா இராஜேஸ்வரனின்**
அன்பு மாமியார்
திருமதி **பரராஜசிங்கம் செல்லம்மா**
அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும்
அவருடைய குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அவரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்

**அதிபர், ஆசிரியர்கள்**
**யா/யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை சமூகம்**

### அடுத்த...

ஸின் தலைவரும் முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிசாத் பதியுதீனிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவு நேற்று விசாரணைகளை முன்னெடுத்தது.

உயிர்த்த ஞாயிறு தினத் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிறப்புப் பொலிஸ் குழுவே இந்த விசாரணைகளை முன்னெடுத்தது.

சுமார் 3 மணி நேரம் ரிசாத்திடம் விசாரணைகள் நடத்தப்பட்டன எனவும், அவரிடம் வாக்குமூலம் ஒன்று பதிவு செய்யப்பட்ட பின்னர் வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டார் எனவும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீனின் சகோதரர் ஒருவர் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பின்னரான காலப்பகுதியான கடந்த ஏப்ரல் 26ஆம் திகதி இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தார்.

அவர் அரச வாகனத்தில் பயணிக்கும் போது இராணுவத்தினரால் வீதிச் சோதனையின்போது, கைதுசெய்யப்பட்டு மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார். இது தொடர்பிலேயே நேற்று முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீனிடம் விசாரிக்கப்பட்டது என அறியமுடிகின்றது. (எ-22)

**வேலையாள்கள் தேவை**

கடையில் வேலைசெய்யக்கூடிய அனுபவமுள்ள அல்லது வேலை பழக விரும்பும் வேலையாட்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்

**தொடர்பு - 076 116 5106**

**வேலையாள்கள் தேவை**

புத்தளத்தில் இருக்கும் தோட்டத்தில் தங்கியிருந்து வேலை பார்ப்பதற்கு தனியாகவோ அன்றி குடும்பத்துடன் வேலையாள்கள் தேவை. விவசாயம் நீர்ப்பாசனத்தில் அனுபவம் இருப்பது விரும்பத்தக்கது. போரினால் பாதிக்கப்பட்டவர்கள். அனாதரவாக இருப்பவர்கள், தனியாக இருக்கும் வயதான கணவன் மனைவிக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு:- 077 731 9426**

## நாஹா மருத்துவ நிலையம்

தீவிரமாக எலும்பு பாதிப்படைந்த வாதம்,
பாரிசவாதம், மாறாதபுண்கள், அல்சர்,
மர்மகட்டிகள், உடற்பருமன்,
குழந்தையின்மை முழுமையான தீர்வு.

**077 321 2740**

வங்கி முன்லேன்
சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி (ஜெகபதி வீடு)
மானிப்பாய்.

(CS 30274)(04.17)

## English Classes

English Language
Classes For
GR 9,10 & 11

**Contact: 077 981 0945**

## சாவகச்சேரி பிரதேச சபை - கொடிகாமம்
## பொது அறிவித்தல் - 2020

சாவகச்சேரி பிரதேசசபையின் எல்லைக்குள் வசிக்கும் மக்கள்/தொழில் நிறுவன உரிமையாளர்கள் எமது சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்நடைமுறைகளை பின்பற்றத்தவறுவோர் மீது 1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**01. வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2020**

சபை எல்லைக்குள் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளுபவர்கள் 2020 ஆம் ஆண்டுக்கான வியாபார அனுமதிப்பத்திரத்தை 31.03.2020 ஆம் திகதிக்கு முன்பாக பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**02. சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் - 2020**

1533/16 ஆம் இலக்க 25.01.2008 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் விதந்துரைக்கப்பட்ட தொழில்களை அல்லது வியாபாரத்தை மேற்கொள்பவர்கள் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டும். அல்லது ஏற்கனவே சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றவர்கள் உரிமம் காலாவதியாகும் தினத்திற்கு மூன்று மாதத்திற்கு முன்னர் விண்ணப்பித்து புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.

**03. ஆதன வரி செலுத்துதல்**

எமது சபையின் உப அலுவலகங்கள் நாவற்குழி, கைதடி ஆகிய இடங்களில் இந்த சேவை வழுங்கப்பட்டு வருகிறது. அப்பகுதியில் வசிப்பவர்கள் அந்தந்த உப அலுவலங்களுக்கு சென்று 31.03.2020 ஆம் திகதிக்கு முன்னர் ஆதனவரியை செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். மேலும் 31.03.2020 க்கு முன்வரி செலுத்த தவறின் 10% தண்டமும் வரியும் அறவிடப்படும்

**04. மரக்கறி, மீன் இறைச்சி விற்பனை தடை செய்தல்**

சபையின் எல்லைக்குள் உள்ள சந்தைகளில் இருந்து 500m சுற்றுவட்டாரத்தினுள் வர்த்தக நிலையங்கள் பாதையோரங்கள் என்பவற்றில் மரக்கறி, மீன், கோழியிறைச்சி ஆட்டிறைச்சி என்பன விற்பது தடை செய்யப்பட்டுள்ளது

**05. வீடமைப்பு நாடு நகர அபிவிருத்தி கட்டளைச்சட்டம் பிரிவு 268 ன் பிரகாரம் அறிவித்தல்**

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குள் புதிய கட்டுமானங்கள் அல்லது திருத்தங்கள் குழாய் கிணறு அமைத்தல் மற்றும் அனைத்து கொங்றீற் வேலைகளுக்கும் பிரதேசசபையின் அனுமதி பெறப்படல் வேண்டும். அனுமதியின்றி அமைக்கப்பட்ட கட்டுமானங்கள் எதுவாகினும் அனுமதியற்ற கட்டடங்களாக கருதி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அல்லது நட்டஈடு இன்றி அகற்றப்படும்.

**06. துவிச்சக்கர வண்டி உரிமம், மிருகவரி உரிமம் பெற்றுக்கொள்ளல்**

2020 ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கர வண்டி, மிருக வரி உரிமங்களை 31.03.2020 ஆம் திகதிக்கு முன் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**07. விளம்பரங்களை காட்சிப்படுத்தல்**

சபையின் நிர்வாக எல்லைக்குள் வீதிகளின் இருமருங்காகவும் வீதிக்கு மேலாகவும் வர்த்தக மற்றும் சேவை நிலையங்களிலும் காட்சிப்படுத்தப்படவுள்ள விளம்பரங்களிற்கு பிரதேசசபையில் கட்டணம் செலுத்தி அனுமதியினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அனுமதியினைப் பெற்றுக்கொள்ளாத வர்த்தக நிலைய நிறுவனங்களின் விளம்பரங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி அகற்றப்படும்.

**08. பொது இடங்களிலும் மற்றும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வீதியோரங்களிலும் கழிவுகளைப்போடுதல் தடை செய்யப்பட்டுள்ளது.**

சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும், வர்த்தக நிலையங்கள் முன்பாகவும் வீதியோரங்களிலும் கழிவுப்பொருட்களை போடுதல் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. மீறிச்செயற்படின் சுற்றாடல் பொலிஸ் மூலம் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**09. கழிவகற்றல் சேவை**

தாங்கள் வீட்டில் அகற்ற முடியாதுள்ள கழிவுகளை பிரதேச சபையில் கட்டணம் செலுத்தினால் சபையால் அக்கழிவுகளை அகற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியும். மேலும் கழிவுப் பொருட்களில் பிளாஸ்ரிக், கண்ணாடி, உக்காத பொருட்கள் போன்றவற்றினை வேறுபடுத்தி சபையின் உதவியுடனும், உக்கும் கழிவுகளை தாங்களாகவேயும் அகற்றிக்கொள்ள வேண்டும்.

**10. நீர் வழங்கல் சேவை**

பொதுமக்கள் தங்கள் வீட்டின் விசேட நிகழ்வுகளிற்கு குடிநீர் தேவைப்படின் பிரதேசசபையில் கட்டணம் செலுத்துவதன் மூலம் குடிநீரை பெற்றுக்கொள்ளமுடியும். மேலும் பாடசாலைகள், பொது நிறுவனங்கள், அவசியப்படுமிடத்து உரிய கட்டணங்களை செலுத்துவதனூடாக குடிநீரினை பெற்றுக்கொள்ள முடியும்.

**11. கனரக வாகன சேவைகள்.**

கலிபவுசர், றோலர் போன்ற கனரக வாகன சேவைகளைப் பெறுவதற்கு தலமைக்காரியாலயத்தில் குறித்த சேவைக்கான கட்டணங்களை செலுத்தி வாகன சேவைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

**12. பொதுசுகாதாரம் பேணல்.**

சபை எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும் பற்றைகள் வளர்ந்தும் பொது சுகாதாரத்திற்கு இடையூறாகவுள்ள காணி உரிமையாளர்கள் / பராமரிப்பாளர்கள் பற்றைகளை துப்பரவு செய்து பொதுசுகாதாரத்தை பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். டெங்கு பரவக்கூடிய கொள்கலன்கள் எதுவும் காணியில் இல்லாதொழிக்க வேண்டும். தவறுவோர் மீது குற்றப்பணம் அறவிடப்படும்.

**13. சந்தை வியாபாரம் தொடர்பானது.**

சந்தைகளில் உற்பத்தி பொருள்களுக்காக எதுவித கழிவுகளும் மேற்கொள்ளப்படலாகாது. குத்தகை வரியானது 4% இற்கு மேற்படலாகாது. சந்தை சுற்றாடல் பகுதியில் துவிச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள்கள், வாகனங்கள் நிறுத்துதல் தடை செய்யப்பட்டுள்ளது. அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் தரித்து விடப்படல் வேண்டும்.

**14. கட்டாக்காலி விலங்குகள் தொடர்பானது**

சபை எல்லைக்குள், வீதிகளில் கட்டாக்காலியாக திரியும் விலங்குகள் பிரதேசசபையால் பிடிக்கப்பட்டு உரிமை கோரும் பட்சத்தில் தண்டம் மற்றும் பராமரிப்புச்செலவுடன் மீள வழங்கப்படுவதுடன் உரிமை கோராத பட்சத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

**15. விசேட அறிவித்தல்**

சபை எல்லைக்குள் வீதியோரங்களிலும் அழகுக்காக பூக்கன்றுகள் வளர்க்கப்படுதல், வீதியோரங்களில் பாதைக்கு இடையூறாக கொங்றீற்றிலான கட்டுமானம் கட்டுதல் மற்றும் நடைபாதை வியாபாரம் என்பன பொதுமக்களுக்கு இடையூறான செயலாகையால் அதனை மீறி செயற்படுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**தவிசாளர்**
**சாவகச்சேரி பிரதேச சபை**
**கொடிகாமம்**


## பொதுஅறிவித்தல்
### பராமரிக்கப்படாத / துப்புரவு செய்யப்படாத காணி உரிமையாளர்களுக்கான அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேசசபைக்கு உட்பட்ட எல்லைக்குள் பராமரிக்கப்படாது பற்றைகளாகவும், கழிவுநீர் தேங்கி டெங்கு நோய் காவிகளை உற்பத்தி செய்யும் நிலையிலுள்ள காணிகளையும் இன்றிலிருந்து 14 நாட்களுக்குள் துப்புரவு செய்து எழுத்து மூலம் வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்கு அறியத்தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு துப்புரவு செய்யப்படாத பற்றைகளாகக் காணப்படும் காணிகள் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டம் 100, 101 பிரிவுகளின் பிரகாரம் பிரதேச சபையினால் குறித்த காணிகள் பொறுப்பேற்கப்பட்டு துப்புரவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு துப்புரவு செய்வதற்கு ஏற்படும் செலவீனமும் அதற்குரிய தண்டப்பணமும் உரிமையாளரால்/ தத்துவமளிக்கப்பட்டவரால் பிரதேசசபைக்கு செலுத்த நேரிடும் என்பதுடன் குறித்த காணி உரிமையாளர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**தவிசாளர் ,**
**வலிகாமம் தெற்குபிரதேசசபை ,**
**சுன்னாகம்.**

## கண்ணீர் அஞ்சலி



இரசாயனவியலின் தந்தை

**S.சண்முக சுந்தரம்**

அவர்கள் 29.12.2019
ஞாயிற்றுக்கிழமை அமரத்துவம்
அடைந்த செய்தி அறிந்து
ஆற்றொணாதுயர்
அடைவ்துடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**நிர்வாகி, ஆசிரியர்கள், ஊழியர்கள்.**
**NEW SCIENCE WORLD**

(N 12122)(14.17)

## யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)
## திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.
### பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் நிரந்தர பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவத்தை அலுவலக வேலைநாட்களில் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 10/- ஐ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 'தலைவர், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்' என்ற முகவரிக்கு 17.01.2020 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமாக அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

**1) பதவி: சந்தைப்படுத்தல்முகாமையாளர் (நிரந்தரம்)**
**சம்பள குறி இல: 106/09**
**சம்பளஅளவுத்திட்டம்: 04/2018 இன் படி 18010-220X10-230X10-22510**

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:

(அ) கூட்டுறவுப் பணியாளர் 10வது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறையிலான முகாமை மட்ட அல்லது மேற்பார்வை மட்ட பதவியொன்றில் மூன்று (03) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 11வது சம்பளத்திட்ட அப்படிப்பட்ட பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்
அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டம் அல்லது சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றின் விற்பனை அல்லது பொருட்கள் விநியோகம் செய்தலும் வழங்குதலும் அல்லது பொருட்கள் ஏற்றுமதி இறக்குமதி ஆகிய துறைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றில் முகாமை மட்ட பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்
அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (உயர்தரம்) மூன்று பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றில் சந்தைப்படுத்தல் அல்லது பொருட்கள் வழங்குதலும் விநியோகம் செய்தலும் மற்றும் ஏற்றுமதி இறக்குமதி ஆகிய துறைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றில் முகாமை மட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**2) பதவி: சாரதி (நிரந்தரம்)**
**சம்பள குறி இல: 312/13**
**சம்பள அளவுத்திட்டம்: 04/2018 இன் படி 16365-140 X 10 – 150 X10-19265**
**வெற்றிட எண்ணிக்கை: 01**

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:

5ஆம் வகுப்பு கல்விச் சான்றிதழும் பஸ் அல்லது லொறி அல்லது இழுவைப்பெட்டியுடன் டிராக்டர் சாரதி அனுமதிப்பத்திரத்துடன் நான்கு (04) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

பொதுவான நிபந்தனைகள்:

01. வயது 17.01.2020 ஆம் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவர்களாகவும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
02. யாழ்.மாவட்டத்தில் இரண்டு வருடங்களுக்கு மேலாக வசித்தமையை உறுதிப்படுத்துவதற்கு சான்றிதழ்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. கல்வித்தகைமைகள், அனுபவம், வயது, வதிவிடத்தை உறுதிப்படுத்தல், நற்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
04. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு பிரமாணங்களுக்கு அமைவாக நிர்வாகத்தினால் விதிக்கப்படும் ரொக்கப் பிணையைச் செலுத்துதல் வேண்டும்.
05. ஏனைய சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் அச்சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.
06. சங்கப் பணியாளருக்கு வயதெல்லை கருத்தில் கொள்ளப்படமாட்டாது.
07. விண்ணப்பத்தில் காட்டப்படும் தகவல்களும், இணைப்புகளும் உண்மையானதும், செம்மையானதுமென உறுதிப்படுத்துவதோடு ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் இதில் ஏதேனுமொன்று பிழையானதெனவோ அல்லது பொய்யானதெனவோ காணப்படுமிடத்து நஷ்டஈடு பெறாது உடனடியாகப் பதவி நீக்கம் செய்யப்படுவீர்கள் என்பதை தாங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

**30.12.2019** **தலைவர்**

## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from the qualified persons for the under mentioned posts.

### FACULTY OF ENGINEERING

Senior Professor/ Professor ofComputer Engineering/ Electrical and Electronic Engineering

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/Lecturer (Unconfirmed)/Lecturer (Probationary) in *Civil Engineering / Computer Engineering/ Electrical and Electronic Engineering/ **Mechanical Engineering/***Engineering Mathematics

**Note 01:**

* For positions in Civil Engineering special consideration will be given to those who have sound knowledge in Highway Engineering, Geotechnical Engineering, Coastal Engineering, Fluid Mechanics and Construction Management.

**For positions in Mechanical Engineering special consideration will be given to those who have sound knowledge in Mechanical, Production and Process Engineering.

***For positions in Engineering Mathematics, special consideration will be given to those who have sound knowledgein Engineering Mathematics. Background in Engineering will be considered additional qualification.

### UNIT OF SIDDHA MEDICINE

Instructor in Computer Technology Grade II

### SALARY AND OTHER BENEFITS

| Posts | Salary scales(w.e.f 01.01.2020) |
|---|---|
| Senior Professor | Rs.139,175 – 11x2,925– 171,350/-p.m |
| Professor | Rs.117,350-13x2,700-152,450/-p.m |
| Senior Lecturer Grade I | Rs.91,310-7x2,170-106,500/-p.m |
| Senior Lecturer Grade II | Rs.79,360-11x1,630-97,290/-p.m |
| Lecturer (Unconfirmed) | Rs.69,580-5 x 1,630-77,730/-p.m |
| Lecturer (Probationary) | Rs.54,600-10 x 1,335-67,950/-p.m |
| Instructor in Computer Technology Gr. II | Rs.50,625-3 x 1,335-54,360 (EB) 55,965-14 x 1,335-74,655/- p.m |

In addition to the above salary,

1. The following allowances will be paid as the percentage of the basic salary:
   i) Academic allowance

| | |
|---|---|
| Senior Professor | - 167% |
| Professor | - 162% |
| Senior Lecturer Gr.I/Gr.II | - 151% |
| Lecturer (Unconfirmed) | - 131% |
| Lecturer (Probationary) | - 115% |

   ii) Research allowance - 35% (Payable to the Academic Staff based on the research activity)
   iii) Monthly Compensatory Allowance -45% (Only for Instructor in Computer Technology Gr. II)
   iv) Additional monthly allowance – 20%
2. Cost of living allowance of Rs.7,800/-p.m.

**Statutory benefits:**

I. Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above
II. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system
III. Gratuity payments
IV. Employees' Trust Fund benefits
V. Free Medical Services

**Closing dates**

Application should reach us on or before as indicated below:

| | |
|---|---|
| Post of Senior Professor/ Professor | - 02.03.2020 |
| Other posts | - 31.01.2020 |

Applications and other documents for the Post of Senior Professor/Professor shall be sent to the Vice-Chancellor with a covering letter. Applications for the other posts, completed applications along with certified copies of the statement of the Degreess-hould be sent to the Deputy Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka.

Application forms, Schemes of Recruitments and other details will be available in the University website www.jfn.ac.lk. Downloaded application forms should accompany with the paid Bank Slip for the deposit of a sum of Rs.100/- credited to thePeoples Bank Account No: 162-1-001-6-0000880 of Bursar, University of Jaffna.

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar, Academic Establishments, University of Jaffna, Sri Lanka, on a payment of Rs.100/- per application form.Those who wish to obtain application forms by post are requested to send a self –addressed stamped envelope 23x10 c.m. in size along withthe paid Bank Slipto the above address.

The candidates who apply for more than one position should submit separate application along with separate Bank slip.The post applied for should be marked on the top left hand corner of the envelope.

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Illegible &incompleteapplications, and applications received by the University after the closing datewill be rejected without intimation. Only short- listed applicants will be called for an interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA.
30.12.2019

## அலுவலக கட்டடம் வாடகைக்கு

இல.52. சோமசுந்தரம் வீதி. சுண்டுக்குழி. யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது அலுவலக கட்டங்களில் ஒன்றான 07 அறைகள் 01 Hall வாகனத்தரிப்பிட வசதிகள் உடைய வீடு வாடகைக்கு உண்டு. அரச. அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களின் அலுவலக செயற்பாட்டுக்குப் பொருத்தமானது. கட்டடத்தை வாடகைக்குப் பெற விரும்புபவர்கள் நேரில் வருகை தந்து கட்டடத்தைப் பார்வையிட்டு தங்களின் கேள்வி விண்ணப்பங்களை எதிர்வரும் 08.01.2020 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியவகையில் அனுப்பி வைக்கவும்.

**தொடர்புக்கு:-**
**பொதுமுகாமையாளர்**
**யாழ்.மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ-து)**
**இல.52. சோமசுந்தரம் வீதி, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.**
தொலைபேசி - **021 222 5072**

(IN/12118)(11,17)

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## 2020 ஆம் ஆண்டுக்கான அறிவித்தல்

- நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 255 ஆம் அத்தியாயத்தின் கீழ் உரிமையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் சார்பில் பின்வருமாறு முடிவு செய்திருப்பதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

01. கட்டளைச் சட்டத்தின் 160 (3) ஆம் பிரிவின் நியதிப்படி சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் பரிபாலன எல்லைக்குட்பட்டு அமைந்திருக்கும் நெற்காணிகள் தவிர்ந்த சகல அசையாச் சொத்துக்களிலிருந்தும் வருடாந்தப்பெறுமதியின் 10% மான வரியொன்றினை 2020 ஆம் ஆண்டு முறையே மார்ச் 31. யூன் 30. செப்ரெம்பர் 30. டிசம்பர் 31 ஆகிய திகதிகளிலோ அல்லது அதற்கு முன்போ நான்கு கந்தாய தவணைகள் மூலம் செலுத்தப்படவேண்டும்.
02. 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் நாளில் அல்லது அதற்கு முன்னர் வருடாந்த விகிதங்கள் முழுமையாகச் செலுத்தப்பட்டால் 10% கழிவு அனுமதிக்கப்படும் என்பதுடன் விகித வருமதியாகவுள்ள அக்கந்தாயத்திற்குரிய முதல் மாதத்திற்குள்ளாக கந்தாய விகிதம் செலுத்தப்பட்டால் 5 % கழிவும் அனுமதிக்கப்படும்.
03. மேற்சொல்லப்பட்ட பந்தி – 1 இன் பிரகாரம் சொல்லப்பட்ட காலங்களில் விகிதங்கள் செலுத்தப்படாதவிடத்து வெற்றுக்காணிகள். வதிவிடங்கள் மீது 15 % உம் மற்றும் ஏனைய இடங்கள் மீது 20% உம் விறாந்துக்கட்டணம் அறவிடப்படும்.
04. ஆதனவரி சார்பாக சகல ஆட்சேபனைகளும் ஒவ்வொரு ஆதனத்திற்கும் தனித்தனியாக 31.01.2020 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் இவ் அலுவலகத்தில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

- சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் எல்லைக்குட்பட்ட வியாபார நிலையங்கள் அனைத்தும் 2020 ஆம் ஆண்டிற்கான வியாபார உரிமம். வியாபார வரிக்கட்டணங்களை செலுத்தி 31.03.2020 காலப்பகுதிக்குள் உரிமம். பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். வியாபார உரிமம் பெற்றுக்கொள்ளாத. வியாபார வரி செலுத்தாத வியாபார நிலையங்கள் அனைத்தும் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.
- 2020 ஆம் ஆண்டிற்கான விளம்பர கட்டணங்களை செலுத்தி விளம்பரங்களுக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். புதிதாக அமைக்கப்படும் விளம்பரங்கள் அனுமதி பெற்றே காட்சிப்படுத்தப்பட வேண்டும். அனுமதி பெறப்படாத விளம்பரங்கள் நகரசபையினால் அகற்றப்படும்.
- 2020 ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி கட்டணங்களை செலுத்தி உரிமத்தகடுகளை பெற்றுக்கொள்ளுமாறும். வளர்ப்பு நாய்களுக்கான பதிவுகளையும் மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.
- 2020ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2020 ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவும். புதுப்பித்துக் கொள்ளவும் முடியும். மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.
- ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்யப்படாத ஆதனச்சொந்தக்காரர்கள் பெயர்மாற்றம் செய்வதற்குரிய ஆவணங்களை நகரசபையில் சமர்ப்பித்து பெயர்மாற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.
- நகரசபைக்கு உட்பட்ட தங்களது ஆதனத்தில் புதிதாக கட்டடங்கள். எல்லைச்சுவர். குழாய்க்கிணறுகள் அமைப்பதாயின் அனுமதி பெற்று அமைக்கப்படல் வேண்டும். புதிய கட்டடத்தினை புனரமைப்பதாயின் நகரசபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே அமைக்கப்படல் வேண்டும். கட்டடங்கள் அமைப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தியடையாவிடின் உரிய கட்டணம் செலுத்தி கட்டட அனுமதியைப் புதுப்பிக்க வேண்டும். கட்டடம் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் நகரசபையுடன் தொடர்பு கொண்டு படிவங்களைப்பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தினைச் செலுத்தி அமைவுச் சான்றிதழைப் (COC) பெற்றுக் கொண்ட பின்னரே கட்டடத்தில் குடிபுகுதல் வேண்டும்.
- தொழில் வியாபார நடவடிக்கைகளை நகரசபை எல்லைக்குள் மேற்கொள்வோர் சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டிய செயற்பாடு தொடர்பாக 2000 ஆம் ஆண்டு 22 ஆம் திகதி 1159/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் "இ" பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்/ வியாபார நடவடிக்கைகளை நகரசபை எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தைச் செலுத்தி சூழல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
- பொது மக்கள். வியாபார நிலையங்கள். அரச தனியார் நிறுவனங்கள் திண்மக்கழிவுகளை நகரசபைக்கு ஒப்படைக்கும் போது அவை தரம் பிரித்து வழங்கப்படல் வேண்டும் என்பதுடன் திண்மக்கழிவுகள் பொது இடத்தில் கொட்டுதல் தடை செய்யப்படுவதோடு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மற்றும் அபிவிருத்தி செய்யப்படாத காணிகளில் உள்ள பற்றைகள் துப்பரவு செய்யப்படல் வேண்டும்.

**நகராட்சி மன்றம்**
**சாவகச்சேரி.**
**31.12.2019**

**சிவமங்கை இராமநாதன்,**
**தவிசாளர்,**
**நகராட்சி மன்றம்,**
**சாவகச்சேரி.**

BLC CAMPUS

othm qualifications | LINCOLN UNIVERSITY COLLEGE | University of Chichester | QUEST INTERNATIONAL UNIVERSITY PERAK



Sri Lanka UGC Recognized

CERTIFICATE

English | Business Management

DIPLOMA

English | IT | Business Management | Smart Up | Hospitality Management

PROFESSIONAL COURSES

ACCA | Digital Marketing

HND (HIGHER NATIONAL DIPLOMA)

Civil Engineering
Business Management
Hospitality Management
Information Technology

DEGREE / DEGREE TOP UPS
(1 YEAR for HND holders)

Bachelor of Business in Banking & Finance
Bachelor of Business Administration
Bachelor of Information Technology
Bachelor of Psychology
Bachelor of Education

MASTERS

MBA ( Master of Business administration)
MEd (Master of Education)

DOCTORATE

DBA (Doctor of Business administration)
PhD



TVEC Approved Centre

0777 17 4443 Sapthika
0777 07 4449 Vithya
4th Lane, Brown Road, Jaffna.
blc campus
T - 021 493 5555, 021 437 4443
E - info@blccampus.edu.lk

# கனவுகளைச் சிதைக்கும் பகிடிவதை



க.கரன்
ஊடகக்கற்கைகள்துறை
(மூன்றாம் வருடம்)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

புதுமுக மாணவர்களுக்கு பல்கலைக்கழகம் என்றாலே ஓர் இனம்புரியாத பூரிப்பு. ஆனால் அதனோடு அள்ளுண்டு வரும் பகிடிவதை குறித்த எண்ணம் சற்றே அப்பூரிப்பினை விழுங்கிவிடுகிறது. பல்கலைக்கழகங்கள் மாத்திரமன்றி கல்வியியற் கல்லூரிகள், பாடசாலைகள், பயிற்சிமுகாம்கள் போன்ற நிறுவனங்களில் ஓர் கலாசாரத்தைப் போல பகிடிவதையும் பரவிவருகின்றது. பகிடிவதை இன்றைய காலகட்டத்தில் முக்கிய பேசுப்பொருள்களில் ஒன்றாகியிருப்பதோடு சில மாணவர்களை மௌனிக்கவும் மரணிக்கவும் வைத்துள்ளது.

பகிடிவதை என்பது பகிடி என்றால் பரிகாசம், விகடம், சிரிப்பு உண்டாக்குதல், வெளிவேடதாரர், கூத்தாடி எனவும் வதை என்றால் மிகுந்த வேதனைக்குள்ளாக்கும் வகையில் விளைவிக்கப்படும் துன்பம் எனவும் பொருள்படுகிறது. இங்கு பகிடி செய்தலானது நகைச்சுவையின் ஓர் அங்கமாக கொண்டாலும் வதை/வதைத்தல் ஆனது நாம் ஒவ்வொருவரும் பின்பற்றிவரும் சமய நெறியிலும் மரபுநெறியிலும் மறுக்கப்பட்ட ஒன்றாகவும் குற்றச்செயலாகவும் கணிக்கப்படுகிறது.

இவ்வாறு செல்வாக்கு பெற்றுவருகின்ற பகிடிவதையின் தற்காலப்போக்கினை யாழ்.பல்கலைகழக மாணவர் குழுக்களிடம் கருத்துக்களை வினவியபோது அவர்கள் பகிடிவதையானது நியாயமானமுறையில் நோக்கம் சரியானதாக இருப்பின் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாகவும். நோக்கம்மாறி தீங்கிழைக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்கும்போது ஏற்றுக்கொள்ளமுடியாத ஒன்றாகவும் காணப்படுவதாகக் குறிப்பிட்டனர்.

- பகிடிவதையானது மாணவர்களிடத்தில் ஒருமித்த தன்மையினை ஏற்படுத்தவும்,
- சிரேஷ்டமாணவர்களுக்கும் கனிஷ்ட மாணவர்களுக்கும் இடையில் எதிர்காலத்தை பலப்படுத்தும் உறவுபாலத்தை ஏற்படுத்தவும்,
- புதுமுக மாணவர்களின் ஆளுமையை விருத்தி செய்யவும்,
- அவர்களை திறந்த மனதுடையவர்களாகவும்,
- பொதுவிடயங்களில் ஈடுபாடு உடையவர்களாக மாற்றுவதற்கும்,
- ஒழுக்கவிழுமியங்களை பின்பற்றவும், வழிப்படுத்துவதற்கும்,
- ஒழுங்குமுறையோடும் சரியான சட்டத்திட்டங்களுக்கும் உட்பட்டு சுமுகமாகக் கல்விகற்று பல்கலையிலிருந்து சிறந்த பட்டதாரிகளாக வெளிவர பகிடிவதை துணைசெய்வதாக நியாயப்படுத்தப்படுகிறது.

ஆனால் இன்று அதன் வளர்ச்சிப்போக்கில்

- உளரீதியான தாக்கங்கள்,
- உடல்ரீதியான தாக்கங்கள்,
- பாலியல் ரீதியான தொல்லைகள்,
- அடித்தல், துன்புறுத்தல் என வழிமாறிச் செல்வதாகவும் தீமைகளை விளைவிக்கும் செயலாகவும் பரிணமித்து வருகிறது.

இத்தகைய நிலையானது மாணவர்களிடையே பழிவாங்கும் மனநிலை ஏற்படுத்தி தான் பெற்ற துன்பத்தை தனக்கு பின் வரும் புதுமுக மாணவர்களும் அனுபவிக்க வேண்டும் எனும் மனோநிலைக்கு தள்ளப்படுகிறது.

- பகிடிவதைக்குள்ளானவ,ர் அடித்தல், துன்புறுத்தல் என உடல்ரீதியான வன்முறையினை எதிர்கொள்ளுதல்,
- உளரீதியான பாதிப்புக்குள்ளாதல்,
- தற்கொலை செய்துகொள்ளல்,
- கல்வியை இடைநிறுத்திச் செல்லுதல்,
- பல்கலைக்கழக வாய்ப்பினைத் தவறவிடல்,
- கல்வி மீதான வெறுப்பு,
- குடும்பம் மாணவன் மீது கொண்ட கனவு தொலைக்கப்படல் .

எனப் பல்வேறுப்பட்ட இன்னல்களைச் சந்திக்கும் அதே வேளை,

- பகிடிவதையில் ஈடுபட்டவர் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படுதல்,
- வகுப்புதடைவிதிப்பால் கல்விநடவடிக்கை இடைநிறுத்தப்படுதல் அல்லது தாமதப்படுத்தப்படுதல், வெளியேற்றப்படுதல், சிறைக்கு அனுப்பப்படுதல், நீதிபதிமுன் நிறுத்தப்படுதல்,
- சமூக முரண்பாட்டினை எதிர்கொள்ளல்,
- குடும்ப நிலை பாதிப்புகள்,
- சமூக அந்தஸ்து இழக்கப்படுதல்,
- எல்லாவற்றுக்கும் மேலாக தான் செய்தபகிடிவதையினால் ஒருவர் பாதிப்புக்குள்ளானதை எண்ணி வாழ்நாள் முழுவதும் ஏற்படுகின்ற குற்றவுணர்ச்சி என பல்வேறுபட்ட விளைவுகளுக்குள் தள்ளப்படுகின்றனர்.

இத்தகைய சூழ்நிலையை சீர்செய்ய சட்ட ஏற்பாடுகளும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் முயற்சித்து வருகின்றன.

- அடிப்படை மனிதஉரிமைகள் சட்டம்,
- குற்றவியல்சட்டம்,
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 919ஆம் இலக்க சுற்றறிக்கைப்படி உயர்கல்வி நிறுவனங்களுக்கு அனுமதி பெறும் மாணவர் ஒவ்வொருவரும் பகிடிவதையைத் தொடங்கவோ தூண்டவோ மாட்டேன் எனவும் பகிடிவ்வதைக்கு உதவமாட்டேன் எனவும் கட்டாயம் கையொப்பமிட வேண்டும்.
- மற்றும் இந்த ஆணைக்குழுவால் உருவாக்கப்பட்டுள்ள ugc.ac.lk/rag என்ற வலைத்தளத்தில் பகிடிவதை, வன்முறை, அச்சுறுத்தல் மற்றும் கொடுமைப்படுத்தல் போன்ற முறைப்பாடுகளை பதிவு செய்யலாம்,
- அல்லது 0112123700, 0112123456 எனும் அவசர தொலைபேசித் தொடர்பு ஊடாகவும் முறைப்பாடு செய்யலாம்.
- மற்றும் பல்கலைக்கழக நிறுவனங்களில் காணப்படும். பகிடிவதை எதிர்ப்புக்குழு ஊடாக விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகள், தண்டனைகள் போன்ற நடவடிக்கைகள் மூலம் பகிடிவதைக்கு முற்றுப்புள்ளி வைக்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திசைமாறும் பகிடிவதை தொடர்பில் யாழ்.பல்கலைகழகத்தின் மாணவர் ஆலோசகர் நு. ரட்ணம் அவர்கள் கருத்துதெரிவிக்கையில்

"பகிடிவதையினது விளைவுகளானது சமகாலத்தில் எந்தவொரு சாதாரண மனிதனாலும் ஏற்றுக்கொள்ளமுடியாத ஒன்றாகிறது. ஆரம்பகாலங்களில் புதுமுக மாணவர்களினை பல்கலைக்கழகத்துக்கு அமைவான பொதுவான இயைபாக்கத்தை உருவாக்குவதற்கு வரவேற்பு நிகழ்வு நடத்தப்பட்டது. அதுவே இன்று பகிடிவதையாக உருப்பெற்றுவந்துள்ளது. அப்போதைய பகிடிவதையானது இன்று நினைத்தாலும் சிரிப்பூட்டுவதாகவும், ஓர் புரிந்துணர்வுடனும் காணப்பட்டது. ஆனால் தற்காலத்தில் அடித்தல், வன்சொற்களால் வைதல், காசுபறித்தல், உளரீதியான பாதிப்பை ஏற்படுத்தல், உடல் ரீதியான சீண்டல்கள் செய்தல் என சிரேஷ்ட மாணவர்களால் புதுமுக மாணவர்களை வக்கிரபுத்தியுடன் பழிவாங்கும் தன்மையானதாக காணப்படுகிறது. இதனை குடும்பம், சமூகம், நிறுவனம் என யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாதவொன்றாக உள்ளது" என்கிறார்.

தற்காலத்தில் பகிடிவதையானது வளர்ந்து வருவதை தடுக்க முதலாம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு மாணவர்களும் தாம் பெற்ற துன்பம் பிற மாணவர்களும் பெறக்கூடாது ஒரு சிறிய செயல் கூட எத்தகைய தாக்கத்தை உருவாக்கும் என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும். எதிர்காலத்தில் ஓர் அரசினது பல்வேறு துறைகளையும் தாங்கிப்பிடிக்கும் தூண்களான மாணவ சமுதாயத்தினர் பகிடிவதை என்ற பெயரில் திசைமாறிச்செல்லும் நிலையில் உள்ளார்கள் இந்நிலை மாற வேண்டும். சமூகத்தில் தம் மீதான நம்பிக்கையை வலுப்படுத்துவதும் சமுக முன்னேற்றத்துக்கும் நாட்டினது அபிவிருத்திக்கும் உழைக்க வேண்டியதேவை ஒவ்வொரு மாணவரினதும் தலையாய கடமையாகும். தற்காலத்தில் நோக்கம் வழிமாறிச்செயற்படுவதால் சட்டம் மற்றும் அதனுடன் தொடர்புடைய யாவரும் இணைந்து இதனை நிறுத்துவதுதான் ஒரே வழி. மாணவர்கள் தானாக திருந்த வேண்டும் அல்லது திருத்தப்பட வேண்டும். ■

# போதைப்பொருளற்ற இளைஞர் சமுதாயத்தை உருவாக்குவோம்

எம்.எஸ்.எம்.மும்தாஸ்
ஊடகக்கற்கைகள் துறை,
மூன்றாம் வருடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

இளைஞர்கள் கண்ணாடி போன்ற மனம் படைத்தவர்கள். கள்ளங்கபடமறியா வெள்ளையுள்ளம் கொண்டவர்கள். அவர்கள் இன்று சரியாக வழிநடத்தப்படின் மாத்திரமே சிறந்ததொரு எதிர்கால சந்ததி உருவாக வாய்ப்புக் கிடைக்கிறது. காவோலை விழக் குருத்தோலை சிரிக்கும் என்பார்கள். குருத்தோலையும் ஒருநாள் காவோலையின் நிலையை அடையும் என்பதை உணர்ந்து செயற்படவேண்டும். அல்லது வேறொருவர் மூல மாக அவர்களுக்கு உணர்த்தப்பட வேண்டும். ஒருநாட்டின் சனத்தொகையில் அதிகபங்கு வகிப்பவர்கள் இளைஞர்கள். இளைஞர்களை நாளைய தலைவர்கள் எனும் நிலைக்குக் கொண்டுவர, முதலில் அவர்களுக்குக் கல்வி புகட்டப்படவேண்டும். அதுவும்வெறுமனே புத்தகப்படிப்பு மட்டுமன்றி தொழில்சார் கல்வியும் புகுத்தப்படவேண்டும்.

இன்று சிறுவர்கள், இளைஞர்கள் கல்வியைப் பெற்றுக்கொள்வது மறுக்கப்பட்டு, அவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றனர். இதனைக் கண்டும் பலர், கண்ணிருந்தும் குருடர்களாய் காதிருந்தும் செவிடர்களாய் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். நாளைய தலைவர்களை உருவாக்கும் அடித்தளம் பாடசாலையிலே இடப்படவேண்டும். பாடசாலைகளில் அறிவு,திறன்,மனப்பாங்கு ஆகிய முத்திறம் படைத்த இளைஞர் சமுதாயம் ஒன்றை உருவாக்க வேண்டும். அவர்களுக்கு நல்லறிவு புகட்டப்பட வேண்டும். அவர்களது உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். மேலும், இன்று இளைஞர்களிடையே போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது. இதனால் திறமைமிக்க தலைவர்கள் சமூகத்தில் இழக்கப்படுகின்றனர். போதைப்பொருள் பாவனை சமுதாயத்தை சீரழித்து சின்னாபின்னமடையச் செய்வது மட்டுமன்றி ஒருநாட்டின் அபிவிருத்தியின் முதுகெலும்பாக விளங்கும் இளைஞர்களை மெல்ல மெல்லக் கொன்றொழிக்கவும் செய்கிறது.

இவ்வாறு போதைப் பொருள்களால் பாதிக்கப்பட்ட இளைஞர்களை இனங்கண்டு, அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி அதிலிருந்து அவர்களை விடுவிக்கும் பொறுப்பு நம் எல்லோருக்குமே உண்டு.

பெற்றோரும் வீட்டில் தம் பிள்ளைகள் மீது எப்போதும் ஒரு கண் வைத்திருக்க வேண்டும். வீட்டில் தனியறைகளை அவர்களுக்கென ஒதுக்கியிருந்தாலும் அந்த அறைகளை எந்நாளும்,எப்போதும் பார்வையிடுவது பெற்றோரின் கடமையாக இருக்கவேண்டும். போதைப் பொருள்களைப் பாவனைசெய்பவர்களுக்குஎதிராகவும், அவற்றை இளைஞர்களுக்கு விநியோகிக்கும் சமூக விரோதிகளை எதிர்க்கவும் அரசு கடுமையான சட்ட திட்டங்களைப் பிரயோகிக்க வேண்டும். அப்போதுதான் திட்டம் போர்ட்டு இளைஞர்களை அழிக்கும் ஆட்டம் முடிவுக்கு வரும்.

பாடசாலைகளிலும், மதத் தளங்களிலும், அறநெறிப் பாடசாலைகளிலும் மதுபானம்,போதைப் பொருள்கள் பற்றிய கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி, பேச்சுப்போட்டி ஆகிய இணைப்பாடவிதானச் செயற்பாடுகளைச் செய்து, மாணவர்கள், இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதில் ஆசிரியர்களுக்கும் பொறுப்புள்ளது. இவ்வாறான சமூகக் கூட்டுழைப் பின் மூலமே ஆரோக்கியமான , இளைஞர் சமுதாயத்தை நம் நாட்டில் கட்டியெழுப்ப முடியும் என்பதை மனதிற் கொண்டு அனைவரும் செயலில் இறங்குவோம். ■

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சவால்களைச் சமாளிப்பாரா?

வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக நேற்றுப் பதவியேற்றுள்ளார், திருமதி.பி.எஸ்.எம்.சாள்ஸ். வடக்கின் முதலாவது பெண் ஆளுநர் என்ற வரலாற்றோடு, தன் பதவிக் கதிரையில் அமரும் திருமதி சாஸ்ஸுக்கு முதலில் ஒரு வாழ்த்துப் பூங்கொத்து.

இலங்கையின் 8 ஆவது நிறைவேற்று ஜனாதிபதியாகக் கோத்தாபய, தெரிவு செய்யப்பட்டவுடன் உடனடியாகவே சகல மாகாண ஆளுநர்களும் பதவியில் இருந்து தூக்கப்பட்டு, அவர்களுக்குப் பதிலாகப் புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர். ஆனால் இந்த ஆளுநர் நியமன விவகாரத்தில் வடக்கு மாகாண விடயத்தில் மட்டும், கோத்தாபய எடுத்த எடுப்பிலேயே ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில், வடக்கு, கிழக்கில் கோத்தாபய வாங்கிய அடி சாதாரணமானதல்ல. இதே நிலையை இனியும் நீடிக்க விடக்கூடாது என்பதற்காகவே இவ்விரு மாகாண ஆளுநர் விடயத்தில் கோத்தாபய அளவுக்குமீறிய நிதானத்தைக் காட்டினார். சிங்களவர் ஒருவரை நியமித்தால், தமிழ்த் தரப்புக்கள் எல்லாமே ' தமிழர்கள் வாழும் தாயகத்தில் பெரும்பான்மையினத்தவரை ஆளுநராக்கி அடக்க நினைக்கிறார் கோத்தாபாய' என்று போர்க்கொடி தூக்குவார்கள். இந்தக் கொதிநிலை, சர்வதேச மட்டத்தில் கோத்தாபய பற்றி இருக்கும் போர்முகத்தை இன்னும் பயங்கரமானதாக உருப்பெருப்பிக்கக் கூடும். மாறாக, தமிழர் ஒருவரை நியமித்தால், அவருக்கு எதிரான தரப்புகள் வரிந்து கட்டிக் கொண்டு, முறைப்பாட்டு மூடைகளோடு சென்றுவிடுவார்கள். 'அவர் அப்படி, இவர் இப்படி' என்று போட்டுக் கொடுத்தே, தங்கள் காழ்ப்பை கொட்டித் தீர்ப்பார்கள். இதனால் சிங்களவரை நியமித்தாலும் சிக்கல், தமிழர்களில் யாரை நியமிப்பது என்ற குழப்பமும் கோத்தாபயவை சூழ்ந்தன. ஏறச் சொன்னால் எருதுக்கு கோபம், இறங்கச் சொன்னால் முடவனுக்கு கோபம் என்ற நிலை.

ஒருவாறு கிழக்குக்கு ஆளுநரை நியமிக்க முடிந்தாலும், வடக்கு ஆளுநர் விவகாரம் இடியப்பச் சிக்கலை விடவும் தீர்க்கப்பட முடியாததாக இழுபட்டுக் கொண்டே போனது. முத்தையா முரளிதரன் , சுரேன் ராகவன், வரதராஜப்பெருமாள், தவராசா எனப்பல பெயர்கள் ஆளுநர் பட்டியலில் இருப்பதாகக் கதைகள் அடிபட்டன. போதாக்குறைக்கு இந்த ஆளுநர் கதிரைப் போட்டியில் தாங்களும் இருப்பதாக வந்தவர் , போனவரெல்லாம் புரளிகளைக் கிளப்பி விட்டு, தங்களுக்கும் 'ஆளுநர் கனவு ' இருப்பதை வெளிக்காட்டினர். பத்திகைகளில் விளம்பரம் போட்டும், தமது ஆளுநராகும் ஆசையை வெளிப்படுத்தியோரும் உண்டு. இப்படி போட்டிகள் கூடிக் கொண்டே போக, யாரை ஆளுநராக்கலாம் என்றா குழப்பமும் அதே சமச்சீர் தன்மையோடு அதிகரித்தது. விக்கிரமாதித்தன் கதையில் வரும் வேதாளத்தின் புதிருக்கு விடையைக் கண்டுபிடித்தாலும் பிடிக்கலாமே தவிர, வடக்கின் அடுத்த ஆளுநர் யார் என்று தீர்மானிப்பது இலகுவானதல்ல என்பதாகவே நிலைமை நீண்டது.

கடைசியில் ஒருவழியாக, கடந்த 18 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் சுங்கத் திணைக்களப் பணிப்பாளராகக் கடைமையாற்றிய திருமதி. பி.எஸ்.எம். சாள்ஸை வடக்கு ஆளுநராக நியமிப்பதென முடிவு செய்து, நேற்று அவர் பதவிப்பிரமாணமும் செய்து விட்டார். ஆனால் புதிய ஆளுநருக்கு முன்னால் பெரும் சவால்கள் காத்திருக்கின்றன. இவற்றையெல்லாம் தாண்டக்கூடிய ஆளுமை கொண்டவர் என்ற அடிப்படையிலேயே, திருமதி . சாள்ஸுக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

மாகாண சபை செயலிழந்துள்ள நிலையில், வடக்கில் ஆட்சி செலுத்தப்போகும் ஆளுநர், இங்கு தலைவிரித்தாடும் போதைப்பொருள் பாவனை, வாள்வெட்டுகள், கொள்ளைகள், சமூகச்சீர்கேடுகள் என்பவற்றை அடக்குவதை தன் முதல் பணியாகக் கொள்ளவேண்டும். அபிவிருத்திக்கும் அதேயளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். திணைக்களங்களில் உள்ள நிர்வாகக் குளறுபடிகளைச் சரிசெய்ய வேண்டும். வேலைவாய்ப்புக்காகக் காத்திருக்கும் பட்டதாரிகளுக்குரிய நியமனங்களை வழங்க வேண்டும். இப்படி பல சவால்கள் . இவற்றையெல்லாம் புதிய ஆளுநர் தாண்டுவாரா, தத்தளிப்பாரா என்பது இன்னும் சில தினங்களில் தெரிந்துவிடும்.

# பேசினால்தான் பிரச்சினை தீரும்

## திஸ்ஸ அத்தநாயக்க அறிவுரை

கொழும்பு, டிசெ.31

கட்சித்தலைமைப் பதவி தொடர்பாக ரணில் விக்ரமசிங்கவும் சஜித் பிரேமதாசவும் நேரடியாகச் சந்தித்து பேசவேண்டும். வெளிநபர்கள் மூலம் இதற்கு ஒருபோதும் தீர்வு காண முடியாது. இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.



கொழும்பில் அவரது இல்லத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கட்சி ஆதரவாளர்களின் சவாலை நிறை வேற்றவேண்டிய பொறுப்பு சஜித் பிரேமதாசவுக்கு இருக்கின்றது. ஜனாதிபதித் தேர்தலில் 55 இலட்சம் பேர் சஜித் பிரேமதாசவுக்கு வாக்களித்திருக்கின்றனர். அவர்களின் பொறுப்புக்களை நிறைவேற்றவேண்டிய தேவை இருக்கின்றது. அதனால் இந்த பிரச்சினை தொடர்பாக வெளிநபர்களை வைத்து விவாதித்துக் கொண்டிருக்காமல் பேச்சு மூலம் தீர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சஜித் பிரேமதாசவும் ரணில் விக்ரமசிங்கவும் நேரடியாக பேச்சொன்றை விரைவில் மேற்கொள்ள உள்ளனர் என்று தெரியவருகின்றது. அது மிகவும் மகிழ்ச்சியான செய்தியாகும். பிரச்சினையை தீர்த்துக் கொண்டு அனைவரும் இணைந்து தேர்தலுக்கு முகம்கொடுக்க முடியுமானால் அரசுக்குப் பெரும் சவாலை ஏற்படுத்தலாம் என்ற நம்பிக்கை எமக்குள்ளது - என்றார். (ஏ)

# 1319 வீடுகள் சோதனை

யாழ்ப்பாணம்,டிசெ.31

யாழ்.மாநகரப்பிரதேசத்தில்கடந்தவாரம்மட்டும் ஆயிரத்து 319 வீடுகள் சோதனையிடப்பட்டன. நர்வாந்துறை,அரியாலை, யாழ்.நகர் போன்ற பகுதிகளில் டெங்கின் தாக்கம் அதிகரித்துக் காணப்பட்டதை அடுத்து சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

நாவாந்துறையில் ஜே/83,86 கிராம சேவகர் பிரிவில் 458 வீடுகளும், யாழ்.நகரில் ஜே / 87,88கிராம அலுவலர் பிரிவுகளில் 524 வீடுகளும், அரியாலை ஜே/91 கிராம அலுவலர் பிரிவில் 337 வீடுகளும் சோதனையிடப்பட்டன.

அதேவேளை யாழ். மாநகரப் பிரதே சத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின்போது 7 குடியிருப்புக்களில் நுளம்பு குடம்பிகள் இருக்கின்றமை கண்டுபிடிக்கப்பட்டது. இந்தக் குடியிருப்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (க-17)



## டெங்கு விழிப்புணர்வு

சுற்றாடலிலும் நுளம்புப் பெருக்கத்துக்கு ஏதுவான இடங்களை இனங்கண்டு இல்லாது செய்யுங்கள். இவற்றுள் முக்கியமானவை கொள்கலன்கள் கூரைப் பீலிகள், தண்ணீர்த் தொட்டிகள், தண்ணீர்த் தாங்கிகள், வீட்டின் மொட்டை மாடிகள், மரப்பொந்துகள் என்பவையாகும்.

சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு.

## கொழும்பு – கே.கே.எஸ்.

# இரு ரயில் சேவைகள் நிறுத்தம்!!

கொழும்பு, டிசெ. 31

கொழும்பு, கோட்டை - காங்கேசன்துறை இடையே இயங்கும் இரண்டு ரயில்களின் சேவைகளை இன்று முதல் நிறுத்துவதற்கு, ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதன்படி 87 மற்றும் 88 இலக்கம் கொண்ட ரயில்கள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் இயங்கமாட்டா. பயணிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி காரணமாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக ரயில்வேத்திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. இதற்கு பதிலாக இரண்டு ரயில்கள் கொழும்பு, கோட்டை மற்றும் தலைமன்னார் இடையே இயக்கப்படும்.

ஜனவரி முதலாம் திகதி முதல் இந்த இரண்டு ரயில்களும் கோட்டை ரயில் நிலையத்திலிருந்து இரவு 7:15 மணிக்கு புறப்பட்டு அதிகாலை 3:25 மணிக்கு தலைமன்னாரைச் சென்றடையும்.

இந்த ரயில் தனது பயணத்தை மீண்டும் தலைமன்னாரில் இருந்து இரவு 8:25 மணிக்கு ஆரம்பித்து, காலை 4:40 மணிக்கு கொழும்பு, கோட்டையை வந்தடையும் என்றும் ரயில்வே திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# தற்கொலையும் தவிர்த்தலும்

கிசோபனா சுந்தரலிங்கம்
ஊடகக்கற்கைகள் துறை,
மூன்றாம் வருடம்,
யாழ் .பல்கலைக்கழகம்.

ஒவ்வொரு மனிதரும் சாதாரண வாழ்க்கை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றபோது எதிர்பார்த்தோ அல்லது எதிர்பார்க்காமலோ பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். அவ்வாறான சந்தர்ப்பங்களில் பலர் தன்னம்பிக்கையோடு முகம் கொடுத்து வெற்றியும் பெறுகின்றனர். ஆனால் ஒரு பிரச்சினையைத் தன்னம்பிக்கையோடு முகங்கொடுக்கத் தவறுபவர்கள் தற்கொலையைத் தீர்வாகக் கருதுகின்றனர்.

"தற்கொலை என்பது ஒரு மனிதன் தனது தனிப்பட்ட நோக்கம் கருதித் தானாகவோ அல்லது பிறரால் தூண்டப்பட்டோ தன்னுயிரை மாய்த்துக்கொள்வதைக் குறிக்கின்றது. மேலும் இன்றைய சமூகத்தவர் மத்தியில் அதிகரித்துக் காணப்படுகின்ற நோயாகவும் தற்கொலை செய்து கொள்ளல் காணப்படுகின்றது. தற்கொலை செய்துகொள்ள வேண்டும் என்ற நொடிப்பொழுது மனநிலையைக் கடந்துவருவதில் தான் வாழ்க்கையின் எதிர்காலம் அடங்கியுள்ளது" என்கிறார் மனநல ஆலோசகர் பிருந்தா ஜெயராமன்.

"உலகெங்கும் ஒவ்வொரு ஆண்டும் எட்டு இலட்சம் பேர் தற்கொலை செய்து கொள்கின்றார்கள் .சராசரியாக 40 செக்கனுக்கு ஒருவர் என்ற அடிப்படையில் தற்கொலை செய்து கொள்கின்றனர். தற்கொலை செய்வோரில் அதிகமானோர் 15 -29 வயதுடையோர் தான். அதிகமாக நடுத்தர வருமானத்தைப் பெறும் நாடுகளிலேயே பெருமளவான தற்கொலைகள் இடம்பெறுகின்றன" என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. தற்கொலை செய்துகொள்வது என்பது சட்டத்துக்கு எதிரான விடயமாகக் காணப்படுவதனால் தற்கொலையைத் தவிர்த்துக்கொள்ளும் விதமாக செப்ரெம்பர் 10 ஆம் திகதி உலக தற்கொலை தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையைப் பொறுத்தவரையில் வருடத்துக்கு 80 ஆயிரம் பேர் தற்கொலைக்கு முயற்சிக்கின்றனர். உலகளவில் தற்கொலை வீதத்தின் அடிப்படையில் இலங்கை நான்காவது இடத்தில் உள்ளது . உலக சுகாதார நிறுவனம் மேற்கொண்ட ஆய்விலேயே இது கண்டறியப்பட்டது. இலங்கையைப் பொறுத்தவரையில் தற்கொலை செய்துகொள்ளும் எண்ணம் யாருக்குத் தோன்றுகிறது? மன நோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள், மதுபோதை மருந்துகளுக்கு அடிமையானவர்கள், குடும்பம் மற்றும் தனிப்பட்ட வாழ்வில் ஏற்படும் சிக்கல்கள் காரணமாக மன அழுத்தத்திற்கு ஆளானவர்கள், பொருளாதாரச் சிக்கல்கள், வேலைவாய்ப்பின்மையால் சலிப்பு அடைந்தவர்கள், எயிட்ஸ், ஆஸ்துமா(ஈழை) போன்ற கடுமையான நோய்களால் பீடிக்கப்பட்டவர்கள், தனிமையில் வாடுபவர்கள் போன்றோரிடமே தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் அதிகம் மேலோங்குவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

அதிலும் பெரும்பாலான தற்கொலைகள் அற்பக் காரணங்களுக்காகவே மேற்கொள்ளப்படுகின்றன. கணவன் மனைவி சண்டை, தேர்வுகளில் தோல்வி, காதல் மற்றும் கடன் என்று சிறிய சிறிய சிக்கல்களைக் கூட எதிர்கொள்ள முடியாமல் பலர் தங்களது உயிரை மாய்த்துக்கொள்கின்றனர். அண்மையில் கூட யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்ற தற்கொலைச் சம்பவங்களை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

பெருகிவரும் தற்கொலைகளை தடுப்பதற்குரிய வழிவகைகளை முதலில் கண்டறிய வேண்டும். தற்கொலை அல்லது தற்கொலை முயற்சியைத் தவிர்க்க உளவளத்துணைச் சேவையைப் பெறல், தற்கொலை எண்ணத்துடன் இருப்பவரின் பிரச்சினைகளை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குதல், ஆதரவு வழங்குதல்,தற்கொலை அபாயம் காணப்படின் தற்கொலைக்குப்பயன்படுத்தக்கூடிய ஆபத்தான பொருள்களை அகற்றுதல், நல்ல நண்பர்களை உருவாக்கி மனச்சுமையைக் குறைத்து பொழுதுபோக்கு அம்சங்களில் ஈடுபடல், யோகாசனம், தியானம் போன்ற சாந்த வழிமுறைகளில் ஈடுபடவைத்தல், தற்கொலையால் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தல், சிந்தனை மற்றும் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தி தொடர் கண்காணிப்பை உறுதிசெய்தல் போன்ற செயற்பாடுகள் மூலம் தற்கொலை மனப்பாங்கினை குறைத்துக்கொள்ளலாம். மேலும் ஊடகங்களும் தற்கொலை தொடர்பான செய்திகளை வெளியிடும் போது இது தவறான முடிவு என்பதனை உறுபடுத்திக்கூறவேண்டும். இதனூடாக தற்கொலை தொடர்பான விழிப்புணர்வு சமூகத்தவர் மத்தியில் ஏற்ப டுத்தும் போது தற்கொலை எனும் கொடிய நோயினை முற்றிலும் ஒழிக்க முடியாவிட்டாலும் குறைக்கவாவது முடியும்.

# குப்பைகளை உண்ணும் மனிதர்கள்!

வீ. அனித்தா
ஊடகக்கற்கைகள் துறை,
மூன்றாம் வருடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

தலைப்பைப் பார்த்தவுடனேயே கொஞ்சம் அதிர்ச்சியாகத்தான் இருக்கும். ஆனால் அதுதான் உண்மை. அந்த உண்மையை அறிய இந்தக் கட்டுரை வழியே கொஞ்சம் பயணியுங்கள். குப்பை என்பது மனிதன் பயன்படுத்திய கழிவுகள் ஆகும். இவை உக்கும் குப்பை, உக்காத குப்பை என இரு வகைப்படும். ஆரம்ப காலங்களில் குப்பைக்குழிகள் இருந்தன. அதில் வீட்டுக் கழிவுகளைக் கொட்டி மட்கச் செய்வர். அது வேளாண்மைக்குப் பயன்படும். இன்று நம் பயன்பாட்டில் குப்பை மேடுகள் தான் அதிகம் இருக்கின்றன. அதிலும் மக்காத குப்பைகளே அதிகம்.குப்பைகளில் உணவுக்கழிவுகள்,மருத்துவக்கழிவுகள், இலத்திரனியல் கழிவுகள் அணுக் கழிவுகள், கட்டிடக் கழிவுகள், தொழிற்சாலைக் கழிவுகள் எனப் பலவகைக் கழிவுகள் உள்ளடங்குகின்றன.

இந்த வகையில் யாழ் நகரில் மட்டும் நாளொன்றுக்கு 105 தொன் கழிவுகள் சேர்கின்றன என யாழ். மாநகர சபை தெரிவிக்கின்றது. இதில் மக்கும் குப்பைகள் என்று உணவுக் கழிவுகள், கடதாசி, மாமிசக் கழிவுகள் என்பனவற்றையும், மக்காத குப்பைகள் என்று பிளாஸ்ரிக், கண்ணாடி, இறப்பர், உலோகங்கள் என்பவற்றையும் வகைப்படுத்தலாம். முன்னெல்லாம் நகரங்களில் கூட வீடுகளுக்குப் பின்னால் எருக்குழி என்று ஒன்று இருக்கும். உணவுக் கழிவுகளையும் வீணான காய்கறி மற்றும் பழங்களையும் அதில் போட்டு அதில் கொஞ்சம் மண்ணைத் தூவி விட்டால் போதும் சில மாதங்களில் தோட்டத்துக்கு உபயோகிக்கத் தக்க நல்ல உரம் தயாராகி விடும். ஆனால் இன்று வீடுகளே குழியளவு சுருங்கிப் போயுள்ளன. இதில் எருக்குழிக்கு எங்கே போவது?

தற்காலத்தில் மக்கள் தம் வீடு மாத்திரம் சுத்தமாக இருந்தால் போதும் எனும் எண்ணப் பாங்குடன் தமது வீட்டுக் கழிவுகளைத் தெருக்களில் வீசி எறிந்து வருகின்றனர். தினமும் இவ்வாறு கொட்டப்படும் கழிவுகளால் அப்பகுதியில் சுற்றித் திரியும் கால்நடைகள் மற்றும் நாய்கள் உணவிற்காக குப்பைகளைக் கிளறி விட்டுச் செல்வதால் குப்பைகள் நடுறோட்டில் சிதறிக் கிடப்பதைக் காண முடிகின்றது. யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் இவ்வாறு குப்பைகள் சிதறிக் கிடப்பதை அவதானிக்க முடிகின்றது. சிதறிக் கிடக்கும் குப்பைகளிலிருந்து கடும் துர்நாற்றம் வீசுவதுடன் கொசு மற்றும் ஈக்கள் உற்பத்தியாகி வைரஸ் காய்ச்சல் பரவும் அபாயமும் தற்காலத்தில் ஏற்பட்டு வருகின்றது. இது மாத்திரமின்றி டெங்கு நோய்க்கு நிகராக ஈக்களால் பரப்பப்படும் வாந்திபேதி, நெருப்புக் காய்ச்சல், வயிற்றோட்டம் போன்ற வியாதிகளும் தொற்றுகின்றன. மக்களாகிய நாம் நினைக்கின்றோம் குப்பைக் கழிவை எமது வீட்டிலிருந்து அகற்றினால் சரி அத்துடன் நாம் ஆரோக்கியமாக வாழலாம் என்று. ஆனால் இக்குப்பைகளால் பெருகும் நுளம்புகள், ஈக்கள் என்பன எம்மைத்தேடித்தான் வரும், எமக்குத் தீங்கு விளைவிக்கும் என்பதை எவரும் சிந்திப்பதில்லை.

நாம் போடுகின்ற குப்பைகள் அனைத்தும் எங்கே போகின்றன என்று நாம் என்றாவது சிந்தித்துள்ளோமா? நாளொன்றுக்கு ஒரு குடும்பம் மாத்திரமே அண்ணளவாக 3 கிலோகிராம் குப்பைகளைக் கொட்டுகின்றது. இவ்வாறு இருக்கையில் யாழ். மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் எத்தனை குடும்பங்கள் உள்ளன நாளொன்றுக்கு எவ்வளவு குப்பைகள் கொட்டப்படுகின்றன. இவையனைத்தும் சரியான முறையில் அகற்றப்படுகின்றனவா? என்று நாம் சிந்தித்திருக்கின்றோமா?

இன்றைய காலகட்டத்தில் பெயரே தெரியாத பல நோய்கள் எம்மை ஆட்கொண்ட வண்ணமுள்ளன. இதற்கெல்லாம் காரணம் நாம் போடும் குப்பை தான். குப்பைகளை அகற்றும் நகர சபையினர் எதற்காக உக்கும் குப்பை, உக்காத குப்பை என்று பிரித்துப் போடச் சொல்கின்றனர்? ஏனெனில் உக்கும் குப்பைகளை உரமாக மாற்றி விவசாயத்துக்குப் பயன்படுத்தவும் மக்காத குப்பைகளை மீள்சுழற்சி செய்து மீண்டும் நாம் உபயோகிக்கும் பொருள்களாகவும் மாற்றுவதற்காகவும் தான் குப்பைகளை தரம் பிரித்துக் கேட்கின்றனர். ஆனால் நாம் இரண்டு விதமான குப்பைகளையும் ஒன்றாகச் சேர்த்துப் போடுவதால் அக்குப்பைகள் உபயோகிக்கப்படாமல் போய் அவற்றை எரிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படும். இவ்விதம் குப்பைகளை எரிப்பதால் இதிலிருந்து டையாக்சின் வாயு வெளியேறுகிறது. இது காலத்திற்கும் அழியாமல் இருந்து புற்று நோயை ஏற்படுத்தும் வாயுவாகும்.

இது மாத்திரமின்றி உக்காத பிளாஸ்டிக் பொருள்களைக் கீழே போடுவதால் அதையுண்ணும் விலங்குகளின் உணவுக் குழாய்கள் பாதிக்கப்பட்டு அவை இறக்க நேரிடுகின்றது. மேலும் உக்காத கழிவுப் பொருள்கள் வேளாண்மை நிலங்களில் தங்கி அதன் வளத்தைக் குறைத்து நஞ்சாக்குகின்றன. பயிர் வளத்தையும் கெடுக்கின்றன. இந்தக்குப்பைகளை எரிக்கும் போது வெளியேறும் வாயுக்கள் நச்சுத் தன்மை உடையதால் ஊழியர்கள், அருகில் வசிக்கும் மக்கள் ஆகியோர் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். அதனால் தோல் நோய் முதல் புற்று நோய்களும் ஏற்படுகின்றன. மேலும் மூச்சுக் குழல் பாதிப்பு, குடல் புண், செரிமானமின்மை, நரம்புத் தளர்ச்சி, எதிர்ப்பு ஆற்றல் குறைவு போன்றவை ஏற்படக் கூடும் என்று பல ஆய்வுகள் கூறுகின்றன. குப்பை என்று சொன்னதுமே எமக்கு உலர் கழிவு (dry waste) ஈரமான கழிவு (wet waste) என்பன மாத்திரம் தான் தெரியும். அதில் மூன்றவதாக நிராகரிக்கப்பட்ட கழிவுகள் (Rejected waste) எனும் ஒரு வகைக் கழிவு உள்ளது. அது பற்றிய விழிப்புணர்வு எம்மில் பலருக்கு இல்லை. இந்த நிராகரிக்கப்பட்ட கழிவு வகைகளில் மருத்துவக் கழிவுகள், பம்பஸ், பெண்களின் நப்கின்ஸ், என்பன சேரும். இந்த நிராகரிக்கப்பட்ட கழிவுகளை மீள்சுழற்சியும் பண்ண முடியாது. மீள்பாவனையும் பண்ண முடியாது. இந்த நிராகரிக்கப்பட்ட கழிவுகளை 'Control burning' எனும் முறை மூலமாக அகற்றுகின்றனர். மேலும் நாம் போடுகின்ற குப்பையைத் தான் நாம் தினமும் சாப்பிடுகின்றோம் என்று கூறினால் நீங்கள் நம்புவீர்களா? நாம் போடும் பிளாஸ்டிக் குப்பைகள், வெயிலில் பட்டுநம் கண்ணுக்குத் தெரியாத ஒரு விதமான பவுடர் துகள்களாக மாறி விடுகின்றன. இவற்றைக் கோழி, ஆடு, மீன் என்று எல்லா உயிரினங்களும் உண்கின்றன அதன் பிறகு அந்த ஆடு, கோழி, மீன் என்பவற்றை நாம் சாப்பிடுகின்றோம். இந்த வகையில் எம் வயிற்றுக்குள்ளும் குப்பை போகின்றது.

இது மாத்திரமல்ல நாம் குடிக்கும் தண்ணீரில் பிளாஸ்டிக் கலந்திருக்கிறது என்பதை ஓர் ஆய்வில் நிறுவியுள்ளனர். இவ்விதம் எமது வீட்டை சுத்தம் செய்யவேண்டும் என்று நினைத்து நாம் போடும் குப்பை இறுதியாக எமது வயிற்றுக்குள்ளே தான் போகின்றது என்பது கொஞ்சம் அதிர்ச்சியான விடயம் தான். ஒவ்வொரு குடும்பத்தாரும் தம் வீட்டில் சேரும் கழிவுகளைத் தரம் பிரித்து உக்கக்கூடிய கழிவுகளை தனியாகவும் உக்காத கழிவுகளைத் தனியாகவும் மாநகராட்சி மன்ற ஊழியர்களிடம் வழங்கினால் குப்பைகள் சேர்வதையும் குறைக்க முடியும். மேலும் மக்களாகிய நாம் வெறும் வீடுகளில், சாலையோரங்களில்,கழிவு நீர்க் கால்வாய்களில்,நீர் நிலைகளில் குப்பைகளைக் கொட்டுவதைத் தவிர்க்க வேண்டும். மேலும் இடவசதியுள்ளவர்கள் வீட்டிலேயே கழிவுகளை ஓரிடத்தில் சேகரித்து வைத்து கூட்டெரு தயாரிக்கவும் முடியும்.

இப்பொழுது மனிதர்களாகிய நாம் யோசிக்க வேண்டியது சத்தான உணவுகளைச் சாப்பிடப் போகின்றோமா? இல்லை குப்பைகளைச் சாப்பிடப் போகின்றோமா? என்று தான். நாம் தான் அரசிற்கு வரிப்பணம் செலுத்துகின்றோமே குப்பைகளை அகற்ற வேண்டியது அரசினுடைய கடமை தானே நாம் ஏன் அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டும் என்று யோசிப்பீர்கள். நாம் போடும் குப்பையை நாம் தானே சரிவர அப்புறப்படுத்த வேண்டும்.

நமது மூதாதையர்கள் நமக்காக விட்டுச் சென்ற அழகான பூமியை குப்பைகூளமாக மாற்றி விட்டோம் என்பதையுணர்ந்து இனிமேலும் இத் தவறைப் புரியாமல் சுத்தமான சுவாசக் காற்றை எதிர் கால சந்ததியினருக்கு வழங்குவோம்.

# பிள்ளைகளைச் சுயமாக சிந்திப்பதற்கு விடுங்கள்!

யாழ்ப்பாணம், டிசெ.31

பிள்ளைகள் சுயமாகத் தமது ஆற்றல்களையும், திறன்களையும் வெளிக்காட்டுவதற்கு பெற்றோர் இடமளிக்க வேண்டும். இவ்வாறு உடற் கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத் தலைவர் ப.தர்மகுமாரன் தெரிவித்தார்.

வடக்கு விளையாட்டுக் கல்லூரியால் நடத்தப்பட்ட மேசைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

"பெற்றோர் தமது பிள்ளைகளைச் சுயமாகச் சிந்திக்கவோ அல்லது அவர்களிடம் இருக்கின்ற ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கோ சந்தர்ப்பம் வழங்குவது குறைவாகக் காணப்படுகிறது. இதற்கு மாறாக தாம் நினைத்தவற்றையும் தம்மால் சாதிக்க முடியாதவற்றையும் பிள்ளைகள் மீது திணிக்கிறார்கள்.

இதனால் பிள்ளைகள் சுயமாக சிந்திக்கும் ஆற்றலை இழக்கின்றனர். பெற்றோரின் சிந்தனையைச் சுமந்து பயணிக்கும் போது சுமை தாங்கமுடியாது பல்வேறு நெருக்கீடுகளுக்கு உள்ளாகின்றனர். இதன்மூலம் கல்வி, இணைப்பாட விதான செயற்பாடுகளில் சாதிக்கத் தவறுகின்றனர்.

வீட்டில் நாம் மரத்துக்கு நீர் ஊற்றிப் பசளை இட்டு வளர்ப்பதால் அதன் வேர்கள்பரப்பப்படாது அது எம்மையே நம்பியிருக்கும்.

சிறு காற்று வீசினால் கூட சரிந்துவிடும். ஏனெனில் மரத்துக்குத் தேவையானது கிடைப்பதால் மண்ணின் ஆழத்துக்கு வேர்கள் வியாபிப்பதில்லை. மாறாகத் தன்னிச்சையாக வளரும் மரம் தனது உணவை, நீரை தானே தேடுவதால் அதன் வேர்கள் ஆழமாகவும், மண்ணை ஊடுருவியும் மண்ணுடன் வியாபித்தும் காணப்படும். இந்த மரத்தைப் புயல் காற்றும் அசைக்காது.

இதேபோலவே பிள்ளைகளைச் சுயமாகச் சிந்திக்கச் செயலாற்றவிடாது பெற்றோர்களே எல்லாவற்றையும் செயற்படுத்துவதால் உடனடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாமல், உயிரை மாய்க்க நினைக்கிறார்கள்.

மாறாக சுயமாக சிந்திக்க, சவால்களை, பிரச்சினைகளை எதிர்கொள்ள, வெற்றி தோல்விகளை மதிக்க இடமளித்தால் எந்தச் சூழலிலும் வாழ்க்கைக்குத் தேவையானவற்றைப் பெற்றுக்கொள்வார்கள்" என்றார். (ஐ-50)

# இன்னும் 1 மாதம் இலவச விசா!

கொழும்பு, டிசெ. 31

கடந்த அரசால் கொண்டுவரப்பட்ட இலவச வீசா நடைமுறை, அடுத்த ஆண்டுடன் காலாவதியாகவுள்ளதால் அதனை மேலும் ஒரு மாதகாலத்திற்கு நீடிப்பது குறித்து அரசு ஆராய்ந்து வருவதாக கைத்தொழில் ஏற்றுமதி முதலீட்டு ஊக்குவிப்பு மேம்பாடு மற்றும் சுற்றுலா, விமானத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்த ஏப்ரல் 21 பயங்கரவாத தாக்குதல்களின் பின்னர் இலங்கையின் சுற்றுலாத் துறையை ஊக்குவிப்பதற்காக இலவச வீசா நடைமுறையை 48 நாடுகளுக்கு விஸ்தரிக்க கடந்த அரசு நடவடிக்கையெடுத்திருந்தது.

இந்த இலவச வீசா நடைமுறையால் 400 கோடி ரூபா இலங்கைக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதுடன், இலவச வீசா நடைமுறையின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகைத்தரவில்லையென குடிவரவுமற்றும்குடியகல்வுதிணைக்களம்சுட்டிக்காட்டி யுள்ளது. கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்கள் காரணமாக நாட்டின் சுற்றுலாத் துறை பெரும் வீழ்ச்சிகண்டிருந்ததுடன், உள்நாட்டில் பல்வேறு தேவைகளின் நிமித்தம் தங்கியிருந்த வெளிநாட்டவர்களும் நாட்டைவிட்டு வெளியேறிச் சென்றனர்.

என்றாலும், சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதற்காக பல நாடுகளுக்கு இலவச வீசா நடைமுறையை கடந்த அரசு அறிமுகப்படுத்தியது.

இவ்வாண்டு இறுதியுடன் குறித்த இலவச வீசா முறைமை காலாவதியாவதால் இதுகுறித்து அரசு கவனம் செலுத்தியுள்ளது. எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம)

# தமிழ் மக்களை வதைக்கின்றது கோத்தா அரசு!

## வைகோ விளாசல்

கொழும்பு, டிசெ. 31

இலங்கையில், தமிழ் மொழியைப் புறந்தள்ளி, தமிழர்களை மொழி, இன ரீதியாகத் தனிமைப் படுத்தும்நடவடிக்கையை கோத்தாபய அரசு மேற்கொண்டு வருவதாகம.தி.மு.க பொதுச் செயலர் வைகோதெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வைகோ நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

'இலங்கையின் சுதந்திர தினத்தில், அந்த நாட்டின் தேசிய கீதம் சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் பாடப்பட்டு வந்ததை மாற்றி, இனி தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்படமாட்டாது எனஅமைச்சர்ஜனகபண்டாரதென்னக்கோன் அறிவித்தது தமிழ் மக்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

மேலும், இலங்கையின் அரசமைப்பின்படி இணை ஆட்சி மொழியாகவும், இணை தேசிய மொழியாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள தமிழ் மொழியைப் புறந்தள்ளி, தமிழர்களை மொழி, இன ரீதியாகத் தனிமைப்படுத்தும் நடவடிக்கை யை கோத்தாபய அரசு மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலையில், தமிழ் நாட்டு மீனவர்களையும் அச்சுறுத்தும் செயலில் கோத்தாபய ராஜபக்ஷ அரசு இறங்கி உள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம் - ஜெகதாபட்டினம் துறை முகத்திலிருந்து டிசெம்பர் 27ஆம் திகதி மூன்று விசைப்படகுகளில் 13 மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றனர். எல்லை தாண்டியதாக இவர்கள் அனைவரையும் இலங்கைக் கடற்படைக் கைது செய்துள்ளது. மேலும் மீன்பிடித் தொழிலுக்குப் பயன்படுத்திய மூன்று விசை ப்படகுகளையும் பறிமுதல் செய்து, இலங்கைக்குக் கொண்டு சென்றுள்ளது. இந்த நிகழ்வு தமிழக மீனவர்களுக்கு அதிர்ச்சியையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ள நிலையில், மீண்டும் நேற்று கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக்கொண்டிருந்த தமிழக மீனவர்களை கடற்படையினர் விரட்டி அடித்துள்ளனர். அத்துடன் பல இலட்சம் ரூபாய் மதிப்பிலான மீன்பிடிக் கருவிகளையும் கடற்படை சேதப்படுத்தி இருக்கிறது.

கோத்தாபய ராஜபக்ஷ அரசு தொடர்ந்து தமிழர்கள் மேல் வெறுப்பை காட்டும் செயல் கடும் கண்டனத்துக்குரியது. ஈழத்தமிழர்கள் மீதும், தமிழ்நாட்டு மீனவர்கள் மீதும் வன்மத்தை காட்டி வரும் கோத்தாபய ராஜபக்ஷ அரசுக்கு, இந்திய அரசு கடும் கண்டனம் தெரிவிக்க வேண்டும் - என்றார். (ம)



# நவசமசமாஜ கட்சியின் 42ஆவது ஆண்டு விழா!

கொழும்பு, டிசெ. 31

நவசமசமாஜக் கட்சியின் 42ஆவது ஆண்டு விழா நாளை முதலாம் திகதி புதன்கிழமை கொழும்பு புதிய நகர மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும் இந்த நிகழ்வில் 'ஜனநாயகத்துக்கான வலிமையான மாற்றம்' என்ற தலைப்பில் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

இந்தத் தலைப்பின் கீழ் பேராசிரியர் விக்கிரமபாகு கருணாரத்ன, சட்டத்தரணி மு.சிவகுருநாதன், தொழிற் சங்கத் தலைவர் தோழர் டி.எம்.டி. அபயரட்ண, நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், இடதுசாரித் தலைவர் தோழர் ராஜா உஸ்வெற்றிகேய, மனித உரிமை ஆர்வலர் தோழர் பிலிப் திஸாநாயக்க ஆகியோர் உரையாற்றவுள்ளனர். (ம-22)

# திருமுறைகளுக்கு முதலிடம் வேண்டும்

## இந்து சமயப் பேரவையின் தலைவர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், டிசெ. 31

சைவாலயங்களில் தமிழ் வேதமான தேவார திருவாசகங்களுக்கு முதலிடம் வழங்குவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். வேதசாரமான தமிழ் திருமுறைகள் பக்தியை வளர்க்கும் ஆத்மீக சாதனமாகத் திகழ்கின்றன.

தமிழை ஆட்சி மொழியாக்க வேண்டுமென்று பல்வேறு வகையான போராட்டங்களை நடத்துகின்ற நாம் தமிழ்த் திருமுறைகளுக்கு உரிய அந்தஸ்து கொடுக்காதது பெரும் கவலை அளிக்கிறது.

இவ்வாறு இந்துசமயப் பேரவையில் நேற்று முன்தினம் நடைபெற்ற திருவாசகப் பெருவிழாவுக்குத் தலைமை தாங்கி உரையாற்றிய, பேரவைத் தலைவர் சி.சக்திகிரீவன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாபெரும் இயக்கத்தை நடத்தி சைவாலயங்களில் தமிழ் திருமுறைகளுக்கு உரிய இடம் கிடைக்க ஆவன செய்தார்.

இன்று ஆறுமுகநாவலர் பிறந்த யாழ்ப்பாண மண்ணில் திருமுறைக்குக் கௌரவம் கிடைக்கிறதா ?ஆலயங்களில் வடமொழி வேதம் ஓதிய பின் அதே போன்று தமிழ் திருமுறைக்கும் உரிய இடம் வழங்கப்பட வேண்டும். இவற்றையெல்லாம் மக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்கு முறையான சைவப் பிரசாரகர்களை உருவாக்க வேண்டியது இன்றைய தேவையாக உள்ளது என்றார்.

நிகழ்வில் தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய பூசகரும் திருப்பணிச்சபை தலைவருமான குகஸ்ரீ ஆறுமுகசாமி ஐயர், சிவசண்முக ஐயர், முன்னைநாள் உதவி மாவட்டச் செயலர் சிவத்திரு. வீ.தி.அ.தில்லைநாதர் மற்றும் சிவத்திரு.வேலாயுதர் விநாசித்தம்பி ஆகியோர் கந்தபுராணம், பெரியபுராணம், திருவாதவூரர் அடிகள் புராணம் போன்ற தெய்வீக நூல்களுக்கு பொருள் கூறுவதைப் பாராட்டி 'பௌராணிகவித்தகர்' எனும் உயரிய விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (க)





## மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

யாழ்ப்பாணம்.டிசெ.31

மகேஸ்வரனின் 11 ஆம் ஆண்டு நினைவாக தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் வைத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில், சி. சத்தியசீலன் மற்றும் இ.தவலிங்கம் ஆகியோர் வழங்கினர். (க)




## வரிச்சலுகையில் பயன் உள்ளதா?

### ஆராய்கிறது அரசு

கொழும்பு, டிசெ. 31

குறைக்கப்பட்ட வரிச் சலுகைகள் மக்களுக்கு கிடைக்கப் பெறுகின்றனவா என அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் பரிசீலிக்க அரசு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ தலைமையிலான புதிய அரசின் முதலாவது அமைச்சரவைக் கூட்டத்திலேயே வற் வரி உட்பட 8 முக்கிய வரிகள் குறைக்கப்பட்டன.

வற் வரி 17 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாக குறைக்கப்பட்டது. அத்தியாவசியப் பொருள்கள் மீது முக்கிய தாக்கம் செலுத்தும் வற் வரி குறைக்கப்பட்டும் இன்னமும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளில் பெரிய மாற்றங்கள் ஏதும் நிகழவில்லை.

அதேபோன்று கோதுமை மா இறக்குமதிக்கான வரியும் தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளது. கோதுமை மாவின் விலை குறைக்கப்படாமல் பேக்கரி உணவுகளின் விலையைக் குறைக்க முடியாத சூழல் நிலவுவதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், எதிர்வரும் புதன்கிழமை நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் வரிச் சலுகை மக்களுக்கு கிடைக்காமை குறித்து முக்கிய கவனம் செலுத்தப்படவுள்ளதாக அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார். இதேவேளை, கோத்தாபய ராஜபக்ஷவும் இதுதொடர்பில் ஆராயுமாறு துறைசார் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது. (ம-24)



# புத்தாண்டில் மையம்கொள்ளும் அரசியல் புயல்

### ஜனவரி முதலாவது வாரத்தில் பிரதான கட்சிகள் கொழும்பில் முகாமிட்டு பேச்சு



**கொழும்பு, டிசெ. 31**

**2020 ஏப்ரல் இறுதி வாரத்தில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், முதல் காலாண்டுக்கான அரசியல் நகர்வுகள் பற்றி அலசி அராய்வதற்காக பிரதான கட்சிகள் ஜனவரி முதலாவது வாரத்தில் கொழும்பில் விசேட கூட்டங்களை ஏற்பாடு செய்துள்ளன.**

இக்கூட்டங்களில் கட்டாயம் பங்கேற்குமாறு கட்சிப்பிரமுகர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன்படி பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனவரி 2ஆம் திகதி சிறிகொத்தாவில் நடைபெறவுள்ளது.

கட்சித் தலைமைத்துவப் பிரச்சினை, மத்திய செயற்குழுவுக்கான புதிய நியமனங்கள், சபை நடவடிக்கைகள் உட்பட மேலும் சில முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடி இறுதி முடிவுகள் எட்டப்படவுள்ளன என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேநாளில் மாலை ஐக்கிய தேசியக்கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக்கட்சிகளின் தலைவர்களுக்கிடையிலான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இவ்விரு சந்திப்புகளின்போது தமக்குச் சாதகமான தீர்மானங்கள் எடுக்கப்படாவிட்டால், சஜித் பிரேமதாச தனிவழியில் பயணிப்பது பற்றி தீர்க்கமான முடிவை எடுக்கலாம் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்களிலிருந்து தகவல் வெளியிடப்பட்டுள்ளது. அத்துடன், அரசியல் பழிவாங்கல் தொடர்பில் சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையொன்றை முன்வைப்பது குறித்தும் மேற்படி சந்திப்புகளில் ஆராயப்படவுள்ளது.

**ஆளுங்கட்சியின் வியூகம்**

கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் ஜனவரி 2ஆம் திகதி மாலை அல்லது 3ஆம் திகதி காலை நடைபெறவுள்ளது.

அரசுக்கு ஆதரவளிக்கும் பங்காளிக்கட்சிகளின் தலைவர்களுக்கும், ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கிடையிலான சந்திப்பு 2 ஆம் திகதி மாலை நடைபெறவுள்ளதால், நாடாளுமன்றக் குழு 3ஆம் திகதி மாலை கூடும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. அரசின் இடைக்கால நிதி அறிக்கை, முன்வைக்க வேண்டிய சட்டவரைவுகள், ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை என்பன தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது. அத்துடன் 3ஆம் திகதி நாடாளுமன்ற அமர்வு முடிவடைந்த பின்னர், பொதுத்தேர்தலில் போட்டியிடும் விதம் பற்றி பொதுமக்கள் முன்னணிக்கும், சுதந்திரக் கட்சிக்கும் இடையில் சந்திப்பு நடைபெறலாம் என்றும், அதனை அடிப்படையாகக்கொண்டு, முடிவுகளை எடுப்பதற்காக இவ்வாரத்தில் சு.க.வின் மத்திய செயற்குழு கூடும் என்றும் அறியமுடிகின்றது.

இதற்கிடையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் ஜனவரி 3ஆம் திகதி காலை, நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் உள்ள இலங்கை தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

பங்காளிக்கட்சிகளின் தலைவர்கள் 2ஆம் திகதி காலைவேளைக்குள் கொழும்பு வந்துவிட்டால் அன்று மாலையே நாடாளுமன்றக் குழு கூடும் என கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

அரசியல் தீர்வைப் பெறுவதற்கான நகர்வுகள், நாடாளுமன்றத் தேர்தல் உட்பட சமகால விவகாரங்கள் சம்பந்தமாக இதன்போது விரிவாக கலந்துரையாடப்படவுள்ளன.

அதேவேளை, ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுவும் சபை அமர்வு ஆரம்பிப்பதற்கு முன்னர் கூடவுள்ளது.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் அரசியல் பீடமும் ஜனவரி முதல் வாரத்துக்குள் கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-44)



காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தின் திரு வெம்பாவை நிகழ்வை முன்னிட்டு சிவகெளரி சனசமூக நிலையத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் சிரமதானப் பணிகள் கடந்த சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டன. பஞ்சரதம் பவனி வரும் மூன்றாம் வீதியின் பெரும் பகுதிகள் துப்புரவு செய்யப்பட்டன. (க-21)




## பரிசளிப்பு நிகழ்வு

கிளிநொச்சி,டிசெ.31

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் இயக்கச்சி முள்ளிப்பற்று உப அலுவலகத்தால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் சிறப்பாக இடம்பெற்றது.

சபைத் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேஷ் தலைமையில் காலை 9 மணிக்கு ஆரம்பமான நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கலந்து கொண்டு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கினார்.

அத்துடன் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் இதன்போது வழங்கப்பட்டன. (ஜ-6)



# தமிழ்மொழிக்கான தடைவிதிப்பு
# நாடாளுமன்றில் எதிரொலிக்கும்!
## கூட்டமைப்பு அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 31

'சிங்கள மொழியில் மாத்திரம் தேசிய கீதம் பாடப்பட வேண்டும் என்ற அறிவிப்பை ஏற்றுக்கொள்ள முடியாது. சிங்கள மக்கள் வாக்களித்து விட்டார்கள் என்பதற்காக, நாட்டை சிங்களமயப்படுத்துவது கண்டிக்கத்தக்கது. இந்த விடயம் தொடர்பில் எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வில் பேசப்படும்' இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

'தேசிய கீதத்தை தமிழ் மொழியில் பாட முடியாது என்ற அறிவிப்பைத் நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இலங்கையில் சிங்கள மொழி எவ்வாறு அரசகரும மொழியாகக் காணப்படுகின்றதோ, அதே போன்று தமிழ் மொழியும் அரசகரும மொழியாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. சிங்கள மொழிக்கு உள்ள அதிகாரம், தமிழ் மொழிக்கும் காணப்படுகின்றமையால், அதனை யாரும் தடுத்து நிறுத்திவிட இடமளிக்க முடியாது' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். (ம-22)

# 138
## சுகாதாரப் பரிசோதகர்களுக்கு மதிப்பளிப்பும் விருதும்!



சாவகச்சேரி, டிசெ. 31

தமது பிரதேசங்களில் புகைப்பொருள் விற்பனையை வர்த்தகர்களினதும் பொது மக்களினதும் ஒத்துழைப்புடன் இல்லாது செய்த பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மதிப்பளிக்கப்பட்டுள்ளனர்.

புகைப்பொருள் மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபை விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன .

புகைப்பொருள் அற்ற இலங்கை என்னும் செயற்றிட்டத்தின்கீழ் இலங்கை முழுவதும் புகைப்பொருள் அற்ற வலயங்களை உருவாக்குதல் சபையின் நோக்கமாகவுள்ளது.

கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடைபெற்ற நிகழ்வில் நாட்டிலுள்ள 138 பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு விருதுகளும் சான்றிதழ்களும் அண்மையில் வழங்கப்பட்டன. (து-9)

## கோழி இறைச்சிக் கடை நாளை முதல் மீண்டும்

தென்மராட்சி,டிசெ.31

மூடப்பட்டிருந்த எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தையின் கோழி இறைச்சிக் கடை நாளை தொடக்கம் மீண்டும் இயங்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி பிரதேச சபையின் எழுதுமட்டுவாழ் வட்டார உறுப்பினர் இ.தெய்வேந்திரம்பிள்ளையின் முயற்சியால் கடந்த 2015 ஆம் ஆண்டு சபை நிதியில் கோழி இறைச்சி விற்பனைக் கடை அமைக்கப்பட்டு வருடாந்த குத்தகைக்கு வழங்கப்பட்டது.

கடந்த இருவருடங்களாக பிரதேச சபையால் கேள்விகள் கோரப்பட்டபோதிலும் குத்தகைக்கு எடுக்க எவரும் முன்வரவில்லை.

இதனால் அப் பகுதி மக்கள் கோழி இறைச்சி வாங்குவதற்கு கொடிகாமம் அல்லது பளைக்குச் செல்லவேண்டிய நிலை காணப்பட்டது.

இந்த நிலையில் அடுத்த வருடத்துக்கான கேள்வி அறிவித்தல் கோரப்பட்டு வட்டார உறுப்பினரின் முயற்சியால் இறைச்சிக் கடை நாளை திறக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஜ-9)

### மோ. சைக்கிளில் சென்றவர் காயம்

வவுனியா, டிசெ. 31

கண்டி வீதி வவுனியாவில் திறந்த பல்கலைக் கழகம் முன்பாக நேற்று மதியம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் வான் விபத்தில் மோட்டார்சைக்கிளில் சென்றவர் காயமடைந்தார். போக்குவரத்துப் பொலிஸார் விசாரணை நடத்தி இரண்டு வாகனங்களையும் பொலிஸ் நிலையத்துக்குக்கொண்டு சென்றனர். (து)

## பிணைமுறி மோசடியாளர்களை
# உடன் கைதுசெய்க!
## மனோ ஆவேசம்

கொழும்பு, டிசெ. 31

ஜனாதிபதி தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிக்கு அமைய மத்திய வங்கி பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய பிரிவினரை உடனடியாக கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். கேகாலையில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போதைய அரசு ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் பிணைமுறி மோசடி தொடர்பாகவும் எம்.சி.சி. ஒப்பந்தம் தொடர்பாகவும் அதிகம்பேசப்பட்டது. தற்போது அந்த விடயங்கள் குறித்து எந்தவொரு கதையும் இல்லை. பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய பிரிவினரை உடனடியாக கைதுசெய்யவேண்டும். சிங்கப்பூருக்குச் சென்று அர்ஜுன் மஹேந்திரனை அழைத்து வாருங்கள். கூறிய வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் தற்போது சம்பிக்கரணவக்கமற்றும்ராஜிதசேனாரத்னவின் பின்னால் அரசு ஓடுகிறது - என்று மனோமேலும்தெரிவித்தார். (ம)

### பாடசாலை தவணை ஆரம்பம்

வடமராட்சி,டிசெ.31

நெல்லியடி மத்திய கல்லூரியில்க.பொ.த(சாத.) பரீட்சைக்கான விடைத்தாள் மதிப்பீட்டுப்பணி நடைபெற்றுக்கொண்டிருப்பதால், எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமையே பாடசாலை ஆரம்பமாகும் என்று அதிபர் அறிவித்துள்ளார். (க)



வலி. மேற்கு பிரதேச செயலர் பிரிவின் பல்வேறு பகுதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் அண்மையில் மேற்கொள்ளப்பட்டன.

### புதுவருட பஜனை

யாழ்ப்பாணம், டிசெ.31

சத்திய சாயி சேவா நிலையத்தால் 2020 ஆம் ஆண்டு புதுவருட சிறப்பு பஜனை நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 6.30 மணி தொடக்கம் 7.30 மணிவரை நிலையத்தில் நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)

### வடக்கு ,கிழக்குக்கு வெளியே வாழும்

# தமிழரின் நிம்மதியையும் பறிக்கிறது கூட்டமைப்பு

### கடுமையாகச் சாடுகிறார் சங்கரி



**கிளிநொச்சி, டிசெ. 31**

**வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களின் இன்றைய அவல நிலைக்குக் காரணம் தமிழரசுக் கட்சியே.நிலைமை இவ்வாறிருக்கும்போது வடக்கு, கிழக்குக்கு வெளியே தேர்தலில் போட்டியிட இருப்பதாகத் தகவல்கள் வருகின்றன. தயவுசெய்து அவர்களையாவது நிம்மதியாக வாழவிடுங்கள். இவ்வாறு தனது அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் ஆனந்தசங்கரி.**

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

தமிழர்கள் ஏதோ ஓரளவு வறுமையான வாழ்விலும் தங்கள் குடும்ப உறுப்பினர்களுடன் செம்மையாக வாழ்ந்து வருகின்றார்கள்.

அதுமட்டுமல்ல பல வருடங்களாக அரும்பாடுபட்டு உருவாக்கிய பல தொழிற்சங்கங்கள் இன்றும் அங்கு பலமாகவே இருக்கின்றன. காலத்திற்குக் காலம் மாறிமாறி ஆட்சிக்கு வரும் அரசுகள் மூலம் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுத் தங்கள் மக்களுக்கு சேவையாற்றி வருகின்றார்கள்! அங்குள்ள தலைவர்கள் அந்த மக்களின் பிரச்சினைகளையும், தேவைகளையும் பூர்த்தி செய்வார்கள்!

28 வருடங்களாக இயங்காமலிருந்த தமிழரசுக் கட்சியை தூசுதட்டி ஒரு சிலரின் பதவி மோகங்களுக்காக விடுதலைப் புலிகளைப் பயன்படுத்தி 2004ஆம் ஆண்டுத் தேர்தலில் சாதித்தது என்ன?. இணைந்த வடக்கு, கிழக்கு பிரிக்கப்பட்டபோது வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தார்கள். அதேபோல சர்வதேசமே பார்த்து வியந்துபோன விடுதலைப் புலிகள் அமைப்பு அழிந்துபோன போதும் அமைதியாக வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தார்கள். அத்துடன் முள்ளிவாய்க்கால் போரில் மக்களின் வாழ்வும்;, சொத்துக்களும் நாசமாகியபோதும் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக தமிழ் மக்களின் பலமான விடுதலைப் புலிகள் அமைப்பு அழிக்கப்பட்டது நல்ல விடயம் என்று இப்போதுதான் திருவாளர் சம்பந்தன் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

தந்தைசெல்வா 1949ஆம் ஆண்டில் உருவாக்கிய தமிழரசுக்கட்சி வேறு. இப்போதுள்ள தமிழரசுக் கட்சி வேறு. 1972ஆம் ஆண்டில் தந்தைசெல்வா ஜீ.ஜீ.பொன்னம்பலத்துடனும் மலையகத் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானுடனும் இணைந்து தலைமையைப் பகிர்ந்துகொண்ட கட்சியே தமிழர் விடுதலைக் கூட்டணி! இந்த நிலையில் இன்றுள்ள தமிழரசுக் கட்சியின் செயற்பாட்டால் ஆமை புகுந்த வீடாகி விடக்கூடாது.

நல்லாட்சி அரசுக்கு முண்டு கொடுத்து எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெற்றவர்கள் யாரேனும் ஒரு அரசியல் கைதியையாவது விடுதலை செய்யமுற்பட்டார்களா? வடக்கு, கிழக்குக்கு வெளியே வாழும் தமிழர்களை கை, கால்கள் சேதமடையாமல், துப்பாக்கிக் குண்டுகளுக்கும் இரையாகாமல் தான் உண்டு தன் வேலையுண்டு என இருக்கவிட்டாலே போதும். தமிழரசுக் கட்சிதன் இருப்பைத் தக்கவைக்க அந்த அப்பாவி மக்களை பகடைக்காய்களாக்காமல் இருக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் - என்றுள்ளது. (ம)

# புத்தாக்கங்களில் தனியான கவனம்

**அமைச்சர் விமல் தெரிவிப்பு**



கொழும்பு, டிசெ. 31

புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு முக்கியத்துவத்தைக் கொடுப்பதுடன், புத்தாக்க முயற்சிகளில் ஈடுபடும் இளைஞர், யுவதிகள் குறித்து முக்கிய கவனத்தையும் செலுத்தியுள்ளதென அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அதேபோன்று சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகத்திற்கும் கைத்தொழில் அபிவிருத்தி குறித்தும் அரசு அதிமுக்கியத்துவம் கொடுத்துவருவதாகவும் அவர் கூறியுள்ளார். பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்சதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வாழைநார் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட நூலில் ஆடைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இந்த நிகழ்வு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இளவரசர் விஜயன் இலங்கைக்கு வருகை தந்தபோது குவேனி பருத்தி நூலில் ஆடை தயாரித்துக்கொண்டிருந்தார் என்று நாங்கள் பெருமையாக பேசுகிறோம்.

எமது ஆடை உற்பத்தித்துறைக்கு ஒரு வரலாறு உள்ளது. அத்தகைய வரலாறு இருந்தபோதிலும் அதற்கு ஏற்றவாறு ஒரு பதில் இன்று எம்மிடமில்லை. ஆடை உற்பத்தித் தொழில் வீழ்ச்சியடைய திறந்த பொருளாதாரத்திற்குள் நாம் முழுமையாகச் சென்றமையே காரணமாகும்.


தமது கைத்தொழில் வீழ்ச்சியடையும் வகையில் எந்தவொரு நாடும் சந்தையைத் திறந்துவிடவில்லை. என்றாலும், எவ்வித பாதுகாப்பு அரண்களும் இல்லாது எமது சந்தையை சர்வதேச நிறுவனங்களுக்குத் திறந்து விட்டுள்ளோம். அதனால்தான் எமது கைத்தொழில் மற்றும் உற்பத்திகள் வீழ்ச்சிகண்டன.


இவ்வாறு ஆடைத்தொழில் வீழ்ச்சிக்கண்டுள்ள சூழலில் வாழை நார்மூலம் ஆடை உற்பத்தி செய்யும் முறையை ஆரம்பித்துள்ளமை ஒரு நற்செய்தியாகும். இரசாயன உரம் மூலம் உற்பத்தி செய்யப்படும் விவசாயத்துக்கு உலகில் பெரும் கேள்வி நிலவுகிறது.

அதேபோல் இரசாயனக் கழிவுகள் மூலம் உற்பத்தி செய்யப்படும் ஆடைக்கும் அதிகளவான கேள்வியுள்ளது. பருத்தி, கம்பளி ஆடைகளுக்கான கேள்வி உலகளாவிய ரீதியில் அதிகரித்துள்ள சூழலில் நாம் வாழை நாரில் ஆடையை உற்பத்தி செய்ய ஆரம்பித்துள்ளோம். அவ்வாறான ஓர் உரிமத்தை நாம் கொண்டுள்ளமை சிறப்பான விடயம். ஆடைகள் தொடர்பில் உலகளாவிய ரீதியில் கேள்விகள் உள்ள இடத்தை நோக்கி இந்த ஆடைகளைக் கொண்டுசெல்வது எமது இலக்காகும். இவ்வாறு புத்தாக்க முயற்சியை ஏற்படுத்தியுள்ளவர்களுக்குத் தேவையான உதவிகள் அரசால் வழங்கப்படும் - என்றார். (ம-24)










# மன்னாரும் வண்ணமயம்!



மன்னார்,டிசெ.31

'நாட்டை அழகுபடுத்துவோம்' செயற்திட்டத்தின் அடிப்படையில் தன்னார்வம் மிக்க இளைஞர்களின் முயற்சியால் மன்னார் நகர் பகுதி முழுவதும் வண்ணமயமான ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. மன்னார் மாவட்டச் செயலகம் மற்றும் பொலிஸ் நிலையப் பகுதிகளில் தமிழர் பாரம்பரியங்கள், மன்னார் பகுதியில் காணப்படும் சுற்றுலாத் தலங்கள் ஆகியன தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமான ஓவியங்கள், நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் வகையிலான ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. மாவட்ட இளைஞர்களின் பல நாள் முயற்சியிலும், மன்னார் வாழ் மக்களின் நன்கொடைகளின் மூலமும் இந்த் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. இராவணன்,பண்டார வன்னியன்,எல்லாளன்போன்றதமிழ் மன்னர்களின் ஓவியங்கள் அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளன. இளைஞர்களின் முயற்சிக்கு சமூக ஆர்வலர்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். (சு-56)

# பழிவாங்கும் பொலிஸ்!

## மன்னாரில் தொடரும் அலைக்கழிப்பு அவலம்

மன்னார், டிசெ.31

தலைமன்னாரில் குடும்பம் ஒன்றுக்கு எதிராகச் செயற்பட்டார் என்று குற்றஞ்சாட்டப்படும் பொலிஸ் அதிகாரி, அங்கிருந்து இடமாற்றம் செய்யப்பட்டார். எனினும், மீண்டும் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அதே குடும்பத்தைப் பழிவாங்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. பொலிஸ் அதிகாரியின் அதிகார துஷ்பிரயோகத்தால் அந்தக் குடும்பத்தினர் அலைக்கழிக்கப்பட்டு, சீரழிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தலைமன்னாரில் பொலிஸ் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய ஒருவர் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பெண் ஒருவரை தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி, பாலியல் சேட்டையில் ஈடுபடுத்த முயற்சித்துள்ளார். தவறான முறைப்பாடு ஒன்றைப் பயன்படுத்தி பெண்ணின் சகோதரரைக் கைது செய்த குறித்த பொலிஸ் அதிகாரி சகோதரரை விடுவிக்க வேண்டுமாக இருந்தால்தான் சொல்லும் இடத்துக்கு வருமாறு அந்தப் பெண்ணை அழைத்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் அந்தப் பெண் ஊடகங்களுக்குத் தகவல் வழங்கியிருந்தார். பொறுப்பதிகாரியின் நடத்தையை பொது வெளியில் விமர்சித்தார். அத்துடன் மன்னாரில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்திருந்தார். சிறிது காலத்தில் அந்தப் பொலிஸ் அதிகாரி அங்கிருந்து வவுனியாவுக்கு இடமாற்றப்பட்டார்.

தற்போது அவர் அந்தக் குடும்பத்தை பழிதீர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் அதிகாரிக்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்திருந்த பெண், அவரது சகோதரர் மற்றும் குழந்தை என மூவர் கடந்த 26ஆம் திகதி மன்னாரில் இருந்து தலைமன்னாருக்கு முச்சக்கர வண்டியில் சென்றுள்ளனர். ஓலைத்தொடுவாய் சந்தியை அடைந்தபோது இரண்டு மோட்டார்சைக்கிள்களில் வந்த நால்வர், முச்சக்கரவண்டியை வழிமறித்தனர். அந்தப் பெண்ணின் கையைப் பிடித்து இழுத்து முச்சக்கர வண்டியில் இருந்து வெளியே வீழ்த்திவிட்டு முச்சக்கர வண்டியைத் தாக்கிவிட்டுச் சென்றனர்.

சம்பவம் தொடர்பில் அந்தப் பெண் 119 என்ற அவசர பொலிஸ் இலக்கத்துக்குத் தொடர்புகொண்டுள்ளார். சம்பவம் இடம்பெற்ற இடத்தை விசாரித்த அவர்கள், சிறிது நேரத்தில் மீண்டும் அழைத்தனர். மன்னார் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகின்றனர் என்று தெரிவித்தனர். எனினும், அவர்கள் வரவேயில்லை. மன்னார் பொலிஸ் நிலையம் சென்று முறைப்பாடு பதிவு செய்யச் சென்றனர். அங்கிருந்த பொலிஸார் முறைப்பாட்டை ஏற்கவில்லை.

நீண்டநேரம் கெஞ்சியும் அவர்கள் மறுத்துவிட்டனர். அழுது ஆர்ப்பாட்டம் செய்யவே முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. முறைப்பாட்டின்பின்னர், வந்தவர்களுடைய ஆள் அடையாளம் மற்றும் அவர்களுடைய மோட்டார்சைக்கிள் இலக்கங்களையும் அந்தப் பெண், பொலிஸாருக்குவழங்கினார். இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. சந்தேக நபர்களும் கைது செய்யப்படவில்லை. என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

அந்தப் பெண் முறைப்பாடு செய்துவிட்டு வெளியில் வரும்போது, ஏற்கனவே அங்கிருந்து இடமாற்றம் வழங்கப்பட்ட பொறுப்பதிகாரி பொலிஸ்நிலையத்துக்கு வந்திருந்தார் என்றும் கூறப்படுகிறது. தம்மைப் பழிவாங்குவதாகவும், மேலும் பழிவாங்கப் போவதாகவும் அந்தப் பொலிஸ் அதிகாரி மிரட்டினார் என்று பாதிக்கப்பட்ட பெண் குற்றஞ்சாட்டினார்.

"ஒரு பொலிஸ் அதிகாரிக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைக்குச் சென்றால் சட்டம் எங்களைப் பழிவாங்குமா? ஒட்டுமொத்த பொலிஸாரும் எங்களுக்கு எதிரராகத்திரும்பியுள்ளனர். எங்களை வாழ விடுகிறார்கள் இல்லை. நாங்கள் எங்கே செல்வோம்?" - என்று பாதிக்கப்பட்ட பெண் உதயனுக்குத் தெரிவித்தார். (து-21)



# 100 மாணவருக்கு உதவித் திட்டம்

வவுனியா, டிசெ. 31

வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட 100 தமிழ் மாணவர்களுக்கு வவுனியா குடியிருப்புப் பிரதேச செயலகக் கலாசார மண்டபத்தில் வைத்து கடந்த சனிக்கிழமை உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டன.

கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த பிரபல தொழிலதிபர் சாந்த நீல், வன்னி மாவட்டத்தில் வறுமைக்கோட்டுக்குட்பட்ட 15,000 மாணவர்களுக்குப் பல்வேறு உதவிகளை வழங்கும் திட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

அதன் முதற்கட்டமாக வவுனியாவில் 100 மாணவர்களுக்குப் புத்தகப்பை மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் வன்னி மக்கள் காப்பகத்தின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் சி.சுஜிகரன் , வன்னி தேர்தல் மாவட்டத்தின் இணைப்பாளர் மஞ்சுல , பீட்றா வ்ளாகம் இணைப் பல்கலைக்கழகத்தின் ஸ்தாபகர் கலாநிதி வ.விஜிதரன் , வவுனியா மாவட்ட முதியோர் சமாசத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் , பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் , பொதுமக்கள் , மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க-ரி4)



# 150 பேருக்கு கற்றல் உபகரணங்கள்

முல்லைத்தீவு, டிசெ. 31

வன்னி மக்கள் அமைப்பால் 150 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வவுனியா வடக்கு நெடுங்கேணி ஒலுமடு முன்பள்ளியில் வைத்து 150 மாணவர்களுக்கு கடந்த வாரம் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

முதுரம்பிட்டி, ஒலுமடு, கீரிசுட்டான், கற்குளம், துவரங்குளம், பட்டிக்குடியிருப்பு, மருதோடை, ஊஞ்சல்கட்டி, கோயிற்புளியங்குளம், பட்டறைதிரிஞ்சகுளம் ஆகிய இடங்களின் முன்பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (க)

# திருந்தவே மாட்டார்களா?

முல்லைத்தீவு, டிசெ. 31

என்னதான் அறிவுறுத்தல் விடுத்தாலும், ஒட்டுசுட்டான் பகுதிகளில் மக்கள் சிலர் வீட்டுக் கழிவுகளையும் இறந்த கால்நடைகளையும் வீதியோரங்களில் வீசிவிட்டுச் செல்கின்றனர் என்று அங்குள்ள ஏனைய மக்கள் தெரிவிக்கின்றனர்.



அந்தக் கழிவுகள் அழுகி துர்நாற்றம் ஏற்படும் வரை அகற்றப்படுவதில்லை. சில இடங்களில் கழிவுகள் துர்நாற்றம் வீசத்தொடங்கும் போதுதான் அதைப் பலரும் கண்டறியும் நிலையும் உள்ளது. எனவே பிரதேச சபையினர் இந்த விடயத்தில் கவனம் செலுத்தவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

வீட்டுக் கழிவுகள் உட்பட எந்தவிதக் கழிவுகளையும் வீதியோரங்களில் வீசாதீர்கள் என்று பல முறை அறிவித்துள்ளோம். பத்திரிகைகளிலும் அறிவித்தல் விடுத்துள்ளோம். இருந்தும் சிலர் இவ்வாறு செயற்படுகின்றனர் என்று பிரதேச சபைத் தரப்பினர் கூறுகின்றனர். (து-500)

# வீதி விபத்தில் மூவர் காயம்

சாவகச்சேரி, டிசெ. 31


மட்டுவில் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் இரு சிறுவர்களும், முச்சக்கரவண்டிச் சாரதியும் காயமடைந்தனர்.

இந்தச்சம்பவம் நேற்றுமுன்தினம் கனகன்புளியடி புத்தூர் வீதியில் இடம்பெற்றது.

அச்சுவேலி மேற்கைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 14 மற்றும் 8 வயதுச் சிறுவர்களும், கரணவாயைச் சேர்ந்த 43 வயது சாரதியும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ஐ-9)

# இராணுவத்தில் திசர பெரேரா!




கொழும்பு, டிசெ. 31

இலங்கை கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரர் திசர பெரேராவுக்கு இலங்கை இராணுவத்தில் புதிய பதவியொன்று வழங்கப்பட்டுள்ளதாக இராணுவ ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி திசர பெரேரா இலங்கை இராணுவ தொண்டர் படையணியில் நியமிக்கப்பட்ட அதிகாரியாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

இராணுவ கிரிக்கெட் அணிக்காக விளையாடும் பெரேரா கஜபா படையணியில் ஒரு மேஜர் பதவியில் பணியாற்றுவார். முன்னதாக சந்திமலும் இராணுவத்தில் தன்னை இணைத்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# உயர்தரப் பரீட்சை 2019: மேலும் சில பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், டிசெ.31

க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த வெள்ளிக்கிழமை வெளியாகியிருந்தன. அதனடிப்படையில் சில பாடசாலைகளில் மாணவர்கள் பெற்ற பெறுபேறுகளின் விவரங்கள் வருமாறு:

**கொக்குவில் இந்துக் கல்லூரி**

**கணிதப்பிரிவு**
**புதிய பாடத்திட்டம்**

ரி.ஜூபீரதன் - 3ஏ, எஸ்.சிவசுதன் - 3ஏ, ஜெ.சப்தனா - 3ஏ, ஜி.பவித்ரா - 2ஏபி, எம்.ஹர்ணன் - 3ஏ, வி.ரதுஜன் - 2ஏபி, எஸ்.விதுஸ் - ஏ2பி, ஏ.அபினாஷ் -3பி, எஸ்.தர்சன்-2ஏசி, வி.தனுஜன்-ஏபிசி, கே.எஸ்.சகஜராஜ் - பி2சி, ரி.சனுகன்-ஏ2சி, ஏ.விஜிதா-ஏசிஎஸ், எல்.கஜசாந்த் - ஏசிஎஸ், ரி.ருஷாந்தன்-2பிஎஸ், ரி.இந்தியனா - பி2சி, அபராஜிதன்- 3சி, ரி.தபேசன்- பிசிஎஸ்.

**கணிதப்பிரிவு**
**பழைய பாடத்திட்டம்**

ஈ.மதியழஜனன்-3ஏ, வி.பிரணவன்-2ஏபி, ஆர்.சான்றோன்-2ஏபி, ஜெ.லதுார்ஷனன்-2ஏபி, ஐ.தர்சன் -ஏ2பி, வி.சசீதரன்ஏ-2பி, ஆர்.எஸ்.மரீன்ராஜ்ஏ-2பி, வி.கௌசிகன்ஏ-பிசி, எம்.கீதப்பிரியா-2ஏசி, வி.பிரிந்தன்ஏ-பிசி, கே.கோகுலன்-2ஏசி, ஆர்.டிரூஷன் - ஏபிசி, எம்.நிதர்சன்ஏ-பிசி, எல்.மதுமிலா-பி2சி, பி.சாரங்கன்- பி2சி, ஆர்.வித்தியபிரகாஷ் - பி 2சி, கே.தனுராஜ் -பி2சி, எஸ்.தக்ஷா-பி2சி, பி.நிறஞ்சன் - பி2சி.

**விஞ்ஞானப் பிரிவு**
**புதிய பாடத்திட்டம்**

ஆர்.சோவினி -2ஏபி, எம்.சங்கீதன் (ஆங்கில மொழி மூலம்) - 2ஏசி, ஆர்.ரதீசிஜா -2பிசி, எம்.தனுஜன் - ஏ2சி எஸ்.துசிதரன்-2பிசி, எம்.கீர்த்தனா-ஏ2சி,கே.சுலக்சனா -2பிசி, ரி.ஜதுர்சாஜினி -2பிசி, என்.நிலோஜி-2பிஎஸ், எஸ்.துரிகா-3சி.

**விஞ்ஞானப் பிரிவு**
**பழைய பாடத்திட்டம்**

என்.சங்கீர்த்தனன்-3ஏ, ஜெ.நிதர்சன்-2ஏபி, பி.பார்தீபா - ஏ2பி,எ.மதுசன்-2ஏசி, எஸ்.பிரகாஸ்-2ஏசி, கே.கீர்த்தனா -2பிசி, ரி.ரதீபன்-2பிசி, எஸ்.துவாரகன் -பி2சி, ஆர்.துளசிகா-ஏ2சி, கே.விதுர்சன் - பி-2சி, ஐ.அனிஸ் - பி2சி.

**வர்த்தகப் பிரிவு**
**புதிய பாடத்திட்டம்**

எஸ்.சோபனா-3ஏ, பி.அனித்தா-3ஏ, எம்.லக்சாஜினி -3ஏ, பி.கீர்த்தனா -3ஏ, ரி.தீபிகா -2ஏபி, ரி.பிரியங்கன் -2ஏபி,ஜே.எஸ்.லீபயஸ் -2ஏபி, என். தபீஷன் -2ஏசி.

**வர்த்தகப் பிரிவு**
**பழைய பாடத்திட்டம்**

ரி.நர்மதன்-2ஏபி, வை.ஷெரிஸ்டன்-2ஏசி, எஸ்.சோபனா -2ஏபி, ஏ.மதியங்கா-2ஏபி,ஜே.அமல்ராஜ் -ஏ2பி, எம்.லிவேஜினி-2பிசி, கே.லக்ஷியா-பி2சி, ஜி.வினோதா-பி2சி, பி.ஜதுசன்-பி2சி, எஸ்.பாலகணேசன் -பி2சி.

**கலைப் பிரிவு**
**புதிய பாடத்திட்டம்**

எஸ்.சபீனா-3ஏ, எல்.அதிசன்-2 ஏபி, எஸ்.ஜதீஸ்கா -2ஏபி, ரி.பிரவீனா-2ஏபி, எஸ்.வானதி-2ஏபி, ஆர்.வைஸ்னவி- 2ஏபி, சி.ஏ.டிசானுகா ஏபிசி, எஸ்.திசான் 2ஏசி, எஸ்.பரமலக்சன்ஏ-பிசி, வி.நிசாளினி-2ஏசி,எஸ்.என்சிகா-ஏ2பி, பி.தட்ஜனா-2ஏசி, பி.பானு-ஏ2பி.

**கலைப் பிரிவு**
**பழைய பாடத்திட்டம்**

கே.நிலக்சன்-2ஏபி, கே.பிரஜித் ஏ-2பி, ஆர்.துஷாந் -3பி, பி.வரப்பிரகாஸ்-3பி, எம்.லவேகா-2பிசி, என்.றெம்சிகா- ஏபிசி, என்.ஸ்ரீவிஸ்னுகா -பி2சி.

**இயந்திரவியல் தொழில்நுட்பம்**
**புதிய பாடத்திட்டம்**

ரி.கஜரூபன் -ஏ2பி, எஸ்.சஞ்சீவன் -ஏசிஎஸ், ரி.சஜந்தன் - பிசிஎஸ்.

**இயந்திரவியல் தொழில்நுட்பம்**
**பழைய பாடத்திட்டம்**

எம்.திலக்சன் -2சிஎஸ்.

**உயிரியல் தொழிநுட்பவியல்**
**புதிய பாடத்திட்டம்**

எஸ்.லாவன்யா -ஏ2பி, ஆர்.பவதாரணி -பிசிஎஸ்.

**வட்டு மத்திய கல்லூரி**

**வர்த்தகப் பிரிவு**

ம.சாளினி - 3ஏ, சு.அருட்குமரன் - பி2சி.

**கலைப்பிரிவு**

ச.பிரகாஷ் - பி2சி,இ.கிதுஷன் - 3பி, பூ. அஜந்தா - பிசிஎஸ், அ.வளர்மதி - பிசிஎஸ், உ.நிரோஜன் - 2சிஎஸ், நி.சுவஸ்ரிகா - 3சி, ப.தர்மிலா - பி2எஸ், அ.காண்டீபன் - சி2எஸ்,ச.டிசாந்தன் - 3எஸ்.

**சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி**

**கலைப்பிரிவு**

த. பிரசாந்தினி-3 ஏ, இ.ஜோதிகா-3 பி, ஆ.ஜிந்துசா-ஏபிஎஸ்.

**வர்த்தகப் பிரிவு**

வி.வினோஜன்-ஏ2பி, இ.டானியல்ராஜ் -3 பி,

**கணிதப்பிரிவு**

சி.பிரதீப்- பி2சி, சி.மதிவதனன்-3 எஸ்.

**ஹாட்லிக் கல்லூரி**

**கணிதப் பிரிவு**
**புதிய பாடத்திட்டம்**

எஸ். ஜதுர்ஷன் - 3ஏ, கே.மலன்பன் - 3ஏ, எஸ்.கௌரிசான் 3ஏ, வை.ரஜீவன் - 3 ஏ, ஏ.கோபிநாத் - 3ஏ, ஜே.தர்சிகன் - 3ஏ, ஜே. விபுலன் 3 ஏ, ஜே.சாரங்கன் - 2ஏபி, ஜே.ஜெயவர்ணன் - 3ஏ, ரி.தஜனன் - 2ஏபி, எ.ரிச்சாட் நிதர்ஷன் - 3ஏ, என்.ரமணன் - 2ஏபி, பி. கஜந்த் - 2ஏபி, பி.நவநீதன் - 2ஏபி, எம்.அன்ஸ்ரன் ரொமிலஸ் - ஏ2பி, ஆர்.ஜதுர்சன் - 2ஏபி, வை. கஜலக் ஷன் - ஏ2பி, எஸ்.குகநிஷாந்தன் - 2ஏபி, எஸ். பவித்திரன் - 2ஏசி.

**பழைய பாடத்திட்டம்**

கே.உஷாந்தன் - 3ஏ, ஏ.ஹெனோசன்- 2ஏபி

**உயிரியல் விஞ்ஞான பிரிவு**
**புதிய பாடத்திட்டம்**

வி.அனுசன் - 3ஏ, எஸ்.வேணுஜன் - 3ஏ, எஸ்.நிருதாசன் - ஏபிசி, எஸ்.ரமணன் - 2ஏசி, ரி. சாருஹன் - 3பி, என்.கவிஷன் - 2ஏசி.

**பழைய பாடத்திட்டம்**

வி.யதுஷன் - 2ஏபி, கிருஷானந் - 2ஏசி

**வர்த்தகப் பிரிவு**
**புதிய பாடத்திட்டம்**

ரி.தனுசன் - 3ஏ, ஆர்.புவிதரன் - 2ஏபி, எஸ்.தனோஜன் - 2ஏபி

**பழைய பாடத்திட்டம்**

மரியரோகன் - 2ஏபி

**கலைப் பிரிவு**

எஸ்.ஆர்த்திகன் - 2ஏபி, ரி.சுபாஸ் - 2ஏசி, ஆர்.ஆர்.சிலோத்தமன் - ஏபிசி

**பொறியியல் தொழில்நுட்ப பிரிவு**
**புதிய பாடத்திட்டம்**

ஜி.ஷங்கரன் - 2ஏபி,வி.திவாகரன் - ஏ2சி, எம். அன்ரனி டிலக்சன் - 2பிசி, எஸ்.கிருஷாந்த் -பிசிஎஸ்

**பழைய பாடத்திட்டம்**

என்.தர்சிகன் - 2பிசி, ஆர். அமிர்தராஜ் - பி2எஸ்.

**உயிர்முறைமைகள் தொழில்நுட்ப பிரிவு**
**புதிய பாடத்திட்டம்**

எஸ்.சிவகரன்- பி2சி,எஸ்.குயினன்- 2சிஎஸ்.

**நெல்லியடி மத்திய கல்லூரி**

**கணிதப்பிரிவு**
**புதியப் பாடத்திட்டம்**

பி.கீதரனி - 3ஏ, ஏ. தனன்சியன் - 2ஏபி, எஸ்.ஜெகதீசன், எல். சிவகாந்த் - 3ஏ, ஆர். பிரணவன் - ஏபிசி, ஏ.நிதுர்சன் -பி2சி, பி.குனாயிஜினி- பி2எஸ்.

**பழைய பாடத்திட்டம்**

எஸ்.ரம்யா - 2ஏபி, எஸ்.சுபா - 3பி, பி.லக்ஷன் - 3பி, வை.ரகிசான் - ஏ2சி, ஐ.சோபிகா-ஏசிஎஸ், கே.இலக்கனன் - பி2சி, பி.வனிதன் - 3சி

**விஞ்ஞான பிரிவு**
**புதிய பாடத்திட்டம் (ஆங்கில மொழி மூலம்)**

சி.சசிபன் - 2ஏபி

**புதிய பாடத்திட்டம்**

கே.ஆதனா - ஏபிசி, என். அஜித்ரா - 2சிஎஸ்,ஜே.நிலாந்தி-3சி, யு.உஷஜினி-சி2எஸ்

**பழைய பாடத்திட்டம்**

என்.சிந்துஜன் - 2ஏபி, பி.கஜந்தன் - பிசிஎஸ்.

**வேறுபிரிவுகள்**
**புதியபாடத்திட்டம்**

பி.துவாரகன் - பி2சி, பி.பிரதாப் - 3சி.

**வர்த்தகப்பிரிவு**
**புதிய பாடத்திட்டம்**

சி.விஜீவன் - 3ஏ, எஸ்.சிந்துசன் - 2பிசி, எம்.அபிதன் - ஏ2பி, எம்.அஜந்தன் - ஏபிசி, எம்.சுபாங்கி - பி2சி,பி.பவித்ரா - 2பிசி, ஜி.ஹஜீவன்- பி2சி, என். லக்சிகா - பிசிஎஸ்.

**பழைய பாடத்திட்டம்**

கே.நிலவன் - 2ஏசி, ஆர்.விதுசன் - ஏபிசி, ரி.தர்ஷான் - பி2சி.ரி.நிகேஷன் - 3சி

**கலைப் பிரிவு**
**புதிய பாடத்திட்டம்**

என்.வாகினி - ஏபிசி, பி.தர்சிகா - ஏ2சி, எஸ்.தயாரதன் - 3சி, ரி.சஞ்ஜீவன் ஏ2சி

**பழைய பாடத்திட்டம்**

எஸ். அனித் - ஏபிஎஸ், கே.பிரசாந்தன் - ஏசிஎஸ்.

**உயிரியல் தொழில்நுட்ப பிரிவு**
**புதிய பாடத்திட்டம்**

எஸ்.நிதுர்ஷா - பி2சி.

**பழைய பாடத்திட்டம்**

பி.அர்ச்சனா - பி2சி,எல். நிமனன் - பி2சி, ஆர்.பூர்விகா - 3சி, ஆர்.கீர்த்திகா - பி2சி, ரி.தர்சிகா- 3சி.

**இலத்திரனியல் தொழில்நுட்ப பிரிவு**
**புதிய பாடத்திட்டம்**

எஸ்.சாருஜன் - பி2சி, யு.ஆர்திகன் - 3சி, கே.கரிகாலன் 3சி.

**பழைய பாடத்திட்டம்**

எஸ்.சிவபிரியன் - பி2சி, எஸ். ஆத்மன் - 2சிஎஸ், ஐ.திவாகரன் - 3எஸ்.

**சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி**

**கணிதப்பிரிவு**

வி.கோபிதாஸ் - ஏ2பி, செ.யசோதரன் - 2ஏபி, சு. அனுசன்-பி2சி, ப.பவித்திரா-2பிசி, ச.சுகன்யா-2சிஎஸ்.

**உயிரியல் பிரிவு**

பி.எழிலினி-எ2பி, த.துஸ்யந்தி-2ஏசி, த.நிதர்சனா -2சிஎஸ், கி.அபிராமி-2சிஎஸ், ச.மதுஹரி-2சிஎஸ், த.மாதங்கி- 2சிஎஸ்.

**வணிகப்பிரிவு**

வி.ஜெயப்பிரகாஷ்-ஏபிசி, த.திலக்சிகா- 2ஏபி, செ.துளசிகா-2ஏபி, ம.கிருபா-2ஏசி, ஆ.பவானி-ஏபிசி.

**கலைப்பிரிவு**

த.நிலக்ஷன் -3ஏ, சி.சிவோஜினி-3பி, யோ.லக்ஷிகா-2ஏபி, சு.மோகனப்பிரியா-ஏ2பி, மு.குபேந்தினி -2ஏசி, நா.நிசாந்தன்-2ஏசி, க.லேனுஜா-ஏபிசி, பா.தனுஜா-ஏ2சி, உ.அபிராமி -ஏபிசி.ஜெ.துவாரகன் - பி2சி, உ.சுமன்-பி2சி, ச.தமிழினி - ஏ2சி.

# போலி வழிபாடுகளை புறக்கணியுங்கள்!

## சைவ மகா சபை கோரிக்கை

**யாழ்ப்பாணம்,டிசெ.31**

**மது படைத்து வழிபாடு செய்யும் மோசமான, போலியான, வழிபாட்டு முறைமையை யாழ்ப்பாணத்தில் அறிமுகம் செய்ய முனைபவர்களை எச்சரிக்கின்றோம். அவ்வாறான விநோத வழிபாடுகளை சைவத்தமிழர்கள் முற்றாகப் புறக்கணிக்க வேண்டும் என்று அகில இலங்கை சைவ மகா சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.**

இது தொடர்பாக சபை விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சைவத் தமிழர்களால் பஞ்சமா பாதகங்களில் ஒன்றாக விதந்து உரைக்கப்பட்ட மதுவை வழிபாட்டிடம் ஒன்றில் படைக்கும் காட்சி அண்மையில் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டன. அந்தச் செயற்பாடு முற்றிலும் சரியானது என்ற தோரணையில் அறிக்கை வெளியிடப் பட்டுள்ளது.

தனி மனித வழிபாட்டு நிர்வாகம் சைவ சமய கடவுளரை நிந்திக்கும் தமது மோசமான செயற்பாடுகளை உடனடியாக நிறுத்த வேண்டும். பல் சமய பின்னணி கொண்ட இந்த தனிமனித வழிபாட்டு இடம், பண்டைய உண்மையான சைவ சமயத்துக்கு எந்தவிதத்திலும் சம்பந்தம் இல்லாதது. சைவ சமய ஆலயம் போன்ற ஓர் மாயையை ஏற்படுத்த முனைவதையும் அவர்கள் நிறுத்த வேண்டும். சைவ சமயத்தவர்கள் இவர்கள் மீது அவதானமாக இருக்க வேண்டும். இந்தப் போலிகளுக்காக எமது தொன்மையான சைவ சமயத்தைப் பரிகசிக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ளாது நேர்மையான உள்ளத் தூய்மையுடன் செயற்பட்டு, போலி வழிபாட்டு முறைமைகளை முற்று முழுதாக மறுதலித்து அவ்விடங்களுக்குச் செல்வதையோ, அந்தச் செயற்பாடுகளுக்குத் துணை போவதையோ கைவிட வேண்டும்- என்றுள்ளது. (க)

# படுகுழிக்குள் அரசு

## சாந்தி எம்.பி. தெரிவிப்பு

முல்லைத்தீவு, டிசெ. 31

அபிவிருத்தியிலும் சரி அரசியல் செயற்பாட்டிலும் சரி அரசின் செயற்பாடுகள் மிகப் பாதகமான நிலையில் உள்ளன, படுகுழியில் வீழ்வதுபோல நடந்துகொண்டிருக்கின்றன. இது வேதனைக்குரிய விடயம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா தெரிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் ஒலுமடு உப அலுவலகம் சீரமைக்கப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

சில அளவுப் பிரமாணங்களிலுள்ள பற்றாக்குறை காரணமாகவே புதுக்குடியிருப்பில் ஒட்டுசுட்டான் பிரதேச சபையாகத் தனித்துப் பிரித்து எடுக்கமுடியாதுள்ளது.

மாவட்டத்தில் ஒரு நகர சபையை உருவாக்குவதற்கான பல ஆக்கபூர்வமான செயற்பாடுகள் நடைபெற்று முடிந்துள்ளன. அளவுப் பிரமாணங்களில் இருக்கின்ற சில பற்றாக்குறைதான் அதற்கான நேர இடைவெளிக்குக் காரணமாக இருக்கின்றது.

பிரதேச சபையைப் பலப்படுத்துவதும் வருமானத்தை மேம்படுத்துவதும் எங்களின் கட்டாய கடமையாகும்.

நான்கு ஆண்டுகாலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் 43கோடியே 60 லட்சம் ரூபாவைப் பெற்று அபிவிருத்திக்கு வழங்கியுள்ளேன். அரசியல் பயணத்தில் அரசிடமிருந்து இவ்வாறு நிதி பெற்றுக் கொடுத்ததை சேவையின் திருப்பதியாகப் பார்க்கின்றேன்.

2018 ஆம் ஆண்டு மாந்தை கிழக்கு அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியூதீன் பங்குபற்றி "ஆவணி மாதம் மடு மாதா கோவிலுக்குச் செல்லும் பாத யாத்திரிகர்களுக்காக பாலம்பிட்டி வீதியைச் சீர் செய்வதாக உறுதியளித்தார்.

எவ்வளவு வேணும் எடுங்கோ." என்றுகூறிச் சென்றவர் தான் அடுத்த கூட்டத்துக்கும் வரவில்லை. கடந்த ஆவணி மாதம் வீதியைத் திருத்தம் செய்வதற்காக 10 இலட்சம் ரூபாவைப் பெற்றுக்கொடுத்து யாத்திரிகர்களின் பயணத்துக்குப் பாதையைச் சீர்செய்ய நடவடிக்கை எடுத்தேன்.

இயற்கையைப் பாதிக்கிறது மணல் அகழ்வு. அது எங்கள் இயற்கைச் சூழலையும் பாதிக்கின்றது. வெள்ள இடரின் பின்னர் 30 ஆயிரத்து 383 வீடுகள் அமைக்க விசேடமாக தேசிய வீடமைப்பு அதிகார சபை அனுமதித்தது. எனினும், அவற்றுக்கான கொடுப்பனவுகள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளன. இது இந்த அரசு மக்களுக்குச் செய்கின்ற மோசமான செயலாகவுள்ளது- என்றார். (த-ரி3)






### இளைஞர்களின் முயற்சியால்

# வண்ணமயமான கிளிநொச்சி நகர்

கிளிநொர்ச்சி,டிசெ.31

கிளிநொச்சி சுயாதீன இளைஞர்களால் "வண்ணமயமாகும் கிளிநொச்சி" எனும் தொனிப் பொருளின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட வர்ணம் பூசும் பணிகள் அரசியல் கட்சிகள் ,வர்த்தகர்கள் ,அமைப்புக்கள் , தனிநபர்கள் எனப் பலரின் ஆதரவோடு வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



இளைஞர்கள் தமக்குக் கிடைக்கின்ற நேரங்களைப் பயன்படுத்தி பஸ் தரிப்பிடங்கள் ,மதில்கள் ,கட்டடங்கள் ஆகியவற்றில் ஓவியங்களை வரைந்து அழகாக்கி வருகின்றனர்.

இந்த ஓவியங்கள் பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. பலரும் சமூக வலைத்தளங்களில் வாழ்த்துக்களையும் ஆதரவையும் வழங்கி வருகின்றனர். (க-35)



# இன்று

யாழ்ப்பாணம்,டிசெ.31

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின் தடைப்படும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

இதன்படி இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை வுவுனியா மாவட்டத்தில் சூடுவெந்தபுலவு கிராமம், கந்தசாமி நகர், நித்திக்குளம், சண்முகபுரம், கங்கன்குளம், செட்டிகுளம், புளியங்குளம், காந்திநகர், அரசடிக்குளம் ஆகிய இடங்களில் மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சீராகிறது வானிலை

கொழும்பு, டிசெ. 31

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் சீரான வானிலை நிலவும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

மேல், மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் சில இடங்களில் பனி மூட்டமான நிலை காணப்படும். நாட்டைச் சூழவுள்ள கடல் பிரதேசங்ளில் சீரான காலநிலை நிலவும்.

நாட்டைச் சூழவுள்ள கடல் பிரதேசங்களில் வடக்குக் கிழக்காக 20 தொடக்கம் 40 கிலோ மீற்றர் வரையில் காற்றின் வேகம் அதிகரிக்கக் கூடும்.

மன்னாரில் இருந்து கொழும்பு ஊடாக புத்தளம், காலி மற்றும் பொத்துவில் ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடல் பிரதேசம் கொந்தளிப்புடன் காணப்படுவதுடன் இவ்வாறான சந்தர்ப்பங்களில் காற்றின் வேகம் 50 கிலோ மீற்றர் வரையில் அதிகரிக்கக் கூடும் - என்றுள்ளது. (ம)

# பணிநேர மாற்றம்

சாவகச்சேரி,டிசெ.31

தென்மராட்சி பிரதேச செயலகமோட்டார்போக்குவரத்து அலகு இன்று செவ்வாய்க்கிழமை காலை 7.30. மணி தொடக்கம் மதியம் 12 மணி வரைசெயற்படும் என்று பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு அறிவித்துள்ளார்.

வருட இறுதிப் கணக்குகள் முடிவுறுத்துவதற்காக காலை 7.30 மணி தொடக்கம் அலகு இயங்குமென அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-9)

# ஆஸியில் காட்டுத் தீயால் பேரவலம்!





மெல்பேர்ண், டிசெ. 31

ஆஸ்திரேலியாவில் கடந்த சில வாரங்களாக கடுமையான காட்டுத் தீ பரவி வருகிறது. இந்த நிலையில் அந்த நாட்டின் தென்மேற்குப் பகுதியில் ஆயிரக் கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

ஆஸ்திரேலியாவில் கடந்த ஒக்டோபர் மாதம் முதல் பல்வேறு மாகாணங்களில் காட்டுத் தீ பரவி வருகிறது. இந்தக் காட்டுத் தீக்கு இதுவரை 700 வீடுகள் இரையாகியுள்ளன. சுமார் 12 லட்சம் ஏக்கர் நிலங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. கடும் தண்ணீர்த் தட்டுப்பாடு நிலவி வருவதால் நாட்டின் பல இடங்களில் வறட்சி தீவிரமாகியிருக்கிறது.

இதுகுறித்து ஆஸ்திரேலிய ஊடகங்கள், 'ஆஸ்திரேலியாவின் விக்டோரியா மாகாணத்தில் உள்ள கிழக்கு ஜிப்ஸ்லாண்ட் பிரதேசத்தில் காட்டுத் தீ காரணமாக கடும் வெப்ப அலை நிலவுகிறது. இதனால் இன்று திங்கட்கிழமை (நேற்று) சுமார் 30 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் அப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்துள்ளனர்' என்று செய்தி வெளியிட்டுள்ளன. (ம)


## யாழ்ப்பாணம் மாநகர சபை
## 2020 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையவாறு வீதவரி விதித்தல்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் தத்துவங்களை அமுல்படுத்துவதுடன். பணிகள். செயற்பணிகளை நிறைவேற்றுகின்ற யாழ்ப்பாணம் மாநகர சபையின் திரு.இ.த.ஜெயசீலன். ஆணையாளர் ஆகிய நான் யாழ்ப்பாணம் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 286ii பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மேற்படி சட்டத்தின் 230(1) பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய யாழ்ப்பாணம் மாநகர சபை அதிகாரப் பிரதேசத்திற்கு 2020 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக வீதவரி விதிப்பதானது பின்வருமாறாக இருத்தல் வேண்டும் என்று தீர்மானிக்கின்றேன். அதாவது. மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 238 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள சகல வீடுகள். கட்டிடங்கள். காணிகள் மற்றும் நிர்மாணிப்புகளின் வருடாந்த பெறுமதிக்கு 2019 ஆம் ஆண்டுக்கான விலைமதிப்பு /மதிப்பீட்டை 2020 ஆம் ஆண்டுக்கான விலைமதிப்பு/ மதிப்பீடாக நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்றும். மேற்படி விலை மதிப்பின் அடிப்படையில் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 286(ii) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அக்கட்டளைச் சட்டத்தின் 230(1) பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு மேற்படி ஆதனத்தின் மீது குறித்த மதிப்பீட்டுக்கு வருடாந்தப் பெறுமதியில் 6 சதவீதமான (6%)வருடாந்த வீத வரி விதிக்கப்படல் வேண்டும் என்றும். மேலும். 2020 ஆம் ஆண்டில் பின்வரும் அட்டவணையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு காலாண்டுக்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் அவ்வாறு விதிக்கப்படுகின்ற வருடாந்த வீதவரியை யாழ்ப்பாணமாநகரசபையின் நிதியத்திற்குச் செலுத்த வேண்டும் என்றும். அவ்வாறு வருடாந்த வீதவரி 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் முழுமையாக செலுத்தப்படுமாயின். வருடாந்த வீதவரித் தொகையில் நூற்றுக்கு பத்து சதவீதமான (10%) கழிவும். மேற்படி அட்டவணையின் ஒவ்வொரு காலாண்டுக்கும் எதிரே மூன்றாவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் குறித்த வீத வரித் தொகை யாழ்ப்பாணம் மாநகர சபையின் நிதியத்திற்குச் செலுத்தப்படுமாயின் குறித்த காலாண்டுக்குரிய தொகையில் 5% ஆன கழிவும் யாழ்ப்பாணம் மாநகர சபையினால் வழங்கப்பட வேண்டும் என்றும் சொல்லப்பட்ட காலங்களில் செலுத்தப்படாதவிடத்து வெற்றுக்காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது 15% திலுமான (பதினைந்து வீதம்) மற்றும் சகல ஏனைய இடங்கள் மீது 20% திலுமான (இருபது வீதம்) விறாந்துச் செலவு அறவிடப்படும் என்றும் தீர்மானிக்கின்றேன்.

**யாழ்ப்பாணம் மாநகர சபை**

**திரு.இ.த.ஜெயசீலன்**
**ஆணையாளர்**

| காலாண்டு | மேற்படி அட்டவணை செலுத்த வேண்டிய திகதி | 5% கழிவுக்கு உரித்துப் பெறும் இறுதித் திகதி |
|---|---|---|
| முதலாவது காலாண்டு | 01.01.2020 - 31.03.2020 | 31.01.2020 |
| இரண்டாவது காலாண்டு | 01.04.2020 - 30.06.2020 | 30.04.2020 |
| மூன்றாவது காலாண்டு | 01.07.2020 - 30.09.2020 | 31.07.2020 |
| நான்காவது காலாண்டு | 01.10.2020 - 31.12.2020 | 31.10.2020 |

குறிப்பு:- 2020 ஆம் ஆண்டிற்கான ஆதனவரி அறிவித்தல்கள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன. ஆதனவரி அறிவித்தல் கிடைக்காதவர்களும் தமது ஆதன விபரங்களை தெரிவித்து மாநகரசபை ஆதனவரிப்பகுதியில் நேரடியாக வந்து 2020 ஆம் ஆண்டிற்கான ஆதனவரிகளைச் செலுத்த முடியும் என்பதுடன் 2020 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து 31.01.2020 ஆம் திகதிக்குள் செலுத்துவதன் மூலம் 10% கழிவினையும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனையும் அறியத்தருகின்றேன். காசோலையாகவோ. காசுக்கட்டளையாகவோ செலுத்துவோர் " மாநகரசபை ஆணையாளர் யாழ்ப்பாணம்" என அனுப்பி செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

(2020 ம் ஆண்டு ஜனவரி மாதம் பொதுவிடுமுறை தவிர்ந்த வார இறுதி தினாங்களான சனி. ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலக செயற்பாடுகள் இடம்பெறும்.)

**திரு.இ.த.ஜெயசீலன்**
**ஆணையாளர் மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்**



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## உயர் பட்டப்படிப்புகள் பீடம்
## புதிய அனுமதிகள்

1. கல்வியியல் முதுமாணி (MED) – 2020/21 (அணி VI) வவுனியா பிராந்திய நிலையம்
2. பட்டப்பின் கல்வித் தகைமை கற்கை நெறி (PGD inEducation) 2020/21 (அணி VII) வவுனியா பிராந்திய நிலையம்

மேற்படி சுயநிதிக் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

### கல்வியியல் முதுமாணி (Master of Education)

**அனுமதிக்குரிய தகைமைகள்**

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் அல்லது உயர்கல்வி நிறுவனத்தின் பட்டமும், பட்டப்பின் கல்விடிப்ளோமாவும்"

அத்துடன்

- ஒருபாடசாலையில் அல்லது யாதேனும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் கற்பித்தல் அனுபவம் அல்லது மேற்படி கற்கை நெறிக்குப் பொருத்தமான கல்விசார் பணிகளில் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் அனுபவம்

**தெரிவுமுறைமை:-**

- எழுத்துத் தேர்வும், நேர்முகத் தேர்வும்
  (எழுத்துத் தேர்வு கல்விசார் பொதுத் தகைமையை பரீட்சிப்பதாக அமையும்.)

**கற்கைக் காலம்** : ஒருவருடம்
**மொழி மூலம்** : தமிழ்
**கற்கைநெறிக் கட்டணம்** : 105,000/- (5000/- மீள அளிக்கப்படும்)
**விண்ணப்பப் படிவக் கட்டணம்** : 1,000/-

### பட்டப்பின் கல்வித் தகைமை கற்கை நெறி (PGD in Education)

**அனுமதிக்குரிய தகைமைகள்**

- பாடசாலைகளில் கடமையாற்றும் பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்தும் கல்வி நிர்வாகிகளிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- விண்ணப்பதாரிகள் 50 வயதுக்கு குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

**தெரிவு முறைமை :**
எழுத்துத் தேர்வும், நேர்முகத் தேர்வும்

எழுத்துத் தேர்வு (பொது விவேகம், கல்வியியல் பொதுத்தகைமை) மற்றும் நேர்முகத் தேர்வு இரண்டினதும் பெறுபேறுகளுக்கமைய தெரிவுகள் இடம்பெறும்.

**கற்கைக் காலம்** : இரண்டு வருடங்கள்
**மொழி மூலம்** : தமிழ்
**கற்கைநெறிக் கட்டணம்** : 85,000/-
**விண்ணப்பப் படிவக் கட்டணம்** : 1,000/-

### விண்ணப்பப் படிவம் பெறும் முறை

1. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் பணம் வைப்பிலிடும் பத்திரத்தைப் பெற்று மக்கள் வங்கி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கிளையில் 162-1-001-8-0000902 எனும் கணக்கு இலக்கத்திற்கு கட்டணத்தை செலுத்தி உயர் பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பப் படிவங்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
2. தபால் மூலம் பெறவிரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு விண்ணப்பபடிவத்திற்குரிய பெறுமதியான் காசுக்கட்டளையுடன் 15/- பெறுமதியான முத்திரை ஒட்டப் பட்ட சுய முகவரியிடப்பட்ட 23 X 10 செ.மீ. அளவுள்ள கடித உறையையும் இணைத்து உதவிப்பதிவாளர், உயர் பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
3. விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிகவிபரங்கள் www.grad.jfn.ac.lk எனும் பல்கலைக்கழக வலைதள வசதியூடாகவும் (website) பெற்றுக்கொள்ளலாம். வலைத்தள மூலமாக தரவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்புபவர்கள் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு ரூபா1000/- பெறுமதியான காசுக்கட்டளையை/மக்கள் வங்கியில் மேற்குறிப்பிடப்பட்ட கணக்கிலக்கத்திற்கு செலுத்திய பற்றுச்சீட்டை இணைத்தல் வேண்டும்.

### விண்ணப்ப படிவத்தை சமர்ப்பித்தல்

விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **கற்கைநெறியின் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் 31.01.2020** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு **உதவிப்பதிவாளர், உயர்பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்** என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

உரிய விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்காத விண்ணப்பங்கள், சரியாக பூரணப்படுத்தாத விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர்**

(in 12075) (13.17)

# ஏகாதிபத்தியத்தை நிச்சயம் எதிர்ப்போம்

## கூட்டமைப்பின் பேச்சாளர் தெரிவிப்பு

மருதங்கேணி, டிசெ. 31

ஏகாதிபத்திய முறை நாட்டில் மீண்டும் கொண்டுவரப்படுவதை எதிர்ப்போம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மக்கள் வழங்கிய ஆணைக்கு எதிராக தற்போதைய ஜனாதிபதி செயற்படுகின்றார். மக்கள் ஒன்று சேர்ந்து பெரும்பான்மையாக ஓரணியில் இணைந்து கூட்டமைப்புக்கு வாக்களித்து அதிகளவான நாடாளுமன்ற உறுப்பினர்களை இனிவரும் தேர்தல் மூலம் தெரிவு செய்து அனுப்ப வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

வடமராட்சி கொற்றாவத்தை கலைவாணி முன்பள்ளி விளையாட்டு முற்றத் திறப்பு நிகழ்வும் கலைவிழாவும் கலைவாணி முன்பள்ளியின் தலைவர் சி.சிவகுமார் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினர் உரையின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விருந்தினர்கள் அங்குள்ள ஆலய முன்றிலிலிருந்து மலர்மாலை அணிவிக்கப்பட்டு மங்கல இசை முழங்க நிகழ்விடத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

முதல் சுடரை பிரதம விருந்தினர் ஏற்றிவைத்தார். தொடர்ந்து முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன், கலைவாணி முன்பள்ளி தலைவர் சி.சிவகுமார், கரவெட்டி பிரதேச சபைத் தவிசாளர் ரீ.ஐங்கரன், தொழிலதிபர் ஐ.விக்கினேஸ்வரன், கலைவாணி சன சமூக நிலையத் தலைவர் இ.வரதன் மற்றும் முன்பள்ளி மாணவர் ஒருவரும் ஏற்றினர்.

கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் ஒரு இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட கலைவாணி முன்பள்ளியின் விளையாட்டு முற்றத்தை சம்பிரதாயபூர்வமாக சுமந்திரன் நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

கலைவாணி முன்பள்ளித் தலைவரும் நிகழ்வின் தலைவருமான சி.சிவகுமார் தலைமையுரை ஆற்றினார்.

மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன் மற்றும் கரவெட்டிப் பிரதேச சபைத் தவிசாளர் ரீ. ஐங்கரன் ஆகியோர் கருத்துரை வழங்கினர். நிகழ்வில் கொற்றாவத்தை கிராம மக்கள், பிரதேச சபைகளின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (த-160)

## வாழைக்குலைகள் திருட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 31

கோப்பாயில் வாழைத் தோட்டம் ஒன்றில் நேற்றுமுன்தினம் அதிகாலை 11 வாழைக் குலைகளை திருடர் வெட்டிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கோப்பாய் சந்தியை அண்டிய பகுதியிலுள்ள தோட்டத்தில் 20க்கும் மேற்பட்ட வாழைக் குலைகளை வெட்டியுள்ளனர்.

11 வாழைக்குலைகளைக் கொண்டுசென்றுள்ளனர். எஞ்சிய வாழைக்குலைகள் எடுத்துச் செல்லமுற்பட்டபோது அவர்களின் நடமாட்டத்தைச் சிலர் அவதானித்த நிலையில் மிகுதியை விட்டுச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

திருட்டுத் தொடர்பில். கோப்பாய் பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. (த105)

## சகல மதங்களையும் மதித்தவர் நாவலர்

### மன்னார் மாவட்ட மேலதிக செயலர் புகழாரம்

மன்னார்,டிசெ.31



சைவமும் தமிழும் என்றும் பிரிக்கமுடியாதபடி பிணைத்து ஒன்றாகவே வழிநடத்தக்கூடிய பெருமை ஆறுமுக நாவலரையே சாரும். இவ்வாறு மன்னார் மாவட்ட மேலதிக செயலர் எஸ்.குணபாலன் தெரிவித்தார். ஆறுமுக நாவலர் விழா மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியில் மாவட்ட அறநெறிப் பாடசாலைகளின் இணையத் தலைவரான செந்தமிழருவி மஹா தர்மகுமார குருக்கள் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;"இன்றும் யாழ்ப்பாணத்தின் கலாசாரத்தை கந்தபுராண கலாசாரம் என உலகம் போற்றும் அளவுக்கு உன்னதமான நிலையை தோற்றுவித்த பெருமை நாவலரையே சாரும்.

மிகவும் குறைந்த வயது வரை அதாவது 57 ஆண்டுகளே நாவலர் உயிருடன் வாழ்ந்துள்ளார். ஆனால் அவர் இவ்வுலகில் சாதித்தவை ஏராளம். எங்கள் நாட்டில் மட்டுமல்ல இந்தியாவிலும் கடல் கடந்து மதத்தின் பெருமைகளைப் பறைசாற்றி நாவலர் என்ற பட்டத்தையும் பெற்றவர் இந்த ஆறுமுக நாவலர்.

அதுமட்டுமல்ல அவர் எல்லா மதங்களையும் மதித்தார். என்பதன் அடையாளமாக பாதிரியார் ஒருவருடன் இணைந்து விவிலியத்தை தமிழாக்கம் செய்து உலகத் தமிழ் மக்களுக்காக வழங்கினார்.

ஆகவே எல்லா மதங்களின் தன்மைகளையும் நாம் உணர்ந்தால்தான் அவற்றின் நிலைத்த தன்மைகளையும் வரலாற்றுப் பெருமைகளையும் இந்த மண்ணுக்கு நாம் எடுத்துக்கூற முடியும் என்ற செயல்பாட்டில் வாழ்ந்தவர்தான் இந்த ஆறுமுக நாவலர்" என்றார். (ஜ-60)

## உதவிப்பொருள்கள் வழங்கல்



வடமராட்சி,டிசெ.31

ஐக்கிய அமெரிக்க அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் அனுசரணையுடன், வடமராட்சி செவிப்புலன் அற்றோர் நிறுவனத்தினரால் அங்கத்தவர்கள் மற்றும் அவர்களது பிள்ளைகளுக்கு உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன.

இதில் நான்கு அங்கத்தவர்களுக்குத் தொழில் விருத்தி உபகரணங்களும், அவர்களின் பிள்ளைகள் 26 பேருக்கு துவிச்சக்கரவண்டிகளும், 99 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும், வடமராட்சி நிறுவனத்துக்கு 150 கதிரைகளும் வழங்கப்பட்டன.

வடமராட்சி செவிப்புலனற்றோர் நிறுவனத்தின் தலைவர் த.செந்தில்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன், யாழ் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி த.சத்தியமூர்த்தி, ஐக்கிய அமெரிக்க அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-422)

## 'குடு' பைக்கற்றுக்களுடன் நல்லூரில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 31

நல்லூர் அரசடியில் 'குடு' என்ற போதைப் பொருள் பைக்கற்றுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் அவற்றை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் குடும்பத் தலைவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

'குடு' போதைப் பைக்கற்றுக்கள் கைமாற்றப்படுகின்றன என்று இராணுவப் புலனாய்வாளர்களுக்குக் கிடைத்த இரகசிய தகவலை அவர்கள், பொலிஸாருக்குக் கூறியுள்ளனர். பொலிஸார் அங்குசென்று நடத்திய சோதனையில் அவை மீட்கப்பட்டன.

அவர் விசாரணையின் பின்னர் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-105)

## மதூஷின் மனைவி கைது

டுபாயில் வைத்துக் கைது செய்யப்பட்ட போதைப்பொருள் கடத்தல் மன்னனான மாகந்துரே மதூஷின் இரண்டாவது மனைவி டுபாயிலிருந்து வந்தபோது கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார். மாகந்துரே மதூஷைப் பார்ப்பதற்காக நேற்றுமுன்தினம் அவரும் பிள்ளையும் வந்திருந்தனர். (ம)

## இவர்களுக்கும் இனி வரி!

கொடிகாமம், டிசெ.31

நடமாடும் மீன் வியாபாரிகளுக்கு வரிக்கட்டணம் அறவிட வேண்டும் என்று சாவகச்சேரி பிரதேச சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபை உறுப்பினர் ஜெ.நிதர்சன் கடந்த26ஆம் திகதிய சபை அமர்வில் இதை முன்வைத்துள்ளார்.

மீன் வியாபாரிகள் நாகர்கோவில் பகுதியிலிருந்து மீன்களை எடுத்து வந்து எழுதுமட்டுவாழ் தொடக்கம் மிருசுவில் ஆசைப்பிள்ளையேற்றம், உசன், படித்த மகளிர் திட்டம், விடத்தற்பளை ஆகிய இடங்களில் மோட்டார் சைக்கிள்களில் நடமாடும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் மக்கள் சந்தையில் கொள்வனவு செய்வது வெகுவாகக் குறைந்துள்ளது. இதனால் தமது வருமானம் குறைவடைந்துள்ளது என்று சந்தை மீன் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

நடமாடும் மீன் வியாபாரிகளுக்கு மாதாந்தம் அல்லது வாராந்தம் அந்தத் தொகையை அல்லது மீனின் நிறைக்கேற்ப கட்டணத்தை வசூலிப்பதன் மூலம் பிரதேச சபைக்கு வருமானத்தை ஏற்படுத்தலாம். எமது பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில்தான் அவர்களுக்கு வருமானம் வருகிறது. சகல நடமாடும் சேவைகளுக்கும் கட்டுப்பாடு இருக்க வேண்டும். வரி அறவிட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (த-159)

# வடக்கில் பகை: கிழக்கில் உறவு!

## ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் நிலைப்பாடு இது



**மட்டக்களப்பு, டிசெ. 31**

**கிழக்கில் தமிழ் தேசிய கூட்டமைப்புடன் சேர்ந்து செயற்படத் தயார் என்று தெரிவித்துள்ளார் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் பிரதித் தலைவரும் கிழக்கு மாகாண முன்னாள் உறுப்பினருமான இரா.துரைரெத்தினம்.**

மட்டக்களப்பு வாவிக்கரை வீதியல் அமைந்திருக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சிக் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: கடந்த மாதம் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியால் கூட்டப்பட்ட கட்சிக் கூட்டத்தில் மத்தியகுழு தெளிவாகத் தீர்மானம் எடுத்துள்ளது. அந்தத் தீர்மானத்தில் கிழக்கு மாகாணத்தை பொறுத்தளவில் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஐக்கியத்துக்குத் தடையாக இருந்து விடக்கூடாது. தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை அதிகரிக்கச் செய்வதற்கும் கிழக்கு மாகாண சபையில் தமிழர் ஒருவர் முதலமைச்சராக வருவதற்கும் எமது கட்சி கிழக்கு மாகாணத்தில் ஒற்றுமைப்பட்டால் மட்டும் தான் அது முடியும். எனவே ஈ.பி.ஆர்.எல்.எவ் ஐ பொறுத்தளவில் எந்தச் சந்தர்ப்பத்திலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்களுடைய வாக்குகளைப் பிரிப்பதற்கு உறுதுணையாக நிற்காது. அதே வேளை தமிழர் பிரதிநிதித்துவத்தை பாதுகாப்பதற்காக எதிர்காலத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் பேசுவதற்கான தயார் நிலையில் இருக்கின்றோம்.

வடக்கு நிலைமைகள் வேறு. கிழக்கு நிலைமைகள் வேறு. வடக்கை பொறுத்தமட்டில் யார் போட்டியிட்டாலும் தமிழ் பிரதிநிதிகள் வரக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன.

ஆனால் கிழக்கைப் பெறுத்தவரையில் கடந்த 40 வருடமாக அபிவிருத்தியிலும் அரசியல் ரீதியாக இன ரீதியாகவும் வீதாசார அடிப்படையிலும் பாதிக்கப்பட்டுள்ளது தமிழ் சமூகம்.

இதன் அடிப்படையில் மக்கள் பல கோரிக்கைகளை எம்மிடம் முன் வைத்திருக்கின்றார்கள். எனவே எதிர்காலத்தில் தமிழர்களுடைய வாக்குகள் பிரிபடாமல் பார்த்துக் கொள்ளக்கூடிய முழுப்பொறுப்பும் எம்மிடமே உள்ளது - என்றார். (ம)



## 'ஈ-கற்றல்' நிலையம் திறப்பு

வவுனியா,டிசெ.31

'கல்வியால் எழுவோம்' எனும் தொனிப்பொருளில் வவுனியாவில் 'ஈ - கற்றல்' நிலையத் திறப்பும், சாதனையாளர் கௌரவிப்பும் நேற்றுமுன்தினம் நடைபெற்றன.

வவுனியா திருநாவற்குளம் கிராம அபிவிருத்தி சங்கத்தின் மண்டபத்தில் வவுனியா நகரசபை உறுப்பினர் சுந்தரலிங்கம் காண்டீபன் தலைமையில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக மருத்துவர் திருமதி. திருமகள் திருவருட்செல்வன் கலந்துகொண்டு 'ஈ -கற்றல்' நிலையத்தைத் திறந்து வைத்தார்.

இக்கற்றல் நிலையமானது சமத்துவத்திற்கும் நீதிக்குமான மத்திய நிலையம், தமிழ் தேசிய இளைஞர் கழகம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் என்பவற்றின் பங்களிப்புடன் இந்தக் கிராமத்தில் நிறுவப்பட்டது.

அதிதிகள் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டு மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இலங்கைக் கூடைப்பந்தாட்ட தேசிய அணியில் இடம்பிடித்து விளையாடிவரும் வவுனியாவைச் சேர்ந்த கந்தவநேசன் கபிலவன் மற்றும் புலமைப் பரிசில் பரீட்சையில் அதிக மதிப்பெண்களை பெற்று சாதனை புரிந்த மாணவர்கள் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் திருநாவற்குளம் கிராமத்தின் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (ஐ-110)








புதிய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ காணாமல் ஆக்கப்பட்ட எவரும் உயிரோடில்லை என்று அண்மையில் தெரிவித்திருந்தார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், காணாமல் ஆக்கப்பட்ட தங்களின் உறவுகளுக்கு நீதி கோரியும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று கிளிநொச்சியில் மாபெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர். (க-35)



# பணப் பர்ஸும் அதிர்ஷ்டமும்....



ஒவ்வொருவரும் அதிர்ஷ்டத்தை ஏதாவது ஒரு ரூபத்தில் எதிர்பார்த்துக் கொண்டுதான் பயணித்து கொண்டிருக்கின்றனர். உங்களுடைய மணிபர்ஸில் எந்தெந்த பொருள்களை வைத்தால் அதிர்ஷ்டம் கிடைக்கும் என்பதைப் பார்ப்போம்.

முதலில் நீங்கள் உபயோகப் படுத்தும் பர்ஸ் எந்த நிறத்தில் வேண்டுமானாலும் இருக்கலாம், ஆனால் அதில் கருமை நிறம் இல்லாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். கருமை நிற பர்ஸ்களை உபயோகிக்க வேண்டாம் அது அதிர்ஷ்டத்தைத் தராது.

தெய்வ உருவபடங்களில் அதிர்ஷ்டத்தை வாரி வழங்கக்கூடிய லட்சுமிதேவி அல்லது குபேரன் படங்களை திறந்தவுடன் தெரியுமாறு வைத்துக் கொள்ளலாம்.

கிராம்பு, சோம்பு, பட்டை, ஏலம், பச்சைக் கற்பூரம் இவை ஐந்தும் கலந்த ஒரு சிறிய பொதியை பர்ஸில் வைப்பதன் மூலம் அதிர்ஷ்டத்தை வரவழைக்க முடியும்.

மேலும் கோமதி சக்கரம் மற்றும் சோலி இவைகளை பர்ஸில் வைப்பதன் மூலமும் பணத்தை ஈர்க்க முடியும். சிறிய அளவில் ஒற்றைப்படை எண்ணிக்கையில் இருப்பது நல்லது.

உங்களுடைய மணிபர்ஸை பின் பாக்கெட்டில் வைப்பதை தவிர்த்து பாருங்கள். மேலும் எந்த வித மானசிறிய ஆயுதம் சார்ந்த பொருள்களையும் வைக்கக் கூடாது.

அரச இலையை பர்ஸில் வைத்தால் குறிக்கோள் வெற்றியடையும். நினைத்த செயல் வெற்றிகரமாக நிறைவேறும். மயில் இறகு வைத்துக் கொள்ளலாம் அதன் மூலம் மென்மையான மற்றும் அமைதியான மன நிலையில் இருக்க முடியும்.

பச்சை நிறத்திற்கு பணத்தை ஈர்க்கும் சக்தி இருக்கிறது.

ஒவ்வொரு முறை சம்பளம் வாங்கும் போதும் நல்ல காரியத்திற்காகக் செலவிடுவது நல்லது. இவை தெய்வ கடாட் சத்தைப் பரப்பி அதிர்ஷ்டத்தை வரவழைக்கும் வழியாகும்.

# சர்ப்ப தோஷம்



முன் ஜென்மத்தில் வாழ்ந்த போது பாம்பிற்கோ அல்லது பிற விலங்கினங்களுக்கோ நீங்கள் கேடு விளை வித்திருந்தால் உங்களுக்கோ அல்லது உங்களது சந்ததியினருக்கோ நாக சர்ப்ப தோஷம் ஏற்படும்.

இரண்டு பாம்புகள் இணைந்திருக்கும் போது அவற்றைக் கொல்ல முயலும்போது ஒன்றை மட்டும் கொன்றால் மற்றது தப்பித்துவிட்டால் அது மிகக் கொடூரமான பாவமாகும்.


இந்தப் பாவம் செய்தவர்கள்தான் மறுபிறவியில் லக்னத்தில் ராகு அல்லது கேது தனித்திருக்கப் பிறக்கின்றனர். அப்படி அடிக்கும்போது அது உங்களை ஒன்றும் செய்ய மாட்டேன் என்னை விட்டுவிடுங்கள் என்பதைப் போல தனது வாலால் மூன்றுமுறை தரையில் அடித்துச் சத்தியம் செய்யும். அப்போது அதை உயிரோடு விட்டுவிட்டால் நீங்கள் சர்ப்ப தோஷத்திலிருந்து தப்பித்தீர்கள். இல்லாவிட்டால், அது உங்களின் அடிதாங்காமல் உயிர்விட்டால், சாபம் தந்துவிட்டு இறக்கும்.

காலனான ராகுவுக்கும், சர்ப்பமான கேதுவுக்கும் இடையில் கிரகங்கள் இருக்கின்றமை கால சர்ப்ப தோஷம் எனப்படும். கால சர்ப்ப தோஷம் என்பது ராகு, கேது ஆகிய இருபாம்புக்களுக்கிடையே மற்ற ஏழு கிரகங்களும் அடைபட்டு இருப்பதாகும்.

இது ஜாதகத்தில் உள்ள நல்ல யோகங்களை நசுக்கி கெடு பலன்களை தரும் என்பது ஐதீகம். ராகு, கேது இருவரும் விஷம் உள்ள பாம்புகள். இவர்களுக்கு இடையே சிக்கி முன்னும் பின்னும் இவர்களின் விஷத்தால் தாக்கப்படுவதால் கிரகங்கள் செயல் இழக்கின்றன என்பது கருத்து.

ராகுவிற்கு பாம்பின் உடல் குணத்தால் வாலில் விஷம், கேதுவிற்கு பாம்பின் தலையானதால் தலையில் விஷம். இந்த அடிப்படையில் கால சர்ப்ப தோஷம் அமைகிறது. சர்ப்ப தோஷம் என்பது திருமணத்தில் தடைகள், திருமணம் அமைவதில் தடைகள், திருமண வாழ்க்கை ஆகியவற்றில் தடைகள் ஏற்படும்.

# மார்கழி மாத ராசிபலன்



# அதிர்ஷ்டத்தை அள்ளப் போகும் ராசிக்காரர்கள் யார்?

## துலாம்

தன் ரசனைக்கேற்ப வாழ்க்கையை மாற்றி அமைத்துக் கொள்ளும் திறன் படைத்த துலா ராசி அன்பர்களே, உங்கள் ராசி நாதன் சுக்கிரன் உங்கள் ராசிக்கு நான்கில் சஞ்சரிப்பதால் தாயின் அன்பும், அரவணைப்பும் கிடைக்கும். புதிய நிலம், வீடு, வாகனம் வாங்குவதற்கான முயற்சிகள் கைகூடும். மாணவர்கள் கல்வியில் மேன்மை பெறுவார்கள்.

குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். உங்களின் முயற்சிகளுக்கு குடும்பத்தினர் உறுதுணையாக இருப்பார்கள். பொருளாதார நிலையில் உயர்வு ஏற்படும். உங்கள் சாதுரியமான பேச்சால் அனைவரையும் கவருவீர்கள். மனதில் தைரியம், உற்சாகம் அதிகரிக்கும். சகோதர, சகோதரிகளிடையே கருத்து வேறுபாடுகள் வர வாய்ப்புள்ளமையால் கவனம் தேவை.

குழந்தைகள் உடல்நிலையில் கவனம் தேவை. குழந்தைகளால் பிரச்சினை வர வாய்ப்புள்ளதால், கண்காணிப்பில் வைத்து அன்புடன் அரவணைத்துச் செல்வது நல்லது. எதிரிகளால் சிறு பிரச்சினை வர வாய்ப்புள்ளதால் எந்தப் பிரச்சினையையும் நாசூக்காக கையாளுங்கள்.

வெளியூர் பயணங்களில் உங்கள் உடைமைகளைபாதுகாப்பாகவைத்துக் கொள்ளுங்கள். தம்பதியர்களுக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும்.

இல்லறத்தில் மகிழ்ச்சி உண்டு. மனைவி வழி சொத்து சேர்க்கை உண்டாகும். வியாபாரத்தில் புதிய ஒப்பந்தங்களால் லாபம் கிடைக்கும். கூட்டாளிகள் உதவிகரமாக இருப்பார்கள். தந்தையுடன் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், தந்தை உங்களுக்கு உதவிகரமாக இருப்பார்.

தந்தையின் மூலம் தனவரவு உண்டு. வெளிநாட்டு வேலைவாய்ப்பு முயற்சிகள் கைகூடும். உங்கள் உத்தியோகம் மற்றும் தொழிலில் உங்களின் திறமையை வெளிப்படுத்துவீர்கள்.

கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டு சாதனை படைப்பீர்கள். உங்கள் புகழ், செல்வாக்கு அதிகரிக்கும். உயரதிகாரிகள் சாதகமாக இருப்பார்கள். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும்.

அதிர்ஷ்டமான நாள்கள்:
ஜனவரி 2, 3, 4, 9, 10, 11.

## விருச்சிகம்

தீர்க்கமான முடிவெடுத்து வேகமாகச் செயற்படும் விருச்சிக ராசி அன்பர்களே உங்கள் ராசி நாதன் செவ்வாய் பகவான் உங்கள் ராசிக்கு 12 ல் சஞ்சரிப்பதால் எதிலும் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டிய காலமாகும். வீண் விரயங்கள் செலவுகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் சிக்கனம் தேவை.

உங்கள் நீண்டநாள் ஆசைகள் நிறைவேறும். உங்கள் முயற்சிகள் வெற்றியடையும். எதிர்பாராத அதிர்ஷ்டமும், தனவரவும் உண்டு.

உங்கள் பேச்சில் அதிக கவனம் தேவை. குடும்ப விடயத்தில் கவனமுடன் செயற்படுங்கள். எந்த பிரச்சினைகளையும் பெரிதுபடுத்த வேண்டாம். பொருளாதார நிலையில் ஏற்றத்தாழ்வு இருந்தாலும், திடீர் பொருளாதார உயர்வு ஏற்படும். சகோதர, சகோதரிகளால் விரயம் ஏற்படும்.

புதிய முயற்சிகளை இந்தக் கால கட்டத்தில் தவிர்ப்பது நல்லது. தாயின் உடல் நிலையில் கவனம் தேவை. தாய் மற்றும் உறவினர்களால் பிரச்சினை வந்து நீங்கும். இருப்பினும் அனைத்தையும் சமாளித்து விடுவீர்கள். யாரையும் முழுமையாக நம்ப வேண்டாம். குழந்தைகளால் மகிழ்ச்சி ஏற்படும்.

நீண்ட நாளாக குழந்தைப் பாக்கியத்துக்கு ஏங்கியவர்களுக்குக் குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். பூர்வீக சொத்து பிரச்சினைகள் காலதாமதம் ஆனாலும் சாதகமாக அமையும். தற்போது பங்குச் சந்தை விடயங்களில் தலையிடாமல் இருப்பது நல்லது.

எதிர்பாராத அதிர்ஷ்டமும், தன லாபமும் உண்டாகும். மனைவியால் ஆதாயம் உண்டு. மனைவி வழியில் தன வரவும், சொத்து சேர்க்கையும் உண்டாகும். உங்கள் செயல்களுக்கு உங்கள் மனைவி உறுதுணையாக இருப்பார். புதிய நகை, ஆபரணங்கள் சேர்க்கை ஏற்படும்.

தந்தையால் அனுகூலம் உண்டு. வேலை வாய்ப்பிற்காக வெளிநாடு செல்வதற்கான முயற்சிகள் கைகூடும். தொழில் மற்றும் உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். உங்கள் அணுகுமுறையும், நிர்வாகத்திறனும் மற்றவர்களால் பாராட்டப்படும்.

**அதிர்ஷ்டமான நாள்கள்:**
**ஜனவரி 4, 5, 6, 13, 14.**

## சிங்களத்...

இலங்கையின் தேசிய கீதத்தை 72ஆவது சுதந்திர தின நிகழ்வில் தமிழ் மொழியில் பாடுவதற்குத் தடை விதிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனப் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் ஜனக்க பண்டார தென்னக்கோன் சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார். இது தமிழர்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. அது தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே ஜனாதிபதியும், பிரதமரும் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது: தேசியக் கொடியும், தேசிய கீதமும் எல்லோருக்கும் பொதுவானது. இந்தநிலையில், சிங்கள மொழியில் மாத்திரம் தேசிய கீதத்தை இசைப்பதற்கும், தமிழ் மொழியைப் புறக்கணிப்பதற்கும் இலங்கை அரசு இதுவரையில் எவ்விதமான உத்தியோகபூர்வ தீர்மானங்களையும் எடுக்கவில்லை. இது தொடர்பில் வெளிவரும் தனிப்பட்ட நபர்களின் செய்திகளை எவரும் ஊதிப் பெருப்பிக்கக் கூடாது.

இலங்கையின் 72ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் இந்த முறை மிகவும் கோலாகலமாக நடைபெறும். இதில் சிங்கள, தமிழ், முஸ்லிம் என மூவினத்தவர்களும் எந்தவித வேறுபாடின்றியும் பங்கேற்பார்கள்.

நாம் மூவின மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசு. எனவே, சிங்கள மக்களை அரவணைத்துக்கொண்டும் தமிழ், முஸ்லிம் மக்களைப் புறக்கணித்துக் கொண்டும் நாம் செயற்பட முடியாது. மூவின மக்களும் இந்த நாட்டின் ஒரு தாய் வயிற்றுப்பிள்ளைகள்என்றனர். (எ-22)

## வடக்கின்...

யில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார். ஜனாதிபதி செயலகத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ள பி.எஸ்.எம். சாள்ஸ் எதிர்வரும் சில தினங்களில் தனது கடமைகளைப் பொறுப்பேற்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது. வடக்கு மாகாணத்தின் முதல் பெண் ஆளுநர் இவராவார்.

ஆட்சி மாற்றம் இடம்பெற்ற பின்னர் நாடளாவிய ரீதியில் அனைத்து ஆளுநர்களும் பதவிகளில் இருந்து விலக்கப்பட்டனர். அதன்பின்னர் உடனடியாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களுக்கு ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர். அதன்பின்னர் கிழக்கு மாகாண ஆளுநர் நியமிக்கப்பட்டார். எனினும் வடக்கு மாகாணத்துக்கு ஆளுநர் நியமிக்கப்படவில்லை.

வடக்கு மாகாண ஆளுநருக்குப் பல தரப்பினரால் பல பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டிருந்தன.

இலங்கை நிர்வாக சேவை அலுவலர் ஒருவரை அவரது சேவைக்கான வரப்பிரசாதங்களுடன் ஆளுநர் பதவிக்கு நியமிப்பதற்காக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு அமைச்சரவை அண்மையில் ஒப்புதலை வழங்கியிருந்தது. தற்போது இலங்கை நிர்வாக சேவை மூத்த அதிகாரி பி.எஸ்.எம்.சாள்ஸ் ஆளுநராக நேற்று நியமிக்கப்பட்டுள்ளார். (எ-21,22)

## 31 லட்சத்தை...

கள் காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் இது தொடர்பாக நேற்று முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு ஒரு மாதத்துக்கு முன்னர் குறுந்தகவல் ஒன்று வந்துள்ளது. லண்டனில் நடந்த சீட்டிழுப்பு ஒன்றில் இந்தத் தொலைபேசி இலக்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. 10 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண் (இலங்கை நாணய மதிப்பின்படி ஏறத்தாழ இரண்டரைக் கோடி ரூபா), பி.எம். டபிள்யூ. கார் என்பன விழுந்துள்ளன என்று அந்தக் குறுந்தகவலில் குறிப்பிட்டிருந்ததுடன், தொடர்பு கொள்ளும் மின்னஞ்சலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இவர்கள் மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொண்டபோது காரின் திறப்புப் படம், ஸ்ரேலிங் பவுண் பணக் கற்றைகள் எனப் படங்கள் வந்துள்ளன. முதற்கட்ட நடவடிக்கைகளுக்காக 92 ஆயிரம் ரூபா பணம்தேவை என்றும் குறிப்பிடப்பட்டிருந்துள்ளது. அதையடுத்து இவர்கள் பணத்தை வங்கியில் வைப்பிலிட்டுள்ளனர்.

அதன்பின்னர் மின்னஞ்சல் மூலமும், குறுந்தகவல்கள் ஊடாகவும் தகவல்கள் பரிமாறப்பட்டுள்ளன. மின்னஞ்சலுக்கு படிவங்களை அனுப்பிய அந்த மர்ம நபர்கள், ஒவ்வொரு திணைக்களத்துக்கும் வரி கட்ட வேண்டும் என்று தெரிவித்துப் பகுதி பகுதியாகப் பணம் அறவிட்டுள்ளனர். பணமும், காரும் இலங்கை வந்துவிட்டது என்று தெரிவித்து பல திணைக்களங்களுக்குரிய போலிப் படிவங்களை அவர்கள் அனுப்பிப் பணத்தை வங்கியிலில் வைப்பிலிட வைத்துள்ளனர்.

இவ்வாறு சுமார் ஒரு மாதம் நடந்துள்ளது. மொத்தமாக 31லட்சம் ரூபா பணம் வைப்பிலிடப்பட்டுள்ளது. இங்குள்ளவர்கள் பெரும் தொகைப் பணம் வரவுள்ளது என்றநம்பிக்கையில் வட்டிக்குப் பணத்தை வாங்கியும், நகைகளை அடகு வைத்தும் இந்தப் பணத்தை வைப்பிலிட்டுள்ளனர். ஒரு கட்டத்தில் பணத்தையும், காரையும் கொழும்பு, வெள்ளவத்தையில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு அந்த மர்ம நபர்கள் தெரிவித்துள்ளனர். பெருந்தொகைப் பணம் என்பதால் உடனடியாகத் திறந்து பார்ப்பது ஆபத்து என்றும், அதன் பணம் மற்றும் காரின் ஆவணங்கள், திறப்பு என்பன அடங்கிய பெட்டி ஒன்று தரப்படும் என்றும், வீட்டுக் கொண்டு சென்றபின்னர் பெட்டியின் திறப்பு அவர்களின் வீட்டுக்கு வரும் என்றும் அந்த மர்ம நபர்கள் கூறியுள்ளனர். இதை நம்பிய குறித்த குடும்பத்தினர் கொழும்பு ,வெள்ளவத்தைக்குச் சென்றனர். அங்கு ஓரிடத்தில் அவர்களிடம் கறுப்புப் பெட்டி ஒன்றைக் கையளித்த ஒருவர் உடனடியாக மாயமாகிவிட்டார். இவர்கள் அந்தப் பெட்டியோடு வீட்டுக்கு வந்துள்ளனர். அதன்பின்னர் அந்த நபர்கள் தொடர்பு கொள்ளவில்லை. பெட்டியின் திறப்பும் வரவில்லை.

அதற்கு மேலும் பொறுக்க முடியாது பெட்டியை உடைத்தபோதே தாங்கள் ஏமாற்றப்பட்டுள்ளமை அவர்களுக்குப் புரிந்துள்ளது. அந்தப் பெட்டிக்குள் உடைந்த போத்தல் துண்டுகள், பஞ்சு, நாணயத்தாள் அளவிலான கறுப்பு நிறக் காகிதங்கள் என்பன மட்டுமே இருந்தன.

பாதிக்கப்பட்டவர்கள் இந்த விடயம் தொடர்பாக நேற்றுக் காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் முறைப்பாடு செய்ததுடன் பறிமாறிக் கொண்ட தகவல்கள், ஆவணங்கள் கையளித்துள்ளனர். இந்தப் பணம் பல வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

இந்த மோசடி நடவடிக்கை தொடர்பாக காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் சி. டபிள்யூ. சேனாதிர தலைமையில் தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான மோசடிச் சம்பவங்கள் சில முன்னர் பதிவாகியுள்ளபோதும், இவ்வளவு பெரும் தொகை மோசடி செய்யப்பட்டுள்ளமை இதுவே முதல் தடவை என்று பொலிஸார் கூறுகின்றனர். (எ-26)

## கிணற்றுக்குள்...

சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு குழந்தையின் தந்தை வெளியே சென்று வீடு திரும்பிய போது வீட்டில் குழந்தையைக் காணவில்லை. மனைவியிடம் கேட்டபோது அவருக்கும் குழந்தை எங்கே என்று தெரியவில்லை. அதையடுத்து அயலவர்கள் இணைந்து தேடியபோது வீட்டிலிருந்து 100 மீற்றர் தொலைவில் உள்ள காணி ஒன்றில் உள்ள கிணற்றில் குழந்தை சடலமாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஈச்சங்குளம் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. அவர்கள் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். தடயவியல் பொலிஸாரும் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

சடலத்தைப் பார்வையிட்ட வவுனியா பதில் நீதிவான் உடல் கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு உத்தரவு பிறப்பித்தார். சடலம் உடல் கூற்றுப் பரிசோதனைக்காக வவுனியா பொது மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குழந்தையின் வாய் மற்றும் கண் ஆகியவற்றில் இரத்தக் கறை படிந்துள்ளது என்று தடயவியல் பொலிஸார் தெரிவித்துள்ளனர். குழந்தை கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற ரீதியிலும் விசாரணைகள் நடைபெறுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-110)

## தொடர்...

தால், யாழ்.குடாநாட்டு மக்களிடையே பெரும் அச்சநிலை தோன்றியுள்ளது.

இந்தத் தொடர் கொள்ளைகளின் வரிசையில் யாழ்ப்பாணம், அச்சுவேலியில் உள்ள வீடொன்றில் நேற்றும் அதிகாலை 45 பவுண் நகைகளும், 30 ஆயிரம் ரூபா பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளன என்று அச்சுவேலிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தந்தை, தாய், இரு பிள்ளைகள் அந்த வீட்டில் வசிக்கின்றனர். வீட்டிலிருந்த நாய் தொடர்ந்து குரைத்ததால் வீட்டிலிருந்தவர்கள் எழுந்து பார்த்துள்ளனர். அப்போது வீட்டின் "கேற்" திறந்திருந்ததை அவதானித்துள்ளனர். அதையடுத்து அவர்கள் வீட்டின் கதவைத் திறந்து வெளியே சென்றபோது, ஆயுதங்களுடன் 5 பேர் வீட்டுக்குள் நுழைந்துள்ளனர்.

முகங்களை மறைத்து கூரிய ஆயுதங்களுடன் நுழைந்த அவர்கள் வீட்டிலிருந்தவர்களை அச்சுறுத்தி நகைகள், பணம் என்பவற்றைக் கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த 27ஆம் திகதி சாவகச்சேரியில் வீடொன்றுக்குள் புகுந்து 47 பவுண் தங்க நகைகளையும், பருத்தித்துறை இன்பர்சிட்டியில் கடந்த 28 ஆம் திகதி 24 பவுண் தங்க நகைகளும் கொள்ளையிடப்பட்டிருந்தன. தற்போது அச்சுவேலியிலும் கொள்ளையர்கள் கைவரிசையைக் காட்டியுள்ளதால் மக்களிடையே அச்சநிலை எழுந்துள்ளது. (எ-26)

## உறவுகளைத்...

ளின் உறவினர்கள் புதிய ஆண்டிலாவது தமது உறவுகளை விடுவிக்க வேண்டும், வெளிப்படுத்த வேண்டும் எனக் கோரி இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். முற்பகல் 11 மணியளவில் கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்பாக ஆர்ப்பாட்டம் ஆரம்பமானது.

கடத்தப்பட்ட, கையளிக்கப்பட்ட மற்றும் சரணடைந்த தமது உறவுகள் எங்கே? அவர்களின் உண்மை நிலையை வெளிப்படுத்துங்கள். சர்வதேசமே எமது உறவுகள் தொடர்பில் உண்மையை கண்டறியுங்கள் என்பன போன்ற வாசகங்கள் அடங்கிய பாதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், பொது மக்கள், அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், பல்கலைக் கழக மாணவர்கள் எனப் பல தரப்பினரும் கலந்து கொண்டனர். (எ-6)





# இன்றைய நாள்

**மேடம்:** வாழ்வில் புதிய வசந்த காலம் உருவாகும். தொழில், வியாபாரம் நல்ல விதமாக முன்னேற்றம் பெறும். அபரிமிதமான அளவில் பண வரவு கிடைக்கும். புதிய வாகனம் வாங்க திட்டமிடுவீர்கள்.

**இடபம்:** முக்கியமான விஷயத்தில் சுமுக தீர்வு ஏற்படும். தொழில், வியாபா ரத்தில் முன்னேற கூடுதல் பணி புரிவீர் கள். தாராள பண வரவு கிடைக்கும். பணி யாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

**மிதுனம்:** எதிர்காலப் பணிகளுக்காக முன்னேற்பாடு செய்வது நல்லது. தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். சேமிப்புப் பணம் முக்கிய செலவுக்கு பயன்படும்.

**கடகம்:** குடும்ப உறுப்பினர்களின் ஆதரவு நம்பிக்கை தரும். தொழில், வியாபாரத்தில் இலக்கு படிப்படியாக நிறைவேறும். கொஞ்சம் கடன் பெறு கின்ற நிலை உண்டு. கண்களின் பாதுகாப்பில் கவனம் வேண்டும்.

**சிம்மம்:** செயலில் லட்சிய நோக்கம் நிறைந்தி ருக்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற அதிக மூல தனம் செய் வீர்கள். உற்பத்தி, விற்பனை அதிக ரிக்கும்.

**கன்னி:** சொந்த நலன்களை தியாகம் செய்வீர்கள். பலராலும் அனுகூலம் கிடைக்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கூடுதல் பணி புரிவீர்கள். பண பரிவர்த்தனைசீராகும்.எதிர்பார்த்தசுபசெய்தி வந்துசேரும்.

**துலாம்:** உருவாகிற கூடுதல் பணிகளால் சிரமம் ஏற்படலாம். பொறுப்புணர்வுடன் செயல்படுவது அவசியம். தொழில், வியாபாரம் ஓரளவு வளர்ச்சி பெறும். பண வரவு சிக்கன செலவுகளுக்கு பயன்படும்.

**விருச்சிகம்:** அறிமுகம் இல்லாதவரிடம் பொது விடயம் பேச வேண்டாம். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் உழைப்பு தேவைப்படும். பணப் பரிவர்த்த னையில் பாதுகாப்பு பின்பற்றவும்.

**தனுசு:** நற்செயல்கள் அனுகூல பலன்களை பெற்று தரும். இஷ்ட தெய்வ அருளால் தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி அதிகரிக்கும். உபரி பண வருமானம் கிடைக்கும்.

**மகரம்:** சிலர் சுய லாபத்திற்காக உதவ முன் வருவர். தொழில், வியாபாரத்தில் கூடுதல் உழைப்பு வளர்ச்சியை உரு வாக்கும். தியானம், தெய்வ வழிபாடு மனதில் அமைதி தரும்.

**கும்பம்:** மனதில் உற்சாகமும், நம்பிக்கை யும் வளரும். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் பணி புரிவீர்கள். முக்கிய வீட்டு உபயோக பொருள் வாங்குவீர்கள்.

**மீனம்:** நண்பரின் யதார்த்தமான பேச்சு சங்கடத்தை ஏற்படுத்தும். தொழில், வியா பாரத்தில் சராசரி உற்பத்தி, விற்பனை இருக்கும். பண வரவுக்கேற்ப, செலவு களைத் திட்டமிடுவீர்கள்.

# வடகொரிய அதிபர் கிம் இராணுவ ஆலோசனை!

பியாங்யாங், டிசெ. 31

**அணு ஆயுத சோதனைகள் தொடர்பாக அமெரிக்காவுடனான உறவில் பதற்றமான சூழல் நிலவிவரும் நிலையில், நாட்டின் பாதுகாப்பை உறுதிப் படுத்துவது குறித்து வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் இராணுவ ரீதியிலான முக்கிய ஆலோசனை நடத் தியுள்ளார்.**



ஆலோசனைக் கூட்டத்தில், வெளி யுறவு விவகாரங்கள், பாதுகாப்புப் படைகள் போன்றவற்றின் நடவடிக் கைகள் குறித்தும், நாட்டின் பாது காப்பையும் இறையாண்மையை யும் உறுதிப்படுத்துவதற்கு தாக்கு தல் நடவடிக்கைகள் அவசியம் என்பதையும் கிம் வலியுறுத்தினார் எனசெய்திகள் வெளியாகியுள்ளன. உலக நாடுகளின் எதிர்ப்பை மீறி தொடர்ந்து அணு ஆயுத சோத னைகள் நடத்தியதற்காக, ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்கா தலைமையில் வடகொரியாவின் மீது புதிய பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டன. எனினும், அமெ ரிக்காவின் பொருளாதாரத் தடைக ளைப் பொருட்படுத்தாமல் வடகொ ரியா அவ்வப்போது ஏவுகணை சோதனைகளை நடத்தி வந்தது. இந்நிலையில் தென்கொரியாவில் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் வடகொரியா பங்கேற் றது. அது முதல் வடகொரியா தென்கொரியா உறவில் இணக்கம் காணப்பட்டு ட்ரம்ப் - கிம் இடையே சந்திப்பு நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக, வடகொரிய அதிபர் கிம், அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கலந் துகொண்ட உச்சி மாநாடு வியட் நாம் தலைநகரம் ஹானோயில் நடைபெற்றது. இது இரு நாடுக ளுக்கிடையே எந்த ஒப்பந்தமும் எட்டப்படாமல் தோல்வியில் முடிந் தது. இந்நிலையில் அமெரிக்கா வடகொரியா இடையே அணு ஆயுத சோதனை தொடர்பான முறுகல்கள் இடம்பெற்று வருகின் றன. (ம)

# எனக்கு 67! உனக்கு 66



புதுடெல்லி, டிசெ. 31

கேரளாவில் முதியோர் இல்லத்தில் காத லித்த 67 வயதான கோச்சானியன் என் பவரும், 66 வயதுடைய லட்சுமி அம் மாள் என்பவரும் திருமணம் செய்து கொண்டனர். திருச்சூர் மாவட்டத்தில் உள்ள ராமவர்மபுரத்தில் முதியோர் இல் லம் உள்ளது. இது அரசால் நடத்தப்படுகி றது. இங்கு 50க்கும் மேற்பட்டோர் தங்கி யுள்ளனர். அவர்களுள் கோச்சானியன், லட்சுமியம்மாள் ஆகியோரும் அடங்கு வர். இவர்கள் இருவரும் திருமணம் செய் துகொள்ள முடிவு செய்தனர். இதைய டுத்து இதற்கான ஏற்பாடுகள் மும்முரமா கச் செய்யப்பட்டு தற்போது திருமணம் நடந்துமுடிந்துவிட்டது. (ம)


# உலகின் மிக வயதான காண்டாமிருகம் சாவு

டொடோமா, டிசெ. 31

உலகின் வயதான காண்டா மிருகம் தான்சானியாவில் உடல் நலக்குறைவால் உயிரிழந்தது.

உலகிலேயே வயதான காண்டாமிருகம் என்ற பெயரை தான்சானியா நாட்டில் வனவிலங்கு புகலிடத்தில் வசித்து வந்த பாஸ்டா என்ற பெண் காண்டா மிருகம் பெற்றிருந் தது. இந்த காண்டா மிருகத்துக்கு வயது 57. பொதுவாக காண்டாமிருகங்கள் 37 வயது முதல் 43 வயது வரை வாழ முடியும். அதே நேரத்தில் ஓர் இடத்தில் வைத்து நன் றாகப் பராமரித்து வந்தால் 50 ஆண்டு காலம்கூட வசிக் குமாம். (ம)





# உடைந்தபடகில் ஏழு சடலங்கள்!

டோக்கியோ, டிசெ. 31

ஜப்பானிய தீவு ஒன்றின் கடற்கரைக்கு அலைகளால் அடித்துவந்ததாகச் சந்தேகிக்கப்படும் வடகொரிய மீன்பிடிப் படகில் ஏழு பேரின் மோசமாக சிதைந்த நிலையிலான உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என ஜப்பானிய கடலோரக் காவல்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடகொரியாவிலிருந்து 900 கிலோமீற்றர் (560 மைல்) தொலைவில் அமைந்துள்ள ஜப்பானின்சாடோதீவின்கரைக்குவந்துசேர்ந்துள்ள இந்த உடைந்த கப்பலில் இந்த மனிதச் சடலங்கள் சனிக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டன. (ம)

# எகிப்தில் தொடர் விபத்து 28 பேர் பரிதாபமாக சாவு

கெய்ரோ, டிசெ. 31

எகிப்து நாட்டில் அடுத்தடுத்து நடந்த இரு சாலை விபத்துகளில் இந்தியர் உட்பட 28 பேர் உயிரிழந்தனர்.

எகிப்து நாட்டில் செங்கடல் பகுதியில் அமைந்த அய்ன் சொக்னா என்ற சொகுசு விடுதியை நோக்கி 2 சுற்றுலா பேருந்துகள் சென்று கொண்டிருந்தன. அவை கெய்ரோ நகரில் லொறி ஒன்றின்மீது மோதி விபத்துக்குள்ளாகின. இந்த விபத்தில் 28 பேர் உயிரிழந்தனர். (ம)


## 35 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 21 . 01 . 1936

ஆண்டவன் அடியில் 30 . 12 . 1984

### அமரர் வைரமுத்து சுப்பிரமணியம்

அப்பா நீங்கள் மறைந்து ஆண்டுகள் 35 கடந்தாலும்
உங்கள் நினைவுகளை மறக்க முடியவில்லை
என்றும் நினைவோடு வாழ்கின்றோம்
குடும்பத்தினர் அனைவரும்.

ஐயனர் கலட்டி,
பருத்தித்துறை.
(CS 001075) (14,17)
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சண்முகம் பூபதி



பிறப்பு 03.07.1933 இறப்பு 29.12.2019

யாழ்ப்பாணம் புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் P.S.C வீதி, பூந்தோட்டத்தை வசிப்பிடாகவும் கொண்ட சண்முகம் பூபதி கடந்த 29.12.2019 ஞாயிற்றுக் கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப் பிள்ளை நாகமுத்து தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற முருகேசு லக்சுமிப்பிளை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சண்முகத்தின் அன்பு மனைவியும் நீலாம்பிகை(ஹொலண்ட்) இராசாம்பிகை, விநாயகமூர்த்தி, காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, தேவாம்பிகை மற்றும் யோகாம்பிகை, சாந்தமூர்த்தி (துர்க்கா மில்), விமலாம்பிகை, விஜிதா, கவிதா ஆகியோரின் அன்பு தாயாரும் காலஞ்சென்றவர்களான புஸ்பராணி,கணேஷ்மற்றும் நவமணி ஆகியோரின் அன்புச்சகோதரியும் கஜமுகன்(ஹொலண்ட்), தர்சினி (ஹொலண்ட்), தாரணி(ஹொலண்ட்) கிருஷாந்தி(ஜேர்மனி) ரஜீவன்(பிரான்ஸ்), சுஜீவன், தவரூபன், முகுந்தரூபன், பவிதா, அனித்தா, தீபா, நிரூபா, நிரேஷன், நிவேதா, ராகுலன், தேனுசா, துர்க்காஞ்சினி, சாருஜன், சுரேக்கா, திசாந்தன், சுவேதா, மயூரா, மதுரா, வினோத், ஆகியோரின் அன்பு பேர்த்தியும், கௌதம், ஆரத்தியா, சகாணா, தக்சணா, நிலோசன், தனோசன், விேனாசன், பூமிகா, பூமிதன், பூர்த்திகன், ரவின்சா, கபின்சன், தன்சிகா, அஸ்விகா, சுதர்சன், சதுர்சன், கர்ணிகா, பவிஎயன், ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2019) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 01/01 P.S,C ஒழுங்கை,
பூந்தோட்டம், வவுனியா.
(CS 00630)(14,17)
தகவல் :
குடும்பத்தினர்.

077 340 8344/ 077 164 6858

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி சிவசூரியகுமாரன்



தோற்றம் 14.10.1952

மறைவு 30.12.2019

கரவெட்டி மத்தி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சிவசூரியகுமாரன் நேற்று (30.12.2019) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற வல்லிபுரம் - சிவகாமி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தொழிலதிபர் வல்லிபுரம் சிவசூரியகுமாரனின் (தவராஜா) ஆருயிர் மனைவியும், தயாபரன் (Regal wine store நெல்லியடி, மருதம் Paint dealer, நெல்லியடி), சுகந்தினி (சிங்கப்பூர்), குமுதினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவகௌரி, சிவைகுகன் (பொறியியலாளர், சிங்கப்பூர்), இராகுலன் (பொறியியலாளர், லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சிற்றம்பலம், சிவபாக்கியம், இலட்சுமி, பார்வதி, திரவியம்,கோப்பெருந்தேவி ஆகியோரின் சகோதரியும், வைஷ்ணவி, சக்தி, விபுஷா, சஞ்சய், பபிசன், அகிலேஸ், ஆதேஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.01.2020) புதன்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கரவெட்டி சோனப்பு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

“சோலி” இலகடி வீதி,
கரவெட்டி மத்தி, கரவெட்டி.
(IN/12117) (11,17)
தகவல்:-
குடும்பத்தினர்.

சி.தயாபரன் - 077 234 7453




லேடன் பூப்பந்தாட்ட லீக்

# யாழ்ப்பாண மாவட்ட அணி கிண்ணத்தை கைப்பற்றியது

யாழ்ப்பாணம்,டிசெ.31

யாழ். மாவட்டத்தில் முதன் முறையாக நடைபெற்ற வடக்கின் 5மாவட்டங்களுக்கு இடையிலான 6 அணிகள் மோதும் "லேடன் பூப்பந்தாட்ட லீக்" தொடரில் யாழ்ப்பாண மாவட்ட அணி சம்பியானது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய உள்ளக அரங்கில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் ஆட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட அணியை எதிர்த்து பேசாலை அணி மோதியது. 3 ஒற்றையர் ஆட்டம் 2 இரட்டையர் ஆட்டங்களாக இறுதியாட்டம் இடம் பெற்றது இதில் முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் யாழ். மாவட்ட அணி சார்பில் விளையாடிய துசந்தன் தன்னை எதிர்த்து விளையாடிய பேசாலை அணி வீரர் சர்மாவை 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றார்.

இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் பேசாலை அணி சார்பில் விளையாடிய நவீன் ராஜ் தன்னை எதிர்த்து விளையாடிய யாழ். மாவட்ட அணி வீரர் நிலக்சனை 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றார்.

மூன்றாவது ஒற்றையர் ஆட்டத்தில் பேசாலை அணி சார்பில் விளையாடிய சில்வியன் தன்னை எதிர்த்து விளையாடிய யாழ்.மாவட்ட அணி வீரர் றெமின்சனை 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றார்.

முதலாவது இரட்டையர் ஆட்டத்தில் யாழ். மாவட்ட அணி சார்பில் விளையாடிய றெமின்சன், துசந்தன் இணை தன்னை எதிர்த்து விளையாடிய பேசாலை அணி நவீன்ராஜ், யுவராஜ் இணையை 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றார்.

இரண்டாவது இரட்டையர் ஆட்டத்தில் யாழ். மாவட்ட அணி சார்பில் விளையாடிய காண்டீபன், கீர்த்தனன் இணை தன்னை எதிர்த்து விளையாடிய பேசாலை அணி சில்வியன், சர்மா இணையை 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றார். ஆட்ட முடிவில் யாழ்.மாவட்ட அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.


மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் மன்னார் மாவட்ட அணியை எதிர்த்து கிளிநொச்சி மாவட்ட அணி மோதியது. 3 ஒற்றையர் ஆட்டம் 2 இரட்டையர் ஆட்டங்களாக இறுதியாட்டம் இடம் பெற்றது. இதில் முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் மன்னார் மாவட்ட அணி சார்பில் விளையாடிய திலக்சன் தன்னை எதிர்த்து விளையாடிய கிளிநொச்சி மாவட்ட அணி வீரர் கஜனை 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றார்.

இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் மன்னார் மாவட்ட அணி சார்பில் விளையாடிய நிசந்த பாலன் தன்னை எதிர்த்து விளையாடிய கிளிநொச்சி மாவட்ட அணி வீரர் சதூர்சனை 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றார்.

மூன்றாவது ஒற்றையர் ஆட்டத்தில் மன்னார் மாவட்ட அணி சார்பில் விளையாடிய யனுஸ்ரன் தன்னை எதிர்த்து விளையாடிய கிளிநொச்சி மாவட்ட அணி வீரர் யதூர்சனை 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றார். ஆட்ட முடிவில் மன்னார் மாவட்ட அணி 3:0 என்ற செற் கணக்கில் பெற்று மூன்றாம் இடத்தை தனதாக்கியது.

(23-108)

# டிரென்ட் போல்ட்க்கு பதில் சோமர்வில் இணைப்பு



மெல்போர்ன் டெஸ்டின்போது காயமடைந்த டிரென்ட் போல்ட் தொடரில் இருந்து விலகியதால் நியூசிலாந்து அணியில் சுழற்பந்து வீச்சாளர் சோமர்வில் இணைக்கப்பட்டுள்ளார்.

ஆஸ்திரேலியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையில் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது.

முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் வெற்றி பெற்ற ஆஸ்திரேலியா அணி 2:0 என்ற கணக்கில் கைப்பற்றி முன்னிலையில் உள்ளது. 3ஆவது மற்றும் மற்றும் இறுதியுமான போட்டி ஜனவரி 3ஆம் திகதி சிட்னியில் ஆரம்பமாகவுள்ளது.

மெல்போர்னில் நடைபெற்ற 2ஆவது போட்டியின்போது நியூசிலாந்து வேகப்பந்து வீச்சாளரான டிரென்ட் போல்ட் காயமடைந்தார். இதனால் சிட்னி போட்டியில் அவர் விளையாடவில்லை. அவருக்குப் பதிலாக சுழற்பந்து வீச்சாளரான சோமர்வில் அணியில் இணைப்பட்டுள்ளார். சோமர்வில் கடந்த ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் அறிமுகமானார். இவர் அறிமுகப் போட்டியிலேயே 7 இலக்குகளை வீழ்த்தி அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்தார். அதன்பின் இலங்கைக்கு எதிராக இரண்டு போட்டிகளில் விளையாடி உள்ளார்.

# நவஜீவன்ஸ் வி.க. காலிறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், டிசெ.31

சூரியமஹால் அனுசரணையுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் 7பேர் பங்கு பற்றும் வைத்தியர் மயில்லேறும் பெருமாள் ஞாபகார்த்தமாக வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி காலிறுதியாட்டத்துக்குத் முன்னேறியது.

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமைமாலை 4மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் பதிவு செய்ததால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் காண்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(23)

# ஞானம்ஸ் வி.க. அபார வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ.31

குரும்பைகட்டி உதயசூரியன் விளையாட்டுக் கழகம் நடத்தும் இ.அஜந் ஞாபகார்த்த 3ஆவது ஆண்டு துடுப்பாட்டத் தொடரில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணி 24 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை 2மணிக்கு புலோலி இளைஞர் வி.க. மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கம்பர்மலை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழக அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 67 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிரணவன் 25 ஓட்டங்களையும் ஜெனி 20 ஓட்டங்களையும், சேந்திரன் 10 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் முரளிதரன், வினோயன், கஜன், கோகுலன் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நெற்கொழு கழுகுகள் அணி 5.2பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளை இழந்து 43 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அதிகபட்சமாக செந்தூரன் 26 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். பந்துவீச்சில் முரளிதரன் 3 இலக்குகளையும், ஜனன், ஜெனி, சதீஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்குகளை கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணி வீரர் பிரணவன் தெரிவு செய்யப்பட்டார்.

(23)






# இந்தியாவுக்கு எதிரான இலங்கை அணி அறிவிப்பு

எதிர்வரும் ஜனவரி மாதம் இந்திய அணியுடன் ஆரம்பமாகவுள்ள 3 போட்டிகள் கொண்ட ரி- 20 தொடருக்கான இலங்கை அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி லசித் மலிங்க தலைமையிலான இந்த அணிக் குழாமில் நிரோஷன் திக்வெல்ல, தனுஷ்க குணதிலக்க, குசல் ஜனித் பெரேரா, பானுக்க ராஜபக்ஷ, அஞ்சலோ மத்தியூஸ், ஓசத பெர்னாண்டோ, தசுன் சானக்க, செஹான் ஜயசூரிய, லக் ஷான் சந்தகான், வனிந்து ஹசரங்க, இசுறு உதான, நுவான் பிரதீப், லஹிரு குமார மற்றும் கசுன் ராஜித ஆகியோர் அணியில் இடம் பிடித்துள்ளனர்.

## டெஸ்ட் தரவரிசையில் டி குக், லாபஸ்சாக்னே முன்னேற்றம்

பாக்சிங் டே டெஸ்ட் போட்டியில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய லாபஸ்சாக்னே, குயின்டன் டி குக் ஐசிசி தரவரிசையில் முன்னேற்றம் அடைந்துள்ளனர்.

ஐசிசி டெஸ்ட் தரவரிசைப் பட்டியலை நேற்று முன்தினம் வெளியிட்டது. இதில் 5ஆவது இடத்தில் இருந்த லாபஸ்சாக்னே ஓர் இடம் முன்னேறி 4ஆவது இடத்தையும்,குயின்டன் டி குக் 8 இடங்கள் முன்னேறி 10ஆவது இடத்தையும் பிடித்துள்ளார். இந்திய அணித் தலைவர் விராட் கோக்லி முதல் இடத்திலும், ஆஸ்திரேலிய வீரர் சிமித் 2ஆவது இடத்திலும் தொடர்ந்து காணப்படுகின்றனர்.





ஆஸ்திரேலியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 'பாக்சிங் டே' டெஸ்ட் மெல்போர்னிலும், தென்னாபிரிக்கா-இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் போட்டி செஞ்சூரியனிலும் நடைபெற்று வருகின்றது.

நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் ஆஸ்திரேலியா அணி சார்பில் லாபஸ்சாக்னே அரைச்சதமும், இங்கிலாந்துக்கு எதிராக தென்னாபிரிக்கா வீரர் குயின்டன் டி குக் முதல் இன்னிங்சில் 95 ஓட்டங்களையும் விளாசி ஆட்டநாயகன் விருதையும் பெற்றார்.





## ஆர்ச்சருக்கு கூக்கபுர்ரா பந்தை பயன்படுத்த தெரியவில்லை

செஞ்சூரியன் டெஸ்ட் போட்டியில் ஓட்டங்களை அதிக அளவில் விட்டுக் கொடுத்த ஆர்ச்சருக்கு, கூக்கபுர்ரா பந்தை எப்படி பயன்படுத்த வேண்டும் என தெரியவில்லை என்று ஸ்டெயின் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்கா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் செஞ்சூரியனில் நடைபெற்றது. இதில் தென்னாபிரிக்கா 107 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஓட்டங்கள் குவிக்க கடினமான ஆடுகளத்தில் ஆர்ச்சர் 2ஆவது இன்னிங்சில் 5 இலக்குகளை வீழ்த்தினாலும் சராசரியாக ஒரு பந்துப்பரிமாற்றத்துக்கு 6 ஓட்டங்களை கொடுத்தார். அவர் 17 பந்துப்பரிமாற்றங்களில் 102 ஓட்டங்களை விட்டுக்கொடுத்தார்.

குறிப்பாக டி குக் அவரது பந்தில் 3 ஆறு ஓட்டங்களை விளாசினார். இங்கிலாந்தில் டியூக் பந்து பயன்படுத்தப்படும். அதேவேளையில் ஆஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்காவில் கூக்கபுர்ரா பந்து பயன்படுத்தப்படும். ஆர்ச்சர் பந்து வீச்சு பற்றி வேகப்பந்து ஜாம்பவான் டேல் ஸ்டெயின் தெரிவிக்கையில்: அப்போது, கூக்கபுர்ரா பந்தை எப்படி பயன்படுத்த வேண்டும் என்பது குறித்து ஆர்ச்சருக்கு தெரியவில்லை. அவருக்கு ஏற்ற சிறந்த துடுப்பாட்ட வீரர் டி குக்- என்றார்.

## இந்தியாவுக்கு எதிரான போட்டியில் ஆஸி. அணியில் டிஆர்கி ஷார்ட்

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் ஆஸ்திரேலிய அணியில் டிஆர்கி ஷார்ட் இணைக்கப்பட்டுள்ளார்.

ஆஸ்திரேலியா அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரில் விளையாடவுள்ளது. இதற்கான ஆஸ்திரேலியா அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த அணியில் சீன் அப்போட் இடம் பிடித்திருந்தார்.

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் பிக் பாஷ் ரி-20 லீக்கில் சீன் அப்போட் சிட்னி சிக்சர்ஸ் அணிக்காக விளையாடி வந்தார். அவருக்கு இடுப்புப் பகுதியில் ஏற்பட்ட காயத்தால் விலகியுள்ளார். இதனால் அப்போட் இந்தியாவுக்கு எதிரான தொடரில் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அவருக்குப் பதிலாக டி'ஆர்கி ஷார்ட் அணியில் சேர்க்கப்பட்டார்.

இந்தியா - ஆஸ்திரேலியா இடையிலான முதல் ஒருநாள் போட்டி மும்பையில் எதிர்வரும் ஜனவரி மாதம் 14ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

## நாதன் லயனுக்கு ஓய்வு அளிக்க வேண்டும்

### வார்னே விடாப்பிடி


நியூசிலாந்துக்கு எதிரான தொடரை 2:0 என்ற கணக்கில் ஆஸ்திரேலியா கைப்பற்றியதால் சிட்னி போட்டியில் நாதன் லயனுக்கு ஓய்வு அளிக்க வேண்டும் என வார்னே தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையில் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. இரண்டு போட்டிகளில் ஆஸ்திரேலியா அபாரமான வெற்றியை பெற்றது.

சிட்னி ஆடுகளம் ஏற்கனவே சுழற்பந்து வீச்சுக்கு கைகொடுக்கும் என்பதால் ஆஸ்திரேலியா அணியில் கூடுதலாக சுழற்பந்து வீச்சாளரான ஸ்வெப்சன் சேர்க்கப்பட்டுள்ளார். ஏற்கனவே நாதன் லயன் அந்த அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளராக திகழ்கின்றார்.

இதனால் ஸ்வெப்சனுக்கு இடம் கிடைக்குமா என்பது சந்தேகம்தான். இந்த நிலையில் தான் ஸ்வெப்சனுக்க வாய்ப்பு கிடைக்கும் வகையில் நாதன் லயன் ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும் என ஷேன் வார்னே தெரிவித்திருந்தார்.

இதுகுறித்து நாதன் லயன் தெரிவிக்கையில், மெக்கில் விளையாடுவதற்காக வார்னே என்றாவது ஓய்வு எடுத்ததுண்டா?, என்னால் ஓய்வில் இருக்க முடியாது. சிட்னி டெஸ்டில் இரண்டு ஸ்பின்னர்களுடன் விளையாடுவது குறித்து பேசப்பட்டு வருகிறது- என்றார்.





# கோலியா? டோனியா?

## இசாந் சர்மா கருத்துப் பகிர்வு



டோனி தலைமையிலான இந்திய அணியா அல்லது கோக்லி தலைமையிலான இந்திய அணியா? எது சிறந்த அணி என்று தனது கருத்தைப் பகிர்ந்துள்ளார் இசாந் சர்மா.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

டோனியின் தலைமையில் எங்களில் சிலருக்கு அனுபவம் அவ்வளவாக அனுபவம் இல்லாமல் இருந்த சமயம். வேகப்பந்து வீச்சாளர்களை மாற்றிக் கொண்டேயிருப்பார், சுழற்சி முறையில் அதிகம் தேர்வு செய்யப்பட்டனர், இதனால்தான் ஒரு பந்து வீச்சுக் குழுவாக சீரான தன்மையை எட்ட முடியாமல் இருந்தது.

இப்போது பும்ரா உட்பட 3,4 பவுலர்கள் இருப்பதால் பவுலர்களிடயே உரையாடல், கலந்தாலோசனை இருந்து வருகிறது. தொடர்பு கொள்ள முடிகிறது. முன்பு (தோனி கேப்டன்சியில்) 6,7 பந்துவீச்சாளர்கள் இருந்ததால் தொடர்பு கொள்ளுதல் இல்லை.

ஆனால் விராட் கோக்லி தலைமைக்கு வந்தபிறகு நாங்கள் கொஞ்சம் அனுபவம் பெற்றிருந்தோம். இப்போது அதிகம் விளையாடுகிறோம், ஓய்வறையில் அதிக நேரம் செலவிடுகிறோம். குடும்பத்தில் அதிக நேரம் செலவிடுவதை விட அணியுடன் தான் அதிக நேரம் செலவிடுகிறோம். விவாதங்கள் சுதந்திரமாக வும் காத்திரமாகவும் நடைபெறுகின்றன. அதனால் களத்தில் மகிழ்ச்சியாக ஆடி வருகிறோம். இது வேறு ஒரு அனுபவமாக உள்ளது.

முன்பு மூத்த வீரர்கள் நான் 20 ஓவர்கள் வீச வேண்டும் என்று எதிர்பார்த்தனர், 60 ரன்கள் கொடுத்தாலும் 3 விக்கெட்டுகளை கைப்பற்றியிருப்பேன் என்றார்கள். அது என் மனதில் புகுந்து கொண்டது' என்றார். தற்போது விராட் கோக்லி, மிட்செல் ஜோன்சனை மைக்கேல் கிளார்க் பயன்படுத்தியது போல் பயன்படுத்துகிறர், சிறு சிறு ஸ்பெல்களில் வீச அழைக்கப்படுவதால் வேகம் குறையாமல் வீச முடிகிறது என்கிறார் இஷாந்த் சர்மா.

இவையனைத்தையும் சொல்வது போக டோனி வேகப்பந்து வீச்சுக்கு நல்ல தலைவர் கிடையாது. சுழல்பந்து வீச்சாளர்களுக்குத் தான் அவர் நல்ல தலைவர் என்பதே கிரிக்கெட் நிபுணர்களின் கருத்தாகவும் அமைந்தது. வேகப்பந்து வீச்சில் டோனியின் தலைமைத்துவத் தவறுகளினால், சில வேளைகளில் ஆர்வமற்ற தலைமைத்துவத்தால் இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்காவில் படுமோசமான தோல்விகளை இந்திய அணி பெற்ற மறக்க முடியாது.

அதுவும் ஒருமுறை தென்னாபிரிக்காவில் எளிதில் வெற்றி பெற வேண்டிய டெஸ்ட் சமநிலையில் முடிந்தது. 80 பந்துப்பரிமாற்றங்கள் முடிந்தும் புதிய பந்தை எடுக்காமல் பந்தின் சணல் கண்டு வெளியே தெரியும் வரை 146 பந்துப்பரிமாற்றங்கள் வரை பழைய பந்தையே பயன்படுத்தியதில் ஆட்டம் சமநிலையானது நினைவிருக்கலாம். எனினும், டோனி தலைவராக இருந்த காலத்தில் இசாந் சர்மா ஒருதடவை 'டோனி தெரிவித்தார் மொட்டை மாடியில் இருந்தும் குதிப்பேன்'என்று தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)


FLC FRENCH LANGUAGE CENTRE
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட பிரெஞ்ச் Courses
V. Jegan (Trained in France) DELF A1,A2,B1,B2

40, பலாலி வீதி, அரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம்: 04.01.20 சனி 10 மணி

181, பிரதான வீதி, நெல்லியடி 0779 789 456 ஆரம்பம் 20.01.20 3.30 மணி

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

Techno World
தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.
மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்ற எமது மாணவர்கள்

உயிர்முறைமைகள் தொழில்நுட்ப பிரிவு (BIO SYSTEMS TECHNOLOGY)

| பெறுபேறு | பெயர் | மாவட்ட நிலை |
| --- | --- | --- |
| A2B (New Syllabus) | S.லாவண்ஜா | 04 (யாழ்ப்பாணம்) |
| 2BC (New Syllabus) | E.மதுசாளினி | 01 (கிளிநொச்சி) |
| 2BC (Old Syllabus) | S.யோகதீபன் | 01 (யாழ்ப்பாணம்) |
| B2C (New Syllabus) | யசிதா | 01 (முல்லைத்தீவு) |
| B2C (New Syllabus) | தனுஜன் | 02 (முல்லைத்தீவு) |
| 3C (Old Syllabus) | தர்சன் | 02 (கிளிநொச்சி) |
| B2C (Old Syllabus) | பிரியசாளினி | 04 (யாழ்ப்பாணம்) |

பொறியியல் தொழில்நுட்ப பிரிவு (ENGINEERING TECHNOLOGY)

| பெறுபேறு | பெயர் | மாவட்ட நிலை |
| --- | --- | --- |
| 2AB (New Syllabus) | A.ஜெனுசன் | 08 (யாழ்ப்பாணம்) |
| A2C (Old Syllabus) | யதுசன் | 03 (யாழ்ப்பாணம்) |
| C2S (Old Syllabus) | M.அருள்ராஜ் | 01 (மன்னார்) |
| 2BC (New Syllabus) | A.ஜீவரதன் | 02 (முல்லைத்தீவு) |
| 3C (Old Syllabus) | S.பிரியங்கன் | 02 (கிளிநொச்சி) |
| 3C (Old Syllabus) | P.தக்சயன் | 03 (முல்லைத்தீவு) |

புதிய பாடத்திட்டம் (New Syllabus) / பழைய பாடத்திட்டம் (Old Syllabus)

| புதிய - பொறியியல் தொழில்நுட்பவியல் | | புதிய - உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் | | பழைய - பொறியியல் தொழில்நுட்பவியல் | | பழைய - உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் | |
| --- | --- | --- | --- | --- | --- | --- | --- |
| 08 | [illegible] | 04 | [illegible] | 03 | [illegible] | 03 | [illegible] |
| 10 | [illegible] | 05 | [illegible] | 03 | [illegible] | 03 | [illegible] |
| 11 | [illegible] | 06 | [illegible] | 05 | [illegible] | 07 | [illegible] |
| 13 | N.[illegible] | 07 | [illegible] | 06 | S.[illegible] | 08 | R.பூரணிகா |
| 19 | S.பிரியலக்ஷன் | 08 | [illegible] | 06 | அஜித | 08 | [illegible] |
| 20 | [illegible] | 09 | [illegible] | 09 | [illegible] | 08 | [illegible] |
| 27 | V.ஜெயந்தன் | 10 | [illegible] | 11 | V.[illegible] | 09 | [illegible] |
| 29 | [illegible] | 10 | [illegible] | 11 | [illegible] | 10 | S.[illegible] |
| 34 | [illegible] | 11 | [illegible] | 12 | [illegible] | 11 | [illegible] |
| 36 | [illegible] | 11 | [illegible] | 13 | [illegible] | 12 | [illegible] |
| | | 12 | [illegible] | 15 | R.[illegible] | 13 | H.[illegible] |
| | | 13 | [illegible] | 15 | [illegible] | 13 | [illegible] |
| | | 14 | S.பிரியங்கா | 18 | [illegible] | 15 | [illegible] |
| | | 15 | [illegible] | 19 | [illegible] | 15 | [illegible] |
| | | 15 | [illegible] | 21 | [illegible] | 16 | M.[illegible] |
| | | 19 | [illegible] | 26 | [illegible] | 17 | [illegible] |
| | | 23 | J.[illegible] | 29 | [illegible] | 18 | [illegible] |
| | | 27 | S.[illegible] | 32 | [illegible] | 19 | [illegible] |
| | | 28 | [illegible] | | | 20 | [illegible] |
| | | 35 | N.[illegible] | | | 26 | [illegible] |
| | | 36 | [illegible] | | | 38 | [illegible] |
| | | 38 | [illegible] | | | | |
| | | 40 | [illegible] | | | | |

A/L 2020 Day Class ஆரம்பம்.
A/L 2022 புதிய பிரிவு ஆரம்பம் 04.01.2020

A/L 2020 Day Class 04.01.2020
0770175346, 0771703549

பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி, யாழ்ப்பாணம். கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்
(இரு இடங்களிலும்)

எமது நிறுவன ஆசிரியர்களிடம் கல்வி கற்று யாழ். மாவட்டத்திலும் ஏனைய மாவட்டத்திலும் கலை - வர்த்தகத்துறையில் முன்னணி அதியுயர் பெறுபேறுகளைப் பெற்று எமது நிறுவனத்துக்குப் பெருமையீட்டித்தந்த மாணவர்களினைப் பாராட்டுவதில் பெருமகிழ்ச்சி கொள்கின்றோம்.
இதுபோல் நீங்களும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிட ஆரம்பமாகின்றது

A/L Day Class
நாளை ஆரம்பம் 01.01.2020
8.00 am

A/L 2022
கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்
ஜனவரி 05
உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
077 376 3571
077 220 9651

விஸ்டம்
தொழில் நுட்பக் கல்லூரி
இல.63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.077 248 7774 / 021 221 7860

A/L 2019 தொழில்நுட்பப் பிரிவில் சித்தி பெற்றுள்ள எமது கல்லூரி மாணவர்களை
பாராட்டி வாழ்த்துகின்றோம்
(பல்கலைக்கழக நுழைவுத் தகுதியைப் பெற்றுள்ள எமது மாணவர்களில் ஒரு தொகுதியினர்)

பொறியியல் தொழினுட்பவியல்

| இல. | மாணவர் பெயர் | பெறுபேறு | பாடத்திட்டம் | மாவட்ட நிலை | மாவட்டம் |
| --- | --- | --- | --- | --- | --- |
| 01. | சி.சிந்துசன் | 3A | புதிய | 01 | யாழ் |
| 02. | வி.இராகவன் (I.Rank-04) | 2AB | பழைய | 01 | யாழ் |
| 03. | க.சுபாஞ்சன் | 2AB | புதிய | 01 | கிளி |
| 04. | செ.ஜிந்துகரன் | 2BS | பழைய | 01 | கிளி |
| 05. | எம்.அகக்கீரன் | 2BC | புதிய | 01 | முல்லை |
| 06. | எ.எம்.மெரீனா | 3A | புதிய | 01 | ஹற்றன் |
| 07. | க.திலக்ஷனா | 2BS | பழைய | 01 | முல்லை |
| 08. | எஸ்.கஜப்பிரியன் | 3A | புதிய | 02 | யாழ் |
| 09. | த.அனோஜன் | 2BC | புதிய | 02 | கிளி |
| 10. | எஸ்.வைஷ்ணவன் | 3A | புதிய | 03 | யாழ் |
| 11. | வி.கவுதமி | 2BC | புதிய | 03 | கிளி |
| 12. | டிலுக்சன் | B2C | புதிய | 03 | மட்டக்களப்பு |
| 13. | ஜெ.ஜெயக்குமார் | A2B | புதிய | 04 | யாழ் |
| 14. | ச.துஸ்யந்தி | B2C | புதிய | 04 | கிளி |
| 15. | கபிலன் | BCS | புதிய | 04 | முல்லை |
| 16. | ஆ.பகீரதன் | 2CS | பழைய | 04 | கிளி |
| 17. | ஜெ.ரெலக்ஷன் | 2AB | புதிய | 05 | யாழ் |
| 18. | என்.ருஷாந் | 2BC | புதிய | 05 | கிளி |
| 19. | மு.அதிஸ்டகுமார் | B2C | பழைய | 06 | ஹற்றன் |
| 20. | கி.சங்கரன் | 2AB | புதிய | 06 | யாழ் |
| 21. | மொ.பா.அ.அஹமட் | 3B | புதிய | 06 | திருகோண |
| 22. | த.டிதுஸ்ஷன் | C2S | பழைய | 06 | வவுனியா |
| 23. | கு.டனுஜன் | 2BC | பழைய | 07 | யாழ் |
| 24. | ம.தனுஜிகா | 3C | புதிய | 07 | கிளி |
| 25. | சி.சசிகரன் | 3B | பழைய | 08 | யாழ் |
| 26. | எம்.ரி.எம்.பஜாஸ் | A2C | புதிய | 08 | திருகோண |
| 27. | சு.தர்மராஜ் | 2BC | பழைய | 10 | யாழ் |
| 28. | டி.சரோன் கபோனா | 3B | புதிய | 11 | யாழ் |
| 29. | எம்.எம்.எ.றாசாக் | 2CS | புதிய | 11 | பொலன்னறுவை |
| 30. | ந.மயூரன் | BCS | பழைய | 11 | யாழ் |
| 31. | ட.லக்ஷன் | A2B | புதிய | 12 | யாழ் |
| 32. | கு.விதுர்ஷன் | 2BC | பழைய | 12 | யாழ் |
| 33. | ஜே.எஸ்.அஜய்டார்வின் | 2CS | பழைய | 13 | ஹற்றன் |
| 34. | கஜேந்தினி | 2BC | பழைய | 14 | யாழ் |
| 35. | கி.சனுஜன் | 2CS | பழைய | 14 | ஹற்றன் |
| 36. | கே.மிரோஜன் | 2BC | புதிய | 15 | யாழ் |
| 37. | சி.அகிலாஸ் | 2CS | பழைய | 16 | மட்டக்களப்பு |
| 38. | இ.தனுசன் | 2BC | புதிய | 16 | யாழ் |
| 39. | அ.பா.மு.றஜ்வான் | 3C | பழைய | 16 | மட்டக்களப்பு |
| 40. | மு.ஹசீம் தமீம் | B2C | பழைய | 17 | மட்டக்களப்பு |
| 41. | அ.சபேசன் | 2BC | புதிய | 18 | யாழ் |
| 42. | சி.விதுஷன் | 2BC | புதிய | 21 | யாழ் |
| 43. | க.தட்சாஜினி | 2BC | புதிய | 22 | யாழ் |
| 44. | எஸ்.கே.வசீம் | 3C | பழைய | 22 | பொலன்னறுவை |
| 45. | வி.திவாகரன் | A2C | புதிய | 23 | யாழ் |
| 46. | கா.கிருஷாந் | B2C | புதிய | 24 | யாழ் |
| 47. | ஆர்.சுதர்சன் | 2BS | புதிய | 28 | யாழ் |
| 48. | ர.சாரங்கராஜ் | 2CS | பழைய | 28 | யாழ் |

உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்

| இல. | மாணவர் பெயர் | பெறுபேறு | பாடத்திட்டம் | மாவட்ட நிலை | மாவட்டம் |
| --- | --- | --- | --- | --- | --- |
| 01. | த.லிலானியா | A2B | புதிய | 01 | யாழ் |
| 02. | சு.சுவாகி | 2BC | பழைய | 01 | கிளி |
| 03. | மு.பா.சப்னா | 2AB | பழைய | 01 | திருகோண |
| 04. | வி.நிருபா | 3C | பழைய | 02 | முல்லை |
| 05. | ஜெ.லக்சன் | 2BC | புதிய | 02 | கிளி |
| 06. | ஜெ.திபாகரன் | B2C | பழைய | 02 | மன்னார் |
| 07. | மோ.நிருபன் | 2AB | புதிய | 03 | யாழ் |
| 08. | ஜெ.அனுசியா | B2C | பழைய | 03 | முல்லை |
| 09. | சி.ஜீவனா | 3B | புதிய | 03 | கிளி |
| 10. | சு.சுரேந்திரன் | 2BC | பழைய | 03 | யாழ் |
| 11. | ம.பேபிகீர்த்திகா | BCS | பழைய | 04 | கிளி |
| 12. | என்.சனோஜன் | 2CS | புதிய | 05 | முல்லை |
| 13. | எ.கம்சிகா | BCS | பழைய | 05 | கிளி |
| 14. | ம.றிசானா | 3B | பழைய | 05 | திருகோண |
| 15. | ச.நிரூபிகா | 3B | புதிய | 06 | யாழ் |
| 16. | அ.சங்கீதா | A2C | புதிய | 07 | யாழ் |
| 17. | க.சரண் | B2C | புதிய | 09 | திருகோண |
| 18. | பா.விபூசணி | 2BC | புதிய | 10 | யாழ் |
| 19. | சி.கீர்த்தனா | A2C | பழைய | 10 | யாழ் |
| 20. | என்.எம்.பயூஸ் | B2C | பழைய | 12 | திருகோண |
| 21. | வி.சுதர்சிகா | 2BC | புதிய | 16 | யாழ் |
| 22. | எஸ்.சங்கவி | 3C | புதிய | 17 | யாழ் |
| 23. | ஜெ.எம்.ஹஸ்னி | 2CS | பழைய | 18 | திருகோண |
| 24. | யோன் பிளமிங் | 2CS | பழைய | 19 | யாழ் |
| 25. | துதிசன் | BSC | பழைய | 20 | யாழ் |
| 26. | கி.கிருத்திகா | B2C | புதிய | 22 | யாழ் |
| 27. | வி.கீர்த்தனா | 3C | புதிய | 23 | யாழ் |
| 28. | ப.கனிமொழி | 3C | புதிய | 25 | யாழ் |

A/L 2022, 2020 DAY
04.01.2020

A/L 2022
கணக்கீடு
MR.BALAKAJEN
B.Com (Jaf), H.N.Dip-in-ACC (ATI)
Dip-in-Edu(ousl), M.Com (Hons) Acc.spl
KBK Accounting Centre

| கந்தர்மடம் | கொழும்புத்துறை |
| --- | --- |
| Tue / Thu 5 - 6 pm | Sat / Sun 4 - 5 pm |
| 02.01.2020 Thu 5.pm | 04.01.2020 Sat 4pm |

076 565 5956 (CS/30275)(11,17)
A/L 2019 பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் Accounting A - 48, B - 38

BARATHY
சித்தன்கேணி
எமது நிறுவனத்தில் கற்று இப்பிரதேசத்தில் கலை வர்த்தகத்துறையில் அதியுயர் பெறுபேறுகளைப் பெற்று முன்னிலையில் நிற்கின்ற மாணவர்களினைப் பாராட்டிக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். இதுபோல் நீங்களும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிட ஆரம்பமாகின்றது.

A/L Day Class
கலை, வர்த்தகம்
நாளை ஆரம்பம் 01.01.2020
3.00 Pm

A/L 2022
ஜனவரி 05
உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
077 376 3511

தேவை
அலுவலக பணியாளர் யாழ் நகரை வசிப்பிடமாகக் கொண்டவர் உடனடியாகத் தேவை.
சுயவிபரக் கோவையை கீழ்உள்ள E-mail இற்கு அனுப்பவும்.
தொடர்பு : info@srilankaclick.com
077 848 8800




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.12.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.